திருக்கண்ட சித்திரம் : 3/0

LC
N15
118438

உ

பரமபதிதுணை.

# பிரமமுனி

திருவாய்மலர்ந்தருளிய

# கருக்கடைச்சூத்திரம் ௩௦௦-ம்.

சுத்தப் பதிப்பு.

6 - APR 1916
MADRAS.

இஃது

மதுரைப் புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

## குருசாமிக்கோனார்

அவர்களாற்றமது

—

மதுரை, வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திரவிலாசம் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1915.

இதன் விலை அணா 8.

**************************
முறை ...
செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட
மே மாதம் 1983 வருடம்
செப்பனிட்டு முடித்த
மே மாதம் 1983 வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.
**************************

11824

உ

கடவுள் துணை.

# பிரமமுனி

திருவாய்மலர்ந்தருளிய

# கருக்கடைச் சூத்திரம் நூறு.

## காப்பு.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

சீரு ளான சோதி மெய்ய யான சோதி
ஆரணி கொன்றை சூடி யாரணிந் தவனைப் போற்றி
வாரணி ரிஷிகள் பாதம் வணங்கியே வயித்ய நூலைக்
காரண மாகப் பாடக் கணபதி காப்புத் தானே.

தானென வயித்தியத்தி லிருபத்து நூறு
சாற்றினே னதைக்குறுக்கிப் பத்துநூறு
தேனென விதைக்குறுக்கி முந்நூற் றுடதாய்த்
திரட்டியே கருவெல்லாந் திறந்துசொன்னேன்
வாறென கருவையெல்லாம் வெளியாச் சொன்னேன்
வாதமொடு செயநீரும் வகையாய்ச் சொன்னேன்
பாரென மானிடர்கள் பிழைக்க வேண்டிப்
பரிபாஷை யில்லாமல் பாடினேனே. (1)

பாடியதோ ரென்னூலைப் பதுவனன் பேரும்
பார்த்திட்டு மனமகிழ்ந்தார் சித்த ரெல்லாம்
பாடியதோர் வாதமொடு வயித்யம் நன்றாய்ப்
பாடினேன் கருக்குருவும் வெளியாச் சொல்லி
தேடியே சித்தரெல்லா மெச்சிக் கொண்டு
செப்பினார் பிரமரிஷி ஆகை யாலே
கூடியதோர் கருவெல்லாம் வெளியதாக
உரைத்திட்டா ரென்றுசித்த ரொளித்திட்டாரே. (2)

ஒளித்திட்ட சாத்திரத்தை வாங்கியாலும்
உலகிலுள்ளோர் மயங்காமல் வெளிப்போட்டேன்
அளித்திட்ட அழும்பருக்கு இந்நூலீயார்
ஆகாத சீஷருக்கு மிந்நூலீயார்
களித்திட்டு மனதிலே கசடில்லாமல்
கபடற்ற சீஷருக்குக் கைமுறையாக்காட்டு
பளித்திட்டுப் பேசாமல் சாத்திரத்தைப்பார்த்துப்
பதறாதே கைமுறைசெய் முறையும் பாரே. (3)

முறையோடே பார்த்தாக்கா லெல்லாஞ்சித்தி
முறைதப்பிச் செய்திடிலோ மோசம்மோசம்
முறையோடே செய்வதற்கு என்நூல்பாரு
மொழிந்திட்டேன் மருந்தொன்றிற் பலகோடி
முறையோடே வேதியங்கள் தயிலங்கற்கம்
மெழுகோடு களங்குமாத் திராசெந்தூரம்
திறையான நவலோக பாஷாணங்கள்
நீற்றினமும் உருக்கினமும் நிறைந்திட்டேனே. (4)

நிறைந்திட்டார் தெட்சணா மூர்த்திபாடல்
நிகரில்லா வயித்தியத்தி லிரண்டிலட்சம்
உறைந்திட்டார் செந்தூர மூந்நூறுசொன்னார்
உத்தமனே வாகடமுதல் வயித்தியந்தோறும்
அறைந்திட்டார் வயித்தியத்தி லாறுநூறு
அப்பனே வெளிதிறந்து சொல்லிவிட்டார்
கறைந்திட்ட வயித்தியத்துக் கெந்நூலாதி
கண்ணாடி முகம்பார்த்தாற் போலேகாணே. (5)

காணப்பா நோயாளி தாதுமார்க்கம்
கண்பார்த்து முகம்பார்த்து கையைப்பாரு
தோணப்பா தத்துவநூ லாய்ந்துபாரு
சொல்லுடம்பி லெழுபத்தீ ராயிரம்பு
ஊணப்பா நரம்பெல்லாம் நாடியோடும்
உத்தமனே யுயிர்நிலையை யுன்னிப்பாரு
தேனென்ற வால்மீகர் நாடிசூத்திரம்
தெளிவாக வெழுபத்தி ரண்டும்பாரே. (6)



பாரேநீ மூந்நூலதா றுயிர்த்தில்
பாடினேன் பகர்க்கும் நாடிதோண
பாரேநீ கொங்கணர்தந் தனநூல்பாரு
பாங்கான சட்டைமுனி நூலும்பாரு
பாரேநீ திருமூலர் நூலும்பாரு
பார்த்திட்டால் பலநூலு மறிவேகோயும்
ஆரேநீ நாமென்ற ஆணவத்தைநீக்கி
ஆங்காரக் கோபத்தை அடித்துத்தள்ளே. (7)

தள்ளுவது பொய்கொலைகள் ளவுகாமம்
சண்டாளங் குருத்ரோகம் சேர்ந்துதள்ளு
விள்ளாதே வெகுளிவிட்டு யோகம்பாரு
வேதாந்த சற்குருவை நித்தம்பூசி
தள்ளாதே வயித்தியந்தான் தர்மவித்தை
சார்வாக ளவர்க்கருவை யொளித்தார்சித்தர்
துள்ளாதே வாதமென்ன வயித்தியமென்ன
சொல்லாத முப்பூவின் குருவிதாமே. (8)

குருவென்ன உவர்ச்சாரம் உவர்ப்புவென்றும்
கூறினார் பூநீறு முப்பூவென்றுங்
கருவென்ன ஆகாசப் பரிதிவென்றும்
சந்திரனே டிந்துவென்றுஞ் சாற்றினார்கள்
பருவமென்ன மார்கழியுந் தையுமாகி
பனிபெய்யுங் காலமப்பா பருவமாகிப்
பொருவென்ன பூமியிட காதமாகிப்
பூப்போலே வளர்ந்ததும் பூநீறுக்கே. (9)

பூவான பூநீறின் மகிமைதன்னைப்
புகழுடனே கண்டவர்க்கு எல்லாஞ்சித்தி
பூவான வூதத்துக் கதிராக்க
புகலுகிறேன் மின்னேக்கல் பிரமசற்பம்
ஆவென்ன பாறையுப்பு மூன்றுஞ்சேரில்
அரகார முப்பூவா மறிந்துபாரு
தேவென்ன சவுக்கார வழலையென்று
செப்பினார் கருமறைவாச் சித்தர்தானே. (10)

தானென்ற முப்பூவின் முறைதனைக்கேளு
சாற்றினேன் கும்பமுனி பூரணத்தில்
வேனென்ற பூநீறு வெள்ளைக்கல்லுப்பும்
விளைவிட்டமுங் கத்திமுறை விளம்பினேன்பார்
காணென்ற பங்குனி மாதம்பார்த்தால்
காற்றில்லாக் கதிர்போலே வளர்ந்திருக்கும்
பானென்ற மண்பட்டா தெடுத்துவைத்து
படிகாலு அளந்ததொரு பாண்டத்திட்டே. (11)

இட்டுமே கல்லுப்புப் படிதான்ரெண்டு
இதமான கற்சுண்ணம் படிதான்ரெண்டு
இட்டுமே அமரிபடி யெட்டுவாரு
இயல்பான கல்லெண்ணெய்ப் படியரையேவாரு
அட்டுமே கலக்கியதைத் தெளிவிறுத்து
அடுப்பேற்றி யெரித்துநீ யுப்பாக்காய்ச்சிப்
பட்டுமே யிப்படியே பத்துமுறைகாய்ச்ச
பாங்கான சவுக்காரக் குருவிதாமே. (12)

குருவான சவுக்கார வுண்டைசெய்யக்
கூறுகிறேன் எருமுட்டைச் சாம்பல்மேலே
மெருவான மெல்லிய சீலைபோட்டு
விட்டதின்மேல் சவுக்காரக் குழம்புதன்னைக்
கருவாக வுண்டைசெய்து எண்ணெய்கக்கக்
கைமுறையைச் சொல்லுகிறேன் ஒருபாண்டத்தில்
அருவாக கெல்லதனைப் பிசறிவைத்து
அதின்மேலே மல்[illegible]யிலை பரப்பிவையே. (13)

வைத்துத்தான் மேலுமந்த விலைபரப்பி
மறுபடிமேல் கெல்லிட்டுச் சட்டிமூடி
அத்துமே அடுப்பேற்றி யெரித்துநன்று
யாவிகண்ட பதத்திலே யெடுத்துக்கொள்ளு
வைத்ததொரு சவுக்கார மெண்ணெய்வாங்க
மாட்டாமல் வாதிகெட்டார் வண்ணார்க்காச்சு
தைத்துமே யிப்படிக்கு முறையாய்ச்செய்யில்
சவுக்கார வழலையென்ற குருவிதாச்சே. (14)





குருவென்ன முப்பூவின் வழலையாச்சு
கூறிடுமேற் போக்கதிந்தால் வாதமாச்சு
திருவென்ன பிரமமொடு பூரணமென்று
சேருநீ யோலென்ற குமிப்பிச்சிப்பி
பருவமென்ன பச்சையா யெடுத்துநாறு
பனம்போலே தமரிட்டுச் சிப்பிக்கெல்லாம்
அருவென்ன சிப்பியெல்லாம் போட்டுப்போட்டு
அகண்டதொரு சட்டியிலே பரப்பிவையே. (15)

வைக்கவே பலபலெனத் தண்ணீராகும்
வளமான தண்ணீரி லதனித்தை
வைக்கவே சமனாகச் சேர்த்துக்கொண்டு
அதிற்போடு குருவண்டு உரமுருகும்
இக்கவே கருநாவி புனுகுபூரம்
அருபுள்ளி வண்டினமுட்டை காரசாரம்
செய்க்கவே வலைகைக்குப் புனவெடைதான்போட்டுத்
தெளிவிறுத்துச் சவுக்காரத் தண்ணீரூட்டே. (16)

ஊட்டியே சவுக்காரக் கல்வத்திட்டு
உத்தமனே தருசாம மாட்டிமைபோல்
வாட்டியே வில்லைதட்டி ரவியிற்காய்த்து
வளமாக அண்டோடு பொடித்துக்கிழ்மேல்
காட்டியே ஓட்டிவிட்டுச் சவுக்காரம்வைத்து
நலமாக மேலோடு கொண்டுமூடி
நீட்டியே சீலைசெய்து புடத்தைப்போடு
சிறப்பாக வெடுத்ததனைக் கல்வத்திட்டே. (17)

நீட்டியே முக்கீரா லாட்டிவில்லை
செய்துலர்த்தி ஓட்டிவிட்டுப் புடத்தைப்போடு
மாட்டியே எழுசீலை மண்ணுஞ்செய்து
வளமான ரவியில்வைத்துக் காய்த்தபின்பு
பூட்டியே யிப்படித்தான் ஐந்துதரமப்பா
புடமென்ன பத்தெருவில் போடுபோடு
ஆட்டியே கடுங்கார மெத்தக்கொள்ளு
அழகான முக்கீரு லரைத்திடுயே. (18)

அரைத்துமே வில்லைதட்டி ரவியிற்காய்ந்து
அருக்கன்னக் குகையிலிட்டு மேலேமூடி
நிரைத்துமே சன்னரும்புச் சீலைசெய்து
நிச்சயமாய்ப் பத்தெருவில் புடத்தைப்போட்டு
கரைத்துமே அருக்கன்னக் குகையிற்றுள்ளே
கடுங்காரச் சுண்ணமதில் பூசிப்போடு
அரைத்துமே யிப்படியே வழலைகட்டி
வைத்துமுறை புடம்போடச் சுண்ணமாச்சே. (19)

சுண்ணத்தால் பாஷாணம் அறுபத்தாறும்
சொல்லரிய லவணவகை யிருபத்தைந்தும்
சுண்ணத்தால் நவலோகம் நவரத்னங்கள்
சொல்லரிய உபரசங்கள் நூற்றிரண்டுபத்தும்
சுண்ணத்தால் சொன்னதொரு சரக்குவகையெல்லாம்
தொடுமுன்னே கட்டுமே யுருக்குமாகும்
மென்மெழுத்த சரக்கெல்லாம் சுண்ணமாகும்
மெழுகோடு செந்தூரம் களங்குமாமே. (20)

களங்கம்நவ லோகத்து வித்தனிலேயேறும்
சன்னிமைக்கு முன்னாக சுண்ணமாகும்
களங்கமென்ன சூதமது மணிபோலாகும்
கைக்குள்ளே வாதமது சித்தியாகும்
பலிக்கிசெய்யாய் முப்பூவின் சூட்சந்தன்னைப்
பாடினேன் சித்தரெல்லாம் மறைத்திட்டார்கள்
பழக்கமதைபோல் பேசினால் வருவதென்ன
பார்த்திட்டு மனம்வைத்தால் சித்தியாமே. (21)

ஆமப்பா மானிடர்க்கு அதித்தசோகம்
அறைகிறேன் வாதபித்த சிலேற்பனமுண்டு
சேமப்பா விதிவெடித்த மேகங்கேளு
நிலையாக வாதத்தில் நாலதாச்சு
தாமப்பா பித்தத்தா லாறதாச்சு
சண்டாளச் சயத்திலே பதினொன்றாச்சு
காமப்பால் வித்தையினு வெடித்தமேகம்
கலந்தப்பா இருபத்தொன்றதாச்சே. (22)



மேகராசாங்க லேகியம்.

ஆச்சென்ற மேகமிருபதற்றான்போக
அறைகிறேன் மேகராசாங்கந்தன்னை
மிச்சென்ற விதமல்லோ உலகுள்ளோர்க்கு
நிலையாக மற்றதெல்லாம் செயமாகாது
கார்ச்சென்ற மேகராசாங்கந்தன்னால்
கடிதான நோயெல்லாம் ஓடிப்போகச்
சூட்சமென்ன சூட்சத்தில் சூட்சமாகச்
சொல்லுகிறேன் மருந்துவகை சொல்கிறேனே. (23)

சொல்லுகிறேன் விலப்பரிய முத்தக்காசு
சுகமான இலவம்வேம்பு தண்ணீர்விட்டான்
நலமொரு விலாமிச்சம் வில்வவேரு
நன்னாரி குமரிவேர் அமுக்கராவேர்
நல்லிசிங்க பாலவரை உள்ளரத்தை
ஓரிலைத்தாமரைகாந்த வெட்டிவேரும்
அல்லிபொடி தாமரையின் வித்துங்கொட்டி
ஆலவிழுது சீர்ப்பூலா அருகம்வேரே. (24)

வேறான வலவாரை சிவதைசுக்கு
வெண்காக்கணம் வெரிவிக்கழி இற்காய்கெல்லி
பேரான காலவத்தி கரிசாலைகாணி
பிரமிவெண்சா மரையுந்து வாசதேரீடை
சீரான நூவகை கொண்டுவைத்து
சிறப்பாக வெயில்வைத்து பில்லாமல்தான்
வீராக இறுவைத்திச் சூரணஞ்செய்
வடிகட்டி வகைக்கிரண்டு பலந்தான்கட்டே. (25)

கட்டியே பறங்கிப்பட்டை பலந்தானெட்டு
கூர்பிரப்பன் கிழங்குமூம் பலந்தானிரண்டு
இட்டியே ஆவின்பால் சுத்திசெய்து
அதட்டியே யிடித்ததன்றாய் முன்மருந்திற்சேர்
மட்டியே அமிர்தசர்க் கரைவைக்கேளு
உத்தமமே பலமிரண்டு ஒக்கச்சேரு
தாட்டிகமாய் வித்துவகை சொலக்கேளு
தக்கரவித்து முன்னவித்து ஒருவகைவித்தே. (26)

வித்தான அகத்திவித்து அத்திவித்து
வெண்கடம்பு நீர்முள்ளி ஆவாரைவித்து
மத்தான பாவித்து பூனைக்காலி
மருளூமத்தை சடைக்கஞ்சா தேற்றான்வித்து
கத்தான மைக்கொன்றை சரக்கொன்றை அவுரி
நாயுருவி சிறுநெருஞ்சில் கருவேலவித்து
முத்தான பாதுனையும் மகிழம்வித்து
முன்னையொடு கோதும்பை யென்றுமுந்தே. (27)

உழுந்தான நெல்லிசெம்பை மூங்கில்வித்து
உத்தமனே கூவிளத்தின் பழம்பூவும்
குழுந்தான சூரிவித்து எரிகாலன்வித்து
கொமட்டிமா துளைகாரத் தெலுமிச்சம்வித்து
வெளிதான தென்னம்பூப் பாற்சுறண்டிப்பூவும்
நெய்கொட்டான் பூவாத்தி அல்லிவித்து
தழுதாழை முருங்கைப்பூ விளாப்பைப்பூவுந்
தாமரைவித் துவரையில வம்பிருக்குஞ்சேரே. (28)

சேர்க்கவே பிசின்வகையைச் சொல்லக்கேளு
திறமான முள்ளிலவு முருங்கைவேம்பு
சார்க்கவே விளாவோடு கருவேலத்தி
கருவாகை கொன்றைமரம் பிறிஞ்சொடக்க
ஏர்க்கவே புங்கம்பூ வேயக்காவின் தொழுக்கு
இதமான வகைக்குக்கா நூலிமேதாக்கிச்
சேர்க்கவே பிடித்தெல்லா மொன்றாய்ச்சேரு
திறமான கடைச்சரக்கைச் செப்பக்கேளே. (29)

கேளப்பா சாதிக்காய் சாதிப்பத்திரி
ஏராம்பேல மிலவங்கப் பட்டைப்பத்திரி
ஆளப்பா குங்குமப்பூ கோரோசனை கஸ்தூரி
அதிவிடையந் திப்பிலியுங் கோஷ்டமூலம்
வாளப்பா அரத்தைசுக்கு அக்கிராகாரம்
வால்மிளகு குரோசாணி சீரகநல்லோமம்
தேளப்பா சடாமாஞ்சி கூகைநீறும்
சிறுதேக்கு நாகப்பூ தாளிசபத்திரியே. (30)



திரியான காமப்பூ மகரப்பூவும்
செங்கழுநீர் வாலுழுவை கருவாப்பட்டை
கிரியான கண்டதிப்லி கஸ்தூரிப்பட்டை
சிறுபூறல் செவ்வியம் கொத்துமல்லி
பரிவாசி தக்கோலந் தகரமிந்து
பாங்கான ரேணுகமும் சாம்பிராணி
கரிதான கடுரோகணி கடுக்காய்தானி
கசகசா மஞ்சிட்டி சாரைப்பருப்பே. (31)

பருப்பான திரிபலைச முத்திராப்பழமும்
பகாரிய வலம்புரிக்காய் கர்க்கடகசிங்கி
கருப்பான சீரகமு நற்சீரகமும்
கார்போகி சண்பகப்பூ நெல்லிமுள்ளி
விருப்பாஞ்செஞ் சந்தனம்அகில் தேவதாரம்
வெட்பாலை வெளிப்பிசின் முந்திரிகைக்கொட்டை
மருப்பான குலவிந்தங் கஸ்தூரிமஞ்சள்
வகைவகைக்கு ஒருபலந்தான் வரிசைகேளே. (32)

வரிசையாஞ் சரக்கையின வகுப்புச்செய்து
வளமாக விடித்துநன்றாய்ச் சூரணஞ்செய்
கரிசையாய்ச் சீனிசெய் படிதானெட்டுக்
கமண்டலத்தி லாவின்பால் படிதானிரண்டு
பரிசையாய் அடுப்பேற்றிக் கொதிக்கும்போது
பால்வார்த்துப் பதமாய்ச்சூரணத்தைக்கொட்டு
அரிசை அடி பற்றாமல் கிண்டிவாரீ
அதிலபோட்டு முந்திரிகை பேரீச்சம்பழமே. (33)

பழமான வகைக்கிரண்டு பலந்தான்போடு
பாங்கான கொம்புத்தேன் ரண்டுபடிவாரு
வளமாகக் கிண்டியே யிறக்கிவைத்து
வாகான கணபதிமுன் வைத்துப்பூசி
அளவான லக்ஷமுரு செபித்திரு
அப்பிரக செந்தூர மிரண்டுபலம்போடு
கழுவாதே வயித்தியர்க்கு மனநோகாதே
நாவிலொன்று வயித்தியர்க் [illegible]கயீயே. (34)

சந்தவர்க்கு மனக்குளிர வெகுமானமிசைய
 இதமான லேகியதைக் கொன்றுகொள்ளு
ஐந்தமே யக்கிசக்தி மண்டலங்கொள்
 சாவான மேகமிரு பதாரெனக்கே
பார்க்கவரும் வாதபித்த சிலேற்பனமேபோம்
 பறந்தோடும் சயரோக மந்தாரகாசம்
ஓர்ந்தமே பதினெட்டுக் குட்டரோகம்
 ஓடுமே கிரந்தியரை யாப்புச்சூலை. (35)

சூலையென்ற குன்மவகை யெட்டுந்தீரும்
 தொலையாத வாய்வெல்லாந் தூரவோடும்
ஓலையென்ற கெசத்திற் படரும்வெள்ளை
 ஓடுமே உதிரவெட்டை சீரமேகப்புண்
பாலையென்ற பூசகருக்குச் செறியவேயேறும்
 பறந்தோடும் மலடிகட்டும் பிள்ளையுண்டாம்
காலையென்ற வாந்தனைக்கள் காந்தலிருந்
 கண்களுமே செவ்வரிப் பூப்போலாமே. (36)

ஆமென்ற லேகியத்தைச் செச்சபத்யம்
 அக்கினிசக்தி மாறுதே தொன்றுபாரு
பாமென்ற தேகமென்ன பசும்பொன்றாகும்
 பரிவான மன்மதன்போல் வடிவுகொண்டாகும்
தேமென்ற சக்கிலமும் கெத்துறும்
 தேனிலைய மொழியாருக்கு தேறச்சொன்னேன்
வாமென்ற வாத்தியமே மிகமறைவிட்டு
 மதிகெட்டு அலையாதே மகிழ்ந்தபாரே. (37)

முக்கூட்டுத் தயிலம்.

பார்க்கவே மேகார சாங்கம்கொண்டேன்
 பாடுகிறேன் முக்கூட்டுத் தயிலத்தன்னை
யேற்கவே நல்லெண்ணெய் படிதானெட்டு
 இயல்பான ஆவின்னெய் படிதானொன்று
சாற்கவே விளக்கெண்ணெய் படிதானொன்று
 கலந்திதான்றுப் பண்டத்தி லொத்துவிட்டு
ஆர்க்கவே ஆவின்பால் படிதானொன்று.
 அப்பனே [illegible]நீர் படிதானொன்றே. (38)



படியான சரிசாலை பொன்னாங்காணி
 பசலையொடு கற்றாழை பிரமிகந்தா
செடியான தழுதாழை சிறுகீரைநொச்சி
 சிறுபீளை வல்லாரை முசுமுசுக்கை
அடியான ஆதண்டை கற்பூரவல்லி
 கற்றாழை விழுதுமுடக் கொத்தான்சின்னி
கொடியான கொழுஞ்செடார் நாரத்தம்பழமும்
 கொமட்டிமா தனையோடே எலுமிச்சம்பழமே. (39)

பழமான மல்லிகைசெவ் வந்திபிச்சி
 பழம்பாசி வகைக்கிரண்டு படிதான்சாறு
தழும்பாதே தென்னம்பூ முருங்கையுடனிலுப்பைத்
 தனிப்பூவும் புங்கம்பூ செங்கழுநீரவுரி
கிழங்கல்வி கருடகிழங் காம்பல்நெய்தல்
 கிழங்கோடு கொட்டிமரு ளக்கிழங்கு
விளங்கவே கோவையிட கிழங்குஞ்சேர்த்து
 வெருகோடு நெல்லிக்காய்ப் பட்டையாமே. (40)

பட்டையொடு அருநெல்லி பூவந்திப்பழமும்
 பரிவாக வகைக்கிரண்டு படிதான்சாறு
கொட்டமிக் குருதோட்டி பாதிரிகன்னாரி
 குருக்கைவேர் பொன்முசுட்டை குமிழ்நீர்ப்பூலா
துட்டச்சிற் றாமுட்டி பேராமுட்டி
 தூதுவளை குமரிசிறு காஞ்சொறிதொடை
சட்டமுடன் நிலப்பனையும் தண்ணீர்விட்டான்
 சங்கோடு சாரணைவேர் சிவனார்வேம்பே; (41)

வேரான தழுதாழை நொச்சிவிழுதி
 வெள்ளெருக்கு காக்கட்டான் பீர்க்காய்நெல்லி
கூறான மருதோன்றி நாகவல்லி
 குமிழோடு புரசுமுன்னை கோவைத்தண்டு
பேரான புனல்முருங்கை முக்காவேளை
 புங்கோடு நாவலத்தி புளிசித்தி
கூறான கடலிறுந்தி வெட்டிவிலாமிச்ச
 குருவிஞ்ச அழிஞ்சிபூ வரதும்பை. (42)

பட்டையாங் கிழுகிழுப்பை உள்ளுலர்த்திப்
பங்கீரி னிணம்பூறல் கிருவைசவண்டி
வெட்டியே வகைக்குநாற் பலமேதுக்கு
விதமாக இடித்ததனைப் பாண்டத்திட்டு
விட்டுமே பதினறு மரக்கால்நீர்தான்
விட்டதனை யெட்டொன்று யெரித்துக்காய்ச்சி
இட்டதொரு கிஷாயத்தை யெண்ணெய்க்கேவாரு
இயம்புகிறேன் கற்கவகை யினிதாய்க்கேளே. (43)

இனிதான சாதிக்காய் சிராப்புபத்ரி
யேலமொடு இலவங்கம் அதிமதுரங்கோஷ்டம்
குனிதான பெருங்காயம் அரத்தைசுக்கு
குரோசாணி வால்மிளகு கொத்துமல்லி
வனிதகருஞ் சீரகம்கஸ் தூரிமஞ்சள்
வாலுழுவை சிறுநாகப் பூவோடிந்து
வனிதமாஞ் சதகுப்பை சிவாசிப்பட்டை
வற்றங்கி அகிலோடு தேவதாரம். (44)

தாரமாங் கார்போகி கடுக்காய்தான்றி
தாளிசபத் திரிமம் குளகித்தம்மஞ்சள்
ஆரமாம் கண்டதிப்லி அக்கிராகாரம்
அதிமதுரம் கிளியூறல் கருவாய்ப்பட்டை
சோரகற் சீரகங் கூகைநீறும்
குங்குமப்பூ வலம்புரிக்காய் விளங்கம்மரஞ்சி
சாரமாந் திப்பிலியும் திப்பிலிமூலம்
சந்தனமும் நெல்லிமுள்ளி சிறுதேக்காமே. (45)

தேக்கான சண்பகப்பூ கடுரோகணியும்
திரிபலையும் சமுத்திராப் பழமுங்கல்நார்
தேக்கான கச்சோல மாதுளங்காய்ப்பிஞ்சு
சென்னகரைப் பட்டையொடு செருஞ்சிக்காயும்
வாக்கான பெருந்தும்பை சித்திரமூலம்
வகைவகைக்கு ஒருபலந்தான் வரிசையாகத்
தாக்கான புங்கம்வேர் பாலாலரட்டித்
தவறாமல் லெண்ணெயிலே கரைத்திடாயே. (46)



கரைத்துமே அடுப்பேற்றிக் கணேசன்பூசை
கைமுறையாய்ச் செய்திட்டு எடுத்துவாகீ
நிரைத்துமே ஒருவிறகால் நெருப்பைமூட்டி
நிலையான பதமாகக் கிண்டிக்கிண்டி
முரைத்துமே யெண்ணெயுடன் பதத்தைப்பார்த்து
முருங்கைப்பூ ஒருபிடிதான் போட்டுக்கிண்டி
கரைத்துமே மயிர்க்கொழுந்து பிடிதான்போடு
கருகாமல் பச்சைநிறங் கண்டுகொள்ளே. (47)

கொள்ளவே இளகுபத மிதுதானென்று
குறிப்பான வடிகலசந் தன்னிற்கேறு
வெள்ளையே புனுகுகோ ரோசனைகஸ்தூரி
விதமாக ஒருவகைக்கு காற்களஞ்சுதனக்கு
வள்ளலே வடிகலசந் தன்னிற்போட்டு
வாகாக எண்ணெய்தனை வடித்துவாங்கு
கள்ளமா யடியிலே கசடில்லாமல்
கம்பிளியி லிட்டுநீ பிழிந்திடாயே. (48)

பிழிந்துநீ வேடுகட்டிப் பூசைபண்ணிப்
புதைத்துமே நிலக்குழியி லிட்டெடுத்து
கனிவமாய் நாலுநாள் வட்டமூழ்ந்து
நாலாயி ரத்துநா லூற்றுநாற்பத்தெட்டு
அழுந்துநோய் காள்வட்ட முழுகும்போது
ஆகாத நோயெல்லா மகன்றுபோகும்
குளிர்தண்ணீர் தள்ளியிரா வெந்நீர்மூழ்கு
குணமான பசும்பாலு சிக்காய்தேயே. (49)

தேயாத புளியோடு புகையிலைதள்
திறமாக மண்டலந்தான் முழுகும்போது
பாயாத தேகமது கஸ்தூரிவீசும்
பார்ப்பதற்குப் பசுந்தங்கம் போலேயாகும்
சேயேநீ வாயுவகை பதார்த்தந்தள்ளு
சிறப்பான மோர்தயிரும் புளியுந்தள்ளு
வாயேநீ வெயில்தனிலே நடையுமாகா
வழுத்துகிறேன் மற்றுநாள் ஞானமாமே. (50)

### மேகராஜாங்க எண்ணெய்.

ஆமென்ற மேகராசாங்கவெண்ணெய்
அறையுகிறேன் சர்வாங்க கோரந்திர
வமென்ற சிற்றாமணக் கெண்ணெய்படி நாறு
இதமான கருவிச் சாறுபடி ரெண்டு
பேமென்ற கழுதைலத்திச் சாறுபடி ரெண்டு
பேய்க்குமட்டி கரிசாலைச் சாறுபடி ரெண்டு
பேமென்ற பொன்னாவாரை வல்லாரைக்குருக்கு
பிரம்பொடு பொடுதலையும் அவுரிச்சாறு. (51)

சாறான செருப்படியின் ரெண்டுவகை கூட்டு
சடைச்சியொடு இனப்பூரல் காட்டுச்செம்பு
கூறான கனக்கொடிக்கொழிஞ்சியா வாரைக்கூட்
குளிமிட்டான் கட்டுவளி தேன்கொடிக்கு
ஆறான கவிழ்தும்பை ஆகாசநீர்முள்ளி
இலைவேலி முருக்கிலைச்சா றொடுமேகாவைக்குன்றி
வாறான வழுதலையும் வெள்ளறுகு காந்தை
வகைக்கிரண்டு படிசாறு சண்ணெயிலேவாரே. (52)

வார்த்துமே வெட்டிவகை மருந்துகேளு
வாலையொடு மருதகருங் குருந்துவன்னி
கார்த்துமே கருஞ்சூரை செங்கத்தாரி
கற்றாழை பூவரசு கருவேலின்று
கூற்றுமே குவளைபிரு பெரிசாலங்கொன்றை
குருந்தொட்டி நன்னாரி குமிழ்நீர்ப்பூலா
சாற்றுமே வட்டூரா பரகசங்கு
தழுதாழை கண்டங்கத்திரி தூதுவேளைநொச்சி. (53)

கொச்சிசிற் றுமுட்டி பேராமுட்டி
கோக்கரிய வாழிஞ்சு கரந்தைபுங்கு
மகிழ் தக்கரப்பான வெம்பாடம்பட்டை
மருதோணி நாகவல்லி மகிழம்பட்டை
இச்சியொடு முள்ளிலவு சங்கங்குப்பி
பெருக்கோடு மருக்காரை சின்னிபுன்னை
கச்சியே சருமுள்ளி செம்முள்ளி அத்தி
காஞ்சொறி கண்டிமுள்ளி பெருங்குறிஞ்சான்வேரே. (54)



வேரான சிறுநட்டை மலைகலக்கிவகை
வெண்காக்கை வேர்வீழி கிழக்காய்நெல்லி
பேரான சிவன்வேம்பு அமுக்காரவேர்
புனல்முருங்கை கைவேளை குப்பைமேனி
நேரான சனியுடைய சத்திச்சாரணையும்
நிலக்குமிழும் நிலவிளா நரிப்புடையின்பூரல்
வாரான பால்குறண்டி முக்காவேளை
வட்டக்கிலுகிலுப்பை வட்டத்துத்தியெண்ணே. (55)

அத்திவட்டத் திருப்பியொடு நிலக்கடம்பு அடாரி
அமிர்தாத்தி உள்ளுலத்தி பாதிரிகடம்பு
வெற்றிலை மாத்தாளை மருட்கிழங்கு
நெ[illegible]ருகோடு வெள்ளிலறு முக்காவேளை
சித்திர[illegible] விலிங்கோடு சிரத்திராயசுமும்
[illegible] பொன்முசுட்டை சிறுகாஞ்சொரி
முற்றிபே வில்பனையும் வில்வவேரும்
முளைகரளை விடத்தைவேர் உசிலம்பட்டை. (56)

உசிலோடு கொடிவல்லி சீந்திற்றண்டு
உகாயோடு இலவாகை தோவைத்தண்டு
இசையான பாவட்டை நாரத்தையிலுப்பை
இருவையா மாஞ்செவியும் ஊமத்தெருக்கஞ்செவியும்
அசையாத மந்தாரை மைக்கொன்னைகாசா
ஆற்றுதுறை ஆற்றரசு ஆயிலிப்பட்டை
நசியவே காவலத்தி முதலைப்பூண்டு
நாய்க்கொட்டான் புனலிகரு மத்தைவேம்பே. (57)

வெப்பான பெருமருந்து ஆற்றலரிஅரசு
வெல்துவளை சன்னசி முருங்கைமாதுளையும்
சோம்பாதே வகைவகைக்குப் பலந்தான்பத்துச்
சொல்லுவேன் புல்லுருவி வகையைக்கேளு
வேம்போடு அரசிலந்தை மாவிலுப்பை
வில்வமொடு விடத்தலைமா துளையாமெட்டுந்
சோம்பாதே புல்லுருவி வகைதானெட்டுஞ்
சொல்லியதோர் முன்மருந்திற் சொல்லக்கேளே. (58)

வேளப்பா இடித்ததனைப் பாண்டத்திட்டுக்
கெடியாக வெண்ணாணி சலந்தானவிட்டு
வேளப்பா எட்டொன்று மெரித்துக்காய்ச்சி
யிறுத்துமே யொழுக்கை யெண்ணெயிலேவாரு
ஆறுமே வெள்ளாட்டு நீர்படிதான்றெண்டு
ஆவினீர் படிரெண்டு அதிலேவாரு
ஆறுநீ கலக்கியதை ரவியில்வைத்து
அதிற்போட மருந்தவகை அறைகிறேனே. (59)

அறைகிறேன் சாதிக்காய் கிராம்புவலம்
அழகான இலவங்கம் அதிமதுரம்கோஷ்டம்
விரைகிறேன் கண்டத்திப் பேயின்மூலம்
வெண்காரம் வால்மிளகு ரோசனிஜெயாமம்
கரையாத பெருங்காயம் கடுக்காய்தானும்
கருஞ்சீரம் காரெள்ளு கஸ்தூரிமஞ்சள்
அரைகிறேன் ஆத்தைதசக்கு அக்ராகாரம்
அதிவிடயம் கடுகுரோகணிகடுகுத்திப்பிலி. (60)

உப்போடு சடாமாஞ்சி தாளிசபத்திரியும்
உத்தமமே கசகசா ஓமக்கருசா
செப்பாதே வலம்புரிக்காய் பறங்கிப்பட்டை
சென்னகறைப் பட்டையொடு கஸ்தூரிப்பட்டை
தப்பாதே வாலுழுவை சிறுநாகப்பூ
தக்கோலஞ் சிறுதேக்குத் தகரங்கல்நார்
அப்பாலே ஆவிரைவேர் வசம்புநீர்வெட்டி
அற்றத்த கோர்வாளம் சேங்கொட்டைகட்டே. (61)

கட்டியதோர் வசுவாசு ஆனைத்திப்பிலி
கொத்துமல்லி குங்குமப்பூச் சிரங்கச்சேவல்
ஆட்டியே பெவாச்சாரம் சத்திச்சாரம்
அபோனுகமும் நவாச்சாரம் சாரபேதி
கேட்டிநீ வகைவகைக்கு ஒருபலந்தான்றாக்கு
கெருடவிடை மிழங்கொடு செங்கழுநீர்க்கிழங்கு
காட்டுமே கார்த்திகையின் அப்பைக்கிழங்கு
காட்டுக்க ருணைபொடுகு சருணைக்கிழங்கே. (62)



கிழங்கான நறனையொடு கேவிக்கிழங்கு
கெடியான முருங்கைப்பூ வெருக்கம்பூவும்
தளங்காதே புங்கம்பூ வாசம்பூவும்
தாளியொடு முருங்கைப்பூ செம்முருக்கம்பூவும்
அளங்காதே செண்பகப்பூ சிற்றகத்திப்பூவும்
ஆவரையின் பஞ்சாங்கந் தேத்தான்கொட்டை
புழங்குமே கடைமருந்தோ டெல்லாமொக்கப்
புங்கம்பால் விட்டாட்டி யெண்ணெயிலேபோடே. (63)

போட்டுமே அடுப்பேற்றி யெரிநோப்பா
புகழான கணபதிக்குப் பூசைபண்ணு
நாட்டமே மெழுகுபதம் தன்னைப்பாரு
நயமான பதமறிந்து வடிக்கக்கேளு
ஆட்டுமே கஸ்தூரி வராகன்ரெண்டு
அழகுபச்சைக் கற்பூரம் வராகன்ரெண்டு
காட்டியே சுத்தித்த லிங்கமரைது
கல்லரச கற்பூரம் விராகனிலே. (64)

நாலான இவையெல்லாம் வடிகலத்திலிட்டு
நலமாக எண்ணெய்தனை வடித்திடாய்நீ
சேலோடு தயிலத்தைப் பதனம்பண்ணு
திறமான கடுகுதனை யெரித்திடாதே
பாலான பச்சையெண்ணெ யதிலேவிட்டுப்
பரிவாக உலரவைத்து மேலேபூசச்
சேலோடு காங்குஷ்ட மேல்ரோகமெல்லாம்
திருமடா அப்பிட்டுக் குளித்துப்போடே. (65)

குளிக்கவே வடித்தெடுத்த எண்ணெய்தன்னைக்
குடிக்கவே காலொன்றுக் கோர்கரண்டிவீதம்
களிக்கவே மூன்றுநாள் காதிகொள்ளு
கடுதான பத்தியந்தான் காக்கவேணும்
உளிக்கவே வழுதாளன் தண்ணீர்வார்த்து
உப்பதனை யொட்டாமல் வறுத்துக்கூட்டு
அளிக்கவே யிப்படிநீ கொள்ளும்போது
ஆகாத நோயெல்லா மகன்றுபோமே. (66)

போமென்ற மேகமொடு கிரந்தி அரையாப்புப்
பொல்லாத பதினெட்டுக் குட்டரோகம்
வாமென்ற குன்மமெட்டும் வாராதோடும்
வாயுவொடு சூலைமேகா தாமுந்தீரும்
தாமென்ற வாதபித்தஞ் சோர்ந்துபோகும்
சயரோக மேகமெங்கே தானோடும்
தேமென்ற வண்டுகடி செய்யான்பூரான்
தீராத விஷகடியும் போகும்பாரே. (67)

போகுமே விஷகடிகள் பட்டதெல்லாம்
பிளவையொடு காமாலை பாண்டுசோகை
போகுமே மேகத்தின் அழலையப்பா
பொல்லாத பித்தத்தின் தணலும்போகும்
ஏகுமே கெற்பத்தி லேழுவகைநோயும்
எண்மக்கா ளுதிரத்தின் திரட்சிபோகும்
போகுமே வயிற்றிலுள்ள மலக்கட்டெல்லாம்
புழுவான கிருமியொடு வாய்வுபோமே. (68)

வாயுவொடு மூலவகை பவுத்திரமுந்தீரும்
மகத்தான விப்புருதி கண்டமாலை
வாயுவொடு துடைவாழை பிளவைப்புற்று
மகத்தான கடிகரப்பான் மண்டைச்சூலை
வாயுவொடு விரைவாதம் அண்டவாதம்
வலிவாதம் மற்றுமுள்ள வாதமெல்லாம்
தேயுமே எண்ணெயுட பெயரைச்சொன்னால்
தேசத்தி லில்லாம லோடிப்போமே. (69)

பத்தியம்.

போமென்ற எண்ணெய்க்குப் பத்தியந்தான்கேளு
புகழான வெந்நீரும் சோறுமுண்ணு
வேமென்றே பேழாகாள் தலைநீர்வார்த்து
விதமான உப்பதனை வறுத்துக்கூட்டு
தேமென்ற இம்முறைதா னுஞ்சொல்லார்
செப்பார்கள் வயித்தியரே திறந்துபாரும்
வாமென்ற பிணியாளி நோய்தீரவேண்டி
வயித்தியனை வணங்கியுப சாரம்பண்ணே. (70)



பண்ணினால் செய்மருந்து பலிக்கும்பாரு
பரிவான நோயெல்லாம் பறந்துபோகும்
வெண்ணியே யிவனென்ன வயித்தியனென்று
வேசாரி வழியம்போற் செய்யச்சொன்னால்
மண்ணிலே வயித்தியர்க்கு பணமேகொடுத்தால்
மானிடர்க்கு நோய்தீரா மருந்தாகாது
தன்னிலே தானறிந்து வணங்கிச்செய்தால்
சண்டாள ரானாலும் தீரும்நோயே. (71)

செங்கொட்டை வல்லாதி லேகியம்.

நோய்தீரச் செங்கொட்டை வல்லாதிசொல்வேன்
நுணுக்கமாய்ச் செங்கொட்டை பலந்தான்பத்து
மேயவே சாணிப்பால் சுத்திசெய்து
மூக்குவெட்டி யின்னுமதில் முறையைக்கேளு
சாயவே கொடிவேலி பறங்கிப்பட்டை
சுக்கோடு அமுக்கரா சிவனார்வேம்பு
தூயவே மாவிலிங்கப் பட்டையோடு
உத்தமனே வகைக்கொரு பலந்தானென்னே. (72)

காணவே கருஞ்சீரம் கஸ்தூரிமஞ்சள்
இருப்பிலி கடுக்காய்வா லுழுவைகோஷ்டம்
சொன்னதொரு இவையெல்லா மிடித்துவேறு
சூரணமாய் வைத்திட்டுச் சொல்லக்கேளு
உன்னிமுன் சுத்திசெய்த செங்கொட்டைதன்னை
உரலிலிட்டுக் கொப்பரையின் தேங்காய்ரெண்டு
சொன்னவே யொன்றுமொரு படிதான்ரெண்டு
இடித்துமே அதின்பின்பு சூரணத்தைக்கொட்டே. (73)

கொட்டியே சேர்த்தொன்று பிடிக்கும்போது
குழம்பாகே பனைவெல்லம் அஞ்சுபலம்போடு
திட்டமாச கர்ப்பூரம் விராகனஞ்சு
சேர்த்திடித்து வல்லாதி செய்துகொண்டு
கட்டவே வல்லாதி அந்திசந்தி
காணொன்று வெருகடிதா னயந்துகொள்ளு
குட்டமாங் கிரந்தியொடு அரையாப்புச்சூலை
குன்மமொடு வயிற்றுவலி வாய்வுசூலை. (74)

சூலையோடு சூதகத்தின் வாய்வுதீரும்
சொற்பெரிய மேகமெல்லாம் சொல்லாதோடும்
வாலையாந் திரேகமது சித்தியாகும்
மண்டலந்தான் பத்தியமாய்க் கொண்டுவாநீ
காலையே பத்தியந்தான் சொல்லக்கேளு
கைப்போடு புளிபுகையும் பெண்ணுந்தள்ளு
பாலோடு மற்றதெல்லா மிச்சாபத்யம்
பாங்கான உப்பதனை வறுத்துக்கொள்ளே. (75)

சண்டமாருதக் குழம்பு.

கொள்ளவே வயித்தியத்துக் காயிட்டம்
கூறுகிறேன சண்டமாருதக்குழம்பு
அள்ளுகிறேன ரசமோடு சாதிலிங்கம்
அரிதாரம் மனோசிலையும் ரசகற்பூரம்
வெல்லுகிறேன் கருநாகி வெண்காரங்கவுரி
வெவ்வேறே வகைவகைக்கு விராகனிரண்டு
சொல்லுகிறேன் காந்தைச்சா றம்பழச்சாறுதல்
கருக்கிட்டுச் சுத்திசெய்து கல்வத்திட்டே. (76)

இட்டுமே சுத்திசெய்த வாளமப்பா
இந்திடைக்குப் பதினறு விராகன்போடு
கட்டுமே வால்மிளகு குரோசாணிஓமம்
கண்டதிப் பிலிஅரத்தை கடுக்காய்தான்றி
கட்டுமே கிராம்போடு கடுகுசுக்கு
கடுகுரோ கணிசாயங் கஸ்தூரிமஞ்சள்
அட்டுமே திப்பிலியும் திப்பிலிமூலம்
ஆனைத்திப் பிலிஓமம் நாகப்பூவே. (77)

பூவோடு இந்துப்பு விளங்கங்கோஷ்டம்
புகழான சாதிக்காய் வகைவகைக்கு
தேவோடு விராகனிடை நாலுகூட்டு
செப்பரிய மூன்மருக்கோ டொக்கச்சேரு
ஆவோடு மிளகரணை சிற்றரத்தை
அதிமதுர மாசக்காய் சீனக்காரம்
சேவோடு திருகுகள்ளிப் பாலும்வாரு
சிவதையொடு கொடிவேலிக் கியாழம்பாரே. (78)



அனுபானம்.

வார்த்துமே பன்னிரண்டு சாமமாட்டி
வழித்துமே பச்சிமிழி லடைத்துக்கொண்டு
ஆர்த்துமே சாத்துக்கு அரத்தைசுக்கு
அதிகமாய்ச் சொல்லியதோர் சாத்துக்கெல்லாம்
கோத்துமே விளைமதிக்கு சரக்குக்கூட்டிக்
குடிநீரி லிட்டிடவே சுரங்களோடு
ஆர்த்துமே குழம்பினிட வேகமென்ற
அப்பனே யனுபான மறிந்துகொள்ளே. (79)

கொள்ளவே பதின்மூன்று சன்னிதோஷம்
குலையவே அரத்தைசுக்குக் கிராம்புதிப்லி
மெள்ளவே பிருதிமா விலிங்கப்பட்டை
வேலிகாட் டாமணக்கு வெண்ணொச்சிவேர்
கொள்ளவே அரைத்ததனைச் சுரசம்பண்ணிக்
குழம்பிலே சன்னியொடு தோஷந்தீரும்
வள்ளவே பிருமிலென்ற வகைகட்கெல்லாம்
மட்டுக்கு கடுக்காயின் கியாழந்தானே. (80)

அரணை வாதமென்ற காண்பதுந்தீரும்
கழுநீரையு வெண்ணொச்சிச் சாற்றிலாட்டு
தோணி சயமேமூலம் இருமல்போகத்
தூதுவத்தி கண்டங்கனி ஆடாதோடை
தேனுடன் சிற்றரத்தை சுக்குஞ்சோதி
திப்பிலியுங் கடுக்காய்சேர்த் திடித்துவைத்துக்
கோணை துளசியிலே ஒருசேரப்போட்டுக்
குடிநீரால் கியாழமிட்டுக் குழம்புகூட்டே. (81)

கூட்டவே பித்தமொடு பாண்டுசோகை
கொடியதொரு காமாலை பிணிகட்கெல்லாம்
காட்டியே பழச்சாறும் வெள்ளாட்டுநீருங்
கரிசாலைச் சாறுமிடு மிளகுக்கூட்டி
மாட்டியே குழம்பிட்டுக் கொள்ளுகொள்ளு
மகோதரஞ் சுரமுமிரு வயிறுசோகை
காட்டியே விசையுள்ள மாந்தவீக்கம்
கனத்ததொரு பலநோயும் பிணியென்னே. (82)

பீலியாம் வகைக்கெல்லாம் சொல்லக்கேளு
பிலமான நீர்முள்ளிச் சாறதிலப்பா
கோலியே நவச்சாரங் கொஞ்சமிட்டுக்
குழம்பதனைக் கூட்டியே கொண்டுபோரு
போலியே குன்மமெட்டும் போகக்கேளு
பூவரசம் பட்டையொடு பேய்க்குமட்டிவேரும்
சேலவே சீரகமு மிளகோட்டலம்
சேர்த்துநீ குடிநீரில் குழம்பையூட்டே. (83)

குழம்பான பித்தவகை சொல்லக்கேளு
கொத்துமல்லி சீரகமு முடக்கொத்தான் குடிநீர்
குழம்பிடவே பித்தமெல்லா மோடிப்போகும்
கொடிதான இரத்தியலை யாப்புச்சூலை
சுளுக்கமா மேகவிப்பிரக் கரப்பனெல்லாம்
சாக்கைச்சா றதனிலிடக் காணுதோடும்
குழம்பான விளாவாத மண்டவாதம்
கூட்டியிரு வர்க்கம்பூச் சாறுகொடிச்சாறே. (84)

சாறென்ற வாயுவுக்கு வேளைக்கு
சாறுத்தா மணிகொச்சி விஷத்துக்கெல்லாம்
ஆறென்ற பதினெட்டுக் கப்பான்குஷ்டம்
அமுக்கரா சிவன்வேம்பு பறங்கிப்பட்டை
கோறென்ற நாள்பண்ணி அமுரிவிட்டுக்
குழைத்ததனிற் குழம்பிடவே குஷ்டமெங்கே
ஆறென்ற மேகவகை யிருபதுக்கும்
அப்பனே உன்னலாக்கிப் பட்டைச்சாறே. (85)

சாறான சுப்பநோய் கிருமிதீரச்
சாற்றுபா கற்சாறு பாலைச்சாற்றில்
காறான கரப்பனுக்குக் குமரிச்சாறு
கரிசாலைச் சாறுசுரக் கைச்சாறாகும்
வேறான வெளிகடிக்கு முருங்கைப்பட்டை
வேளையில வெள்ளுள்ளிச் சாற்றிலிட்டு
ஆறான விரியனுக்கு அழிஞ்சுவாகை
ஆரவத்துக் காடுதொடா மூலிகேளே. (86)



மூலியே வாதமொடு இளம்பிள்ளை வாதம்
முனையாம்பக் கைவாதம் பாரிசத்தின்வாயு
காலியே பிறவகைக்கெல்லாங் கருவாகைவேம்பு
கந்திகோ ரத்தயிலம் கோப்பிரண்டைச்சாறு
கோலியே சிறுப்பைமேற் புல்லுருவிச்சாறும்
கூட்டிகுழம் பிடவாதங் கொள்ளைபோகும்
நாலாமி ரத்துநா ளாறுநாற்பத்தெட்டும்
நாடாது பிரமமுனி குழம்பென்றெண்ணே, (87)

ஐயெண்ணெய்த் தயிலம்.

எண்ணியே வாதமெல்லா மோடிப்போக
இயம்புகிறேன் ஐயெண்ணெய்த் தயிலங்கேளு
எண்ணவே வெள்ளெண்ணெய் ஏரண்டத்தெண்ணெய்
இலுப்பெண்ணெய் புங்கெண்ணெய் வேப்பெண்ணையாக்
அண்ணியே வகைக்கிரண்டு படிகாண்செய்தாறும் [தாம்
அளக்குமுன்பு பாண்டத்தில் அப்பாகேளு
நண்ணியே தழுதாழை காட்டாமணக்கு
காயுருவி தகரைவேர் குப்பைமேனி (88)

மேனியா மரிக்கு வேம்புக்கு
வெண்ணொச்சி நாவலோ கண்டங்காலி
கூனியே முத்தக்கரு வாகைக்கு
கொடிவேலி நிலக்கடம்பு சடைச்சிரெண்டு
போனியே அவுரியொடு மருக்காரையெருக்கு
புனமுருங்கை பூமுருங்கை வேலிசாரணையும்
மானியே மருதோன்றி காட்டுச்செல்வி
மதவைமுத்தா மணியோடு நாக்கொட்டிதானே. (89)

கொட்டியே மிளகரணை திருகுகள்ளி
நுனியோடு அமுக்கரா பிரம்புகுன்றி
இட்டியே பேய்ப்பாலை அடம்புகிள்ளி
யிலுப்பைமேற் புல்லுருவி ஆவிலிப்பட்டை
வெட்டியே சொன்னதொரு மூலியெல்லாம்
வேரோடு தூரோடு சமூலங்கொண்டு
அட்டியே பண்ணாதே வெட்டிவந்து
அப்பனே வகைக்கிரண்டு பலந்தான்பத்தே. (90)

பத்தாக இவையெல்லா மிடித்துநன்றாய்ப்
பழம்பாண்டத் திட்டுநீ பாகங்கேளு
அத்தாகப் பதினாறு மரக்கால்தண்ணீர்
அளந்துவிட் டடுப்பேற்றி யெரிக்கக்கேளு
எத்தாலே நூர்விதான வெரியைமூட்டி
எட்டொன்றாய் வைத்தமட்டு மெரித்துக்காய்ச்சி
அத்தான வியாழமது படிதான்பத்து
அளந்துவிட்டு எண்ணெயிலே அரைக்கக்கேளே. (91)

அரைப்பதேறன் றிப்பிலியுந் திப்பிலிமூலம்
ஆர்த்திப் பிலிழமம் அரத்தைசுக்கு
குறையாத தாளிசையுங் கண்டந்திப்லி
குரோசாணி கருஞ்சீரங் கிராம்புமுக்குல்
நிரையாத சதகுப்பை வசம்புகல்கார்
சிறுதேக்கு பெருங்காயம் வெள்ளுள்ளியிஞ்சி
உரையான வெளிப்பிசினும் நாகப்பூவும்
உத்தமனே கோமாஞ்சி ஒக்கக்கேளே. (92)

கேளேநீ வகைவகைக்கு அரைப்பலமே நன்றேறும்
கொடியான வெள்ளாட்டு நீராலாட்டி
ஆளேநீ யெண்ணெயிலே கரைத்துவாரு
அப்பனே பீலியரைப் பலமேபோடு
கோளேநீ வாராதே அடுப்பிலேத்திக்
குறிப்பாக இன்னுமொரு குறுங்கேளு
நாளேநீ யார்தானே சொல்வாரப்பா
நந்திகே சரிச்சாறு நாலுபடிவாரே. (93)

வாரேநீ யடுப்பேற்றி யெரித்துக்காய்ச்சி
வளமான மெழுகுபதந் தன்னைப்பார்த்துக்
காரேநீ வடிகலசந் தன்னிற்கேளு
கஸ்தூரி விராகன்ரெண்டு சாதிலிங்கம்ரெண்டு
போரேநீ ஆகாசத் தூள்களுஞ்சரெண்டு
போட்டுமே எண்ணெய்தனை வடித்துவாங்கு
வேரேநீ அண்டத்தின் தயிலத்தோடு
வெள்ளுள்ளி முகமுட்டைத் தயிலந்தானே. (94)



தயிலமென்ன வகைக்குக்கால் படிதான்சொன்னேறும்
சாத்திரிய மென்றயிலந் தன்னில்வாரு
தயிலத்தை வேடுகட்டிப் பதனம்பண்ணு
சன்முகர்க்குங் கணபதிக்கும் பூசைபண்ணித்
தயிலமிந்த முறைப்படியே ஆர்தான்செய்வார்
சார்வான வாதிமகன் வைத்தியனேசெய்வான்
அயிலமாந் தயிலமிதன் பேருஞ்சொல்ல
ஆராலு முடியாது அறிந்துபாரே. (95)

அறிந்துபார் தயிலத்தைக் காசெடைதானுண்டு
அப்பனே மேலெல்லாம் பூசக்கேளு
செறிந்துவரும் சன்னியெங்கே தோஷமெங்கே
தீராத உட்குத்தப் புறவீச்செங்கே
அறிந்துவரும் வாதமெங்கே வாயுவெங்கே
அடிக்கடிதா னுலைந்து சன்னியெங்கே
பெருகிவரும் பக்கவாதம் பாரிசத்திவாதம்
இளம்பிள்ளை வாதமொடு அண்டவாதமென்னே. (96)

வாதமொடு காக்கைவலி முயல்வலிப்பு
வருணாதுவி குதிரைவலி குமரகண்டவலியும்
ஓதமொடு பாதபித்த மூகவாதசன்னி
உத்தமனே பித்தநோய் தந்தசன்னி
பேதமே கிறுகிறுப்பு மண்டைக்குத்தும்
பிடரிவலி பீனிசமும் பொல்லாநோயும்
பாதமே சொன்னதொரு நோய்களெல்லாம்
பறக்குமே தயிலத்தின் பேரைச்சொல்ல. (97)

சொல்லவே கைப்போடு புகைபரந்திடு
சொல்லிய நோய்தீர்க்கப் பத்தியங்கேளு
சொல்லவே புப்பதனை வறுத்துக்கூட்டு
சுகமான வழுதலங்காய் முருங்கைப்பிஞ்சு
வெல்லமே தூதுளங்காய் வற்றலாகும்
வெள்ளாட்டு வற்றலொடு பசும்பயறுமாகும்
பல்லிலே பத்தியந்தான் கண்டுதேறு
பாங்காக இன்னுமொன்று பாடினேனே. (98)

பாடுமே நேன் வில்வாதிக் குழம்புதன்னைப்
பகரிய கோவெல்லாம் பறந்துபோகும்
ஆடியதோர் வில்வமேவர் பலமுமைந்து
அதிவிடையம் பழந்தாரா பிரண்டுபத்து
பாடியே யிடித்துமொரு பாண்டத்திட்டுப்
பதக்குநீ ரளந்துவிட்டு அடுப்பிலேற்றி
வாடியே இறுத்ததனை மூன்றுபடியாக்கி
வற்றியபின் விருத்தமிலே சுருக்கரையைப்போடே. (99)

போடுவது வெல்லவெல்லஞ் சர்க்கரைதானைம்பதா
போட்டதனைப் பாகுவரும் பதத்திற்சேரு
தேடுவது திப்பிலியுந் திப்பிலிமூலம்
செவ்வியமு மிளகிஞ்சி சித்ரமூலம்
தேடுவது சீரகமும் ஏலமிலவங்கம்
சிறுநாகப் பூவோடு தாளிசபத்திரியும்
ஆடுவது அதிமதுரம் கூகைநீறு
மழுகான வாலுழுவை மாஞ்சிதானே. (100)

தானென்ற அதிவிடைய மதுரமிந்துப்பு
தாங்கண்டு கொன்றுரெண்டு பலந்தான்சேரும்
தானென்ற குங்குமப்பூ கிராம்புபத்ரி
சாதிக்காய் வகைவகைக்கு விராகன்ரெண்டு
போனென்ற இவையெல்லாம் இளவறுப்பாய்ச்செய்து
பொடித்தந்தக் கியாழத்திற் போட்டுக்கிண்டி
ஏனென்ற கஸ்தூரி விராகனபோடு
இறக்கிவைத்து நாளொன்றுக் கிருநேரங்கொள்ளே. (101)

கொள்ளுவது நேரமொரு புன்னைக்காயளவு
குன்மமொடு சந்நிவிக்கல் நெஞ்சுவலிதீரும்
கொள்ளவே அரோசிகமும் மூக்குநீர்ப்பாய்ச்சல்
குன்மெறிவு காமாலை கிராணிசூலம்
வள்ளலே இளைப்போடு இருமலாகின
வயிற்றுவலி பழக்குடைச்சல் இருமிசூலம்
தெள்ளியதோர் நோயெல்லா மோடிப்போகும்
தேகமது மண்டலத்தில் தீர்க்கமாமே. (102)



வல்லாதி யெண்ணெய்.

ஆமென்ற சுத்தவல் லாதியெண்ணெய்
அறைவேண்டிற் குழப்புச் சுறவைக்கொண்டு
பாமென்ற முப்பத்தி ரண்டுபலமிடித்துப்
பாண்டத்தி லிட்டிரு தூணிசலம்வாரு
ஏமென்ற குறுணிசல மாகக்காய்ச்சி
யிறுத்ததனில் ஆயவெண்ணெய் குறுணிவாரு
தாமென்ற சந்தனமும் மதுரங்கோஷ்டம்
சாதிக்காய் கிராம்பேலம் பட்டையத்ரி. (103)

பட்டையாம் அரத்தைசுக்கு அக்ராகாரம்
பாக்கான தாளிசபத் திரியுமஞ்சி
இட்டமாய்ப் பெருங்காயம் கடுரோகணியும்
இப்பிலியும் வாய்விளங்கம் கூகைநீறு
கோஷ்டமாம் வால்மிளகு குரோசாணியும்
குங்குமப்பூ கருஞ்சீர கம்கடுக்காய்தான்றி
இட்டமாஞ் செண்பகப்பூ கொத்துமல்லி
செவ்வியம்வா லுழுவைசிறு நாகப்பூவே. (104)

பூவோடு இவையெல்லாம் வகைவகைக்குப்
பொடிசெய்து நீபோட்டு நாற்கழஞ்சுவீதம்
பாலோடு பழச்சாறு படிதான்வாரு
பசுவின்பால் படிவார்த்து அடுப்பிலேற்று
சேலோடு கணபதிக்குப் பூசைபண்ணு
சிறப்பாக எரித்ததனை மெழுகுபதம்பார்த்துப்
பூவோடு வடிகலசந் தன்னிற்சேரு
புழுதிகோ ரோசனைகஸ் தூரிபோடே. (105)

போட்டிடுவாய் வகைவகைக்குக் களஞ்சவீதம்
போட்டுநீ யெண்ணெய்தனைப் பதனம்பண்ணு
நாட்டிவா புள்ளோகர் சடைதான்கொண்டு
நாசியிலுந் துளிகுத்து மேலும்பூசு
இட்டுவாய் முகவாதம் மண்டைச்சூலை
தீர்ந்துபோம் பித்தமொடு சீலகாசம்
ஒட்டுமே பீனிசமும் வாய்வுசூலை
யுடம்பிலுள்ள நோயெல்லா மோடுந்தானே (106)

ஓடுமே சிரசிலுள்ள நோய்களெல்லாம்
உத்தமனே பேய்க்காய் பசும்பயறுமிளகு
பாடுமே பத்தியந்தான் கைப்புபுளிப்பாகா
பாங்கான மறுபத்ய மெல்லாங்கூட்டு
ஓடுமே ஒருத்தலைநோய் மண்டைச்சூலை
உத்தமனே காசிபீடம் கண்ணசூலை
நாடுமோ நமன்வாத மூகவாதம்சன்னி
நலமான பத்தியந்தான் நன்றாய்ப்பாரே. (107)

மகாமேககிருதம்.

பாரப்பா சிவாங்க நோய்கட்கெல்லாம்
பாடுகிறேன் மகாமேகக் கிருதத்தானும்
காரப்பா பேய்க்குமட்டி வேர்பலந்தான்பத்து
கடுக்காய்த்தோல் நெல்லிவேர் தான்றிவேரும்
வேரப்பா சிற்றமல்லி பேராமல்லி
வில்வவேர் வெட்டிவேர் விலாமிச்சம்வேரும்
போரப்பா நாதனையும் மாதுளைகாஞ்சோரி
பொன்முசுட்டை கன்னூரி நெய்தலென்னே. (108)

நெய்தலொடு செங்கழுநீர் தாமரையுமல்லி
நிலப்பனையும் நிலவாகை கண்டங்கத்ரி
பெய்யிலைகள் வகைக்காறு பலந்தான்போடு
பேய்த்துமட்டி வேரோடு போட்டிடித்து
எய்துமே பாண்டத்தி லிட்டுக்கேளு
இருதூணி சலம்விட்டு எட்டொன்றாக்கி
அய்துமே பெர்மமது படிதானுறு
அரைத்துவிடு ஆவினெய் படிதானுலே. (109)

காலோடு சாதிக்காய் சிராம்புபத்ரி
கற்சிர கச்சோல மிலவங்கப்பட்டை
சாலோடு மஞ்சிட்டி சாத்ரபேதி
சதகுப்பை வாய்விளங்கம் தாளிசபத்திரியும்
சேலான தேவதாரம் நல்லசந்தனமும்
சிறுநாகப் பூவோடு மதுரம்கோஷ்டம்
காலோடு மிளகுமூலை சிங்கிதேக்கு
கருஞ்சீரங் கஸ்தூரி மஞ்சளாமே. (110)



மஞ்சளாந் திப்பிலியுந் திப்பிலிமூலம்
மாஞ்சியொடு கடுகுரோகணி நெரிஞ்சிக்காயும்
கொஞ்சியே கொத்துமல்லி கோரைக்கிழங்கு
குரோசானி வாலமிளகு கடுக்காய்நெல்லி
மிஞ்சாதே குங்குமப்பூ மாதுளையின்பிஞ்சும்
விளங்கவே வகைக்குநாற் கழஞ்சுகூட்டு
அஞ்சாதே ஆவின்பால் காறுபடிசொன்னேன்
அரைத்துமே கரைத்துமுன் னெய்யில்வாரே. (111)

வாரேநீ செவ்விளநீர் படிதான்ரெண்டு
வல்லாரைச் சாறுபடி ரெண்டுவாரு
சேரேநீ படிச்சாறு படிதான்ரெண்டு
சீனிசர்க் கரையதுவும் பலந்தானாறு
காரேநீ கல்லவெல்லம் பலந்தானாறு
கரைத்துமே அடுப்பேற்றி யெரித்துக்காய்ச்சி
வாரேநீ மெழுகுபதந் தன்னைப்பார்த்து
வடித்திடவே வடிகலசந் தன்னிற்சேர். (112)

தன்னிலே சீனக்கோ ரோசனையுங்கூட்டி
சார்வாக வடித்தப்பின் சாற்றக்கேளு
நின்னயமாய்க் கணபதியுங் கந்தன்பூசை
நிறைவாகச் செய்திடவே நெற்புடத்தில்
முன்னுதாய் முப்பதுநாள் வைத்தெடுத்து
முறையோடே முக்கழஞ்சு நெய்தான்கொள்ளு
சொன்னதொரு நாளென்றுக் கிருநேரங்கொள்ளு
தொலையாத வியாதியெல்லாம் தொலைந்துபோமே. (113)

தொலைந்தோடும் சயமீளை காசபித்தம்
சொல்லரிய தலைகடுக்கல் சொன்மாரூட்டம்
மூலத்தோடும் உஷ்ணமொடு பிரமிமேகம்
மூத்திரக் கிரிச்சிரமொடு கல்லடைப்பு
அலைத்தோடும் பெரும்பாடு ரத்தச்சாய்ப்பு
அனலோடு மேலெரிவு உஷ்ணங்காந்தி
மலைத்தேபம் முசல்வலிப்பு இருமலீளை
வாயுவொடு நீர்க்கடுப்பு வெட்டைபோமே. (114)

போமென்ற பவளபற்பம் போட்டிக்கொண்டு
பொல்லாத நோயெல்லாம் பொடியாய்ப்போகும்
தேமென்ற கெர்ப்பத்தி லெழுந்தநோயுந்
தீர்த்துவிடும் மலடிக்குப் பிள்ளையுண்டாம்
காமென்ற பத்தியந்தான் சாந்தமாய்க்கொள்
கைப்போடு புளிப்புவிண்டுத் தள்ளிப்பாரு
காமென்ற கண்ணோயெ லெல்லாந்தீரும்
கைகண்ட வித்தையிது கண்டுபாரே. (115

எழுவகைப் பீனிசத்துக்கு.

பாரப்பா ஏழுவகைப்பீ னிசமும்போகப்
பாடுகிறேன் வெகுகருக்கோ டெண்ணெய்கேளு
காரப்பா கல்லெண்ணெய் படிதானொன்று
கரிசாலை அவுரிகஞ்சா பொன்னாங்காணி
வாரப்பா வெற்றிலைச்சாறு முசுமுசுக்கை
பீன்னுலர்த்தி முக்குறட்டை அத்திப்பட்டை
ஆரப்பா வகைவகைக்கு ஒருபடிதான்சாறு
ஆதண்டைச் சாறுபடி ரெண்டுமாமே. (116

வாரேநீ பழச்சாறு ஆவின்பாலும்
வாரேநீ படியொன்று இளநீச்சாறொன்று
காரேநீ கருஞ்சீரம் கடுகுரோகணியும்
கஸ்தூரி மஞ்சளொடு கடுக்காய்தான்றி
கூரேநீ அதிவிடையம் அரத்தைதனக்கு
கோஷ்டமுடன் சதகுப்பை குரோசாணிஓமம்
சேரேநீ நாகப்பூ தாளிசபத்திரியும்
திப்பிலியின் மூலமொடு சித்திரமூலம் (117

மூலமாம் பெருங்காயம் நெல்லிமுள்ளி
மூளகரணை அனிஞ்சிநொச்சி சிறுநெல்லி
பாலமாம் வகைக்குஒரு களஞ்சுவிதம்
பழச்சாற்று வாட்டியே யெண்ணெயிலேபோடு
ஆலமாம் அடுப்பேற்றி எரித்துக்காய்ச்சி
அப்பனே மெழுகுபத மறிந்துவடியும்
வலவே மூக்கிணைப்பூ ஒருபிடிதான்போடு
இதமாக வடித்திட்டுப் பூசைபண்ணே. (118



பண்ணுவது கணேசனொடு கந்தன்பூசை
பண்ணியே நாலுநாள் வட்டமூழ்கு
எண்ணுவது சீயக்காய் பயம்பருதேய்த்து
இளவெந்நீர் முழுகுமுன்னாள் பரிபாசமது
உண்ணுவது மதுரந்தான் கூட்டிக்கொண்டு
மைந்தனே இப்படிநீ முழுகும்போது
நண்ணுவது சிரசிலுள்ள நோய்களெல்லாம்
ஓடிவிடும் ஏழுவகைப்பீ னிசமும்போமே. (119)

போமேதான் தைலங்கள் முழுகும்போது
புளியோடு புகையிலையும் பெண்ணுமாகா
ஆமேநீ புளியோடு கைப்புமாகா
அப்பனே மற்றுகசெல்லாங்கூட்டு
ஆமே கைமுறைசெய் நூற்றையும்பார்த்து
இதமாகச் செய்திடுலோ வியாதிநீங்கும்
ஆகாதவழியிடம்பு செய்வானாகில்
அவனுக்கோர் மருந்தொன்றும் ஆகாதாமே. (120)

ஆக்கிராணம்.

பாரேநீ சிரசிலுள்ள நோய்கள்போகப்
பாடுகிறேன் ஆக்கிராணம் முப்பத்திரண்டும்
ஆரேநீ கண்டைவேர் சமுத்திராப்பழமும்
அரத்தைதனக்கு அக்கரா ரம்விடையமோமம்
கூரேநீ திப்பிலியும் திப்பிலிமூலம்
குரோசாணி வால்மிளகு சித்திரமூலம்
காரேநீ கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள்
கடுகுரோகணிகாயம் கண்டதிப்பிலியே. (121)

திப்பிலியுந் சாம்பிராணி போரத்தை
திரமான அழிஞ்சிவேர் வெப்பரிசிகடுகு
செப்பாதே எருக்கிலைமேல் சுணையுங்கூட்டி
திரமான வகைக்குவகை களஞ்சதாக்கு
கப்பரிய ஆதவளை கண்டங்காலி
கடுதான பீனசருமை வெள்ளைச்சாரணைவேர்
ஒப்பரிய பெருமருந்து புங்கம்பாலை
உயர்ந்தா மணியோடு கடலிராஞ்சிசெய்வண்ணே. (122)

என்னவே தைலமேனி குப்பைமேனி
இவைதனிலே வகைவகைக்குக் காலுசிடைவேர்கூட்டு
இன்னமே அத்திப்பால் வெள்ளாட்டுநீரும்
இட்டவித்தி யிடித்துத்தான் சீலைவடிகொண்டு
என்னவே வட்டியுட சிமிழ்தானொன்று
இனவிட்டால் பேய்க்கரையின் குழிக்கையிலேயடைத்து
பன்னவே பணவிடைதான் நாசிக்கேற்றப்
பரிவான கபாலரோகம் பறந்துபோமே. (123)

போமென்ற பொடியதனைக் கதிதாசிதன்னில்
புகட்டியே திரியாகத் திரித்துக்கொண்டு
நாமென்ற நிம்பெண்ணெய் கொளுத்தியேற்றி
நலமான புகைதன்னை நாசிக்கேற்ற
தமென்ற கபாலத்தில் சன்னிமண்டைக்குத்து
ஒருதலைநோய் நீர்ப்பாய்ச்சல் தும்மிக்கம்
காமென்ற கபாலத்தில் வாய்வுகுலை
காப்பதொருகண்ணோய் கண்படலத்தே. (124)

பற்றான ஏழுவகைப்பீ னிசமும்போகும்
பொல்லாத சலதோஷம் புகைநீர்ப்பாய்ச்சல்
சித்தான கபாலத்தில் விப்புருதிகுலை
காசமொடு புண்புரையும் காணநேர்ப்பம்
மற்றுமுள்ள தந்தநோய் செவிநோய் கண்ணோய்
மகத்தான சன்னிவகை தோஷம்போகும்
சித்தான சிரசுநோய் தொண்ணூற்றாறும்
தீருமென்று பிரமமுனி செப்பினேனே. (125)

செப்பியதோர் மானிடர்க்குச் சன்னிதோஷம்
சிறந்ததொரு பல்கிட்டி மூச்சடைக்காகில்
நப்பியே ஆக்ராணம் பணவிடையேகொண்டு
நவச்சாரம் பணவிடைதான் கற்சுண்ணாம்பொருசம்
நப்பியே மத்தித்து நாசிக்கேற்ற
நாடாது பல்விட்டு சன்னிதீரும்
ஒப்பியே இன்னுமொரு சேதிகேளு
உற்றதொரு சட்டத்திலே ஆறும்புண்ணே. (126)



புண்ணென்ன மேகத்தி லித்தரோகம்
புரையோடு ஆறாத புண்ணுக்கெல்லாம்
அன்னென்ன ஆக்ராணங் கருந்கூட்டி
அரிதாரஞ் சாதிலிங்கம் ரசகற்பூரம்
நன்னென்ன கொடிக்கள்ளிப் பட்டைத்தாளுங்
கழுதைலத்தி உலர்த்தித்தான் கலந்துகூட்டி
விண்ணென்ன வகைவகைக்குக் கஞ்சகூட்டி
விரசோடு இருக்கள்ளிப் பால்தான்விட்டே. (127)

புண்ணுறுதிப்புகை.

விட்டதனை அரைத்துலர்த்தி வைத்துக்கொண்டு
விதமான புங்குப்புளி தணல்கொண்டேற்றி
விட்டதின்மேல் தணலிலே பொடியைப்போட்டு
மேலேதான் கண்திரட்டு கொண்டுமூடி
விட்டதனை வாதியின்மேல் புகையைக்கொடு
வெடிகுஷ்ட மேகவெடி கிரந்தி அரையாப்பு
திட்டமுடன் பவுத்திரமும் அழுகண்ணிகுஷ்டம்
தீராத களிப்புண்கள் தீருமென்னே. (128)

தீருமென்ற பொடியதனை அம்மிப்பாலில்
சேர்த்துமே மத்தித்துச் சீலையிலேயூட்டி
ஆறுமென்று ஆறாப் புண்மேற்போட்டு
அழுகிவிழுங் கிரந்திப்பூ வாழைப்புண்ணும்
தீருமே குஷ்டமொடு ஆறாநோய்ப்புண்ணும்
தேகத்தி லெழுந்ததொரு நோய்களெல்லாம்
காணுமே கண்காணத் தோடிப்பா
கடிதான பத்தியந்தான் கண்டுகொள்ளே. (129)

கண்டுகொள்ளு மூன்றுநாள் புகைதான்காட்டு
கண்டிப்பாய் ஆறுநாள் பத்தியந்தான்பாரு
சென்றுதான் ஏழாநாள் தலைநீர்வாரு.
சிறப்பான உப்பதனை வறுத்துக்கூட்டு
முன்செய்த மறுபடியும் விளக்கெண்ணெய்தேய்த்து
முழுகியபின் மற்றதெல்லா முன்போல்த்தான்
சென்றுவரும் புகைமேக மென்னசொல்வேன்
தீராத நோயெல்லாந் தீரும்பாரே. (130)

விஷமுஷ்டித் தைலம்.

நீரமே விஷமுஷ்டித் தைலந்தேறு
  நீராத கரப்பனொடு அழுகண்ணியோடு
பாரமே செவ்வாட்டை மாவெட்டைசெய்பான்
  வண்டுகடி புளிச்சிலந்தி புடையானகுக்க
பேரான பிள்ளிவந்து சனிவேகமது
  பிரகமுதல் பூதமே நாசமாமே
மாறாத குஷ்டமொடு குறையேதீர
  மைந்தனே தயிலமொன்று வுருக்கக்கேளே. (131)

வழுக்கவே எட்டியே நமிஞ்சிசேர்த்து
  வன்னிபுரந்து வண்டுகொல்லி சக்கரகுப்பி
அளம்பமே அடம்புவின்னி ஆவிரம்பட்டை
  ஆவிரைவேர் வெள்ளெருக்கு மருக்காரையோடு
குளம்பமே சிவனார் பாருதிவேர்த்தான்
  குன்றிமணி அழுகாரை கருந்தகண்ணி
வளம்பமே சிவன்வேம்பு கழுதைநாரி
  மருதோன்றி அரளிசக கருங்காலிபூவே (132)

பூசான உன்மத்தி இருவேலைக
  புளிக்கடுக்கி கருநொச்சி கரந்தைதம்பு
விரசான கொடிவேலி அமுக்கராதேக்கு
  விடத்தலையின் பலாசு [illegible] குமரி
ஆமேரடு பூவரசு மருதுவேர்காணம்
  ஆதாளி கலங்கொட்டி செங்கத்தாரி
சரிகுவேன பெருமருந்து காட்டுள்ளியாரி
  சமமொன்றாக விவையெல்லாந் தரித்துவைத்தே. (133)

உலர்த்தியபின் பத்திலொரு குழிப்புடத்தில்தயிலம்
  படவாங்கி முருங்குறையன் பங்காக்கைகூறு
அலர்த்திய மைக்கூசை பாங்குதமராத்து
  ஆனைகழு தைமண்டை பச்சைசோத்திநாத்து
பலர்த்தியகக் கவலைபெரு விரியன்பாம்பு
  பன்றிவத்தி கழுதைகத்தி தலைமண்டையுடனே
முலர்த்தியை வத்திபரிக் கொம்பேருமைக்கொம்பு
  முசற்புழுக்கை வவ்வாலோ டெலிப்புழுக்கையென்னே.



என்னவே ஒட்டைவத்தி வெள்ளாட்டுப்புழுக்கை
  யிவையெல்லாஞ் சமன்கொண்டே யிடித்துலர்த்தித்
தன்னவே சிவசேர்த்து வகைகளெல்லாஞ்
  சமூலமு மிடித்துலர்த்தி பொக்கச்சேர்த்துப்
பன்னவே பெரும்பாண்டத் திட்டுமூடிப்
  பகறுகே குழிவெட்டி அடிக்கலசம்வைத்துத்
தன்னவே குழிப்புடத்தில் தயிலம்வாங்கிச்
  சமனாக மூன்றுதயிலத் தொக்கச்சேரே. (135)

சேருமே யெள்ளெண்ணெய்த் தயிலமொன்றாய்ச்
  செக்கொட்டைத் தயிலமரைப் படியேயாறு
காருகருங் குங்கிலியங் கழஞ்சியெட்டு
  கழறுகிறேன் இவையுடனே மைந்தாகேளு
ஆருதி கரியசீ ரகந்தானெட்டு
  அழகான தேவதாரங் கஸ்தூரிமஞ்சள்
சேராக கற்பூரங் கழஞ்சியெட்டு
  செண்பகமரப் பட்டைபொரு பலந்தானென்னே. (136)

பலமான பறங்கிப்பட் டைபலந்தான்ரெண்டு
  பாங்கான கஸ்தூரிப் பட்டைபலம்ரெண்டு
பிலமான பிரம்போடு சிறுசந்துபலம்ரெண்டு
  பேறான வலம்புரிக்காய் வாலுழுவைக்காய்
அலையாதே வகைவகைக்குப் பலந்தானொன்று
  ஆட்டுவாய் கொடிக்கள்ளிச் சாறெரிப்பட்டை
மலையாதே விட்டொரைத்துத் தயிலத்திலவாறு
  மகத்தான ரோகமெல்லாம் மாண்டுபோமே. (137)

0

மாண்டுபோம் பூதம்பிசாசவேதாளம்
  மருண்டோடும் வஞ்சனையும் பில்லிசூன்யம்
மாண்டுபோஞ் சொரிசொறி சிரங்குகுஷ்டம்
  மாறாத அழுகண்ணி வாதஞ்சன்னி
மாண்டுபோம் இவையெல்லாந் தயிலம்பூசி
  மயிலெண்ணெய் வேப்பெண்ணெய் சேர்த்துக்கொள்ளு
மாண்டுபோஞ் சருவாங்கம் தவழ்லேபோடு
  மற்றுமான் வேதுகிட்டுக் குளித்துப்போடே. (138)

குளிக்கவே தழுதாழை கரந்தைசெர்ச்சி
குன்றிமணி சங்கங்குப் பியும்வாதமடக்கி
களிக்கவே நோயறிந்து வேதுகூட்டு
கைப்போடு புளிபுகையுந் தள்ளிப்பாரு
விழிக்கவே உப்பதனை வறுத்துக்கட்டு
வெள்ளாடு முயலுடும்பு அயிரைவிராலகும்
அழிக்கவே வழுதலங்காய் முருங்கைப்பிஞ்சு
அரைக்கீரை பசும்பயறு அறிந்துகூட்டே. (139)

கொம்மட்டிக்காய்ப்பதங்கம்.

கூறவே கொம்மட்டிக் காய்ப்பதங்கஞ்சொல்வேன்
கூறியதோர் வாதமெனும் பதுதான்போகக்
கூறவே தழுதாழை ஆவிசிப்பட்டை
கொடிவேலி பாவட்டை அழுக்கராவேர்
முறிபடவே வெண்காரனை சத்திச்சாரனை
முடக்கொத்தான் பெருவாகை தூதுவேளைசடைச்சி
தேறியே தைவேளை குப்பைமேனி
சிவன்வேம்பு பிரப்பினிட கிழங்கொன்றாமே. (140)

நன்றான இவைவெல்லாஞ் சூரணமேசெய்து
உத்தமனே கண்டத்திப் பிலிகிராம்போமம்
இன்றான வால்மிளகு தாளிசபத்திரியும்
திப்பிலியும் வாலுழுவை திப்பிலியின்மூலம்
தென்றாக் ரகாரம் வாலுழுவைகஞ்சா
இலம்சு லவங்கப்பூ சாதிக்காயே
அன்றனே தருப்பை பறங்கிப்பட்டை
அவராத்தகைக்கு அதிமதுரம் சிறுநாகப்பூவே. (141)

பூவான கருஞ்சீரம் வலைக்குறாக்கழுஞ்சு
பொடித்துநீ மூன்மருந்தோ டொக்கச்சேரு
தேவோடு கல்வத்தி விட்டுச்சேரு
திருகுகள்ளிப் பாலோடு உத்தாமணிச்சாறும்
பாவோடு வார்த்ததனை அரைத்துலர்த்திப்
பக்குவமாய்ப் பேய்க்குமட்டிக் காய்தான்சேரு
கோவோடு வெண்டியது கொண்டுவந்து
குடைந்துள்ளே சதைபோடு விதையும்போக்கே. 142)



போக்கியே மருந்தெல்லாம் காயினுள்ளே
புகட்டியந்த வோட்டாலே மேலேமூடிச்
மேக்கியே பாண்டத்தி விட்டுநீயும்
மேல்மூடிச் சீலைசெய்து குழிதான்வெட்டி
கேட்கவே வெள்ளாட்டிப் புழுக்கைமைந்தா
கீழ்மேலு மிட்டுநடுப் பாண்டம்வைத்துப்
பாக்கியே புடம்போட்டு ஆறவிட்டுப்பாரு
பருவமாங் காயெல்லாஞ் சிவந்துகாணும். (143)

காணுவது கருகாம லிப்பால்வாங்கிக்
காயெல்லா மாறவிட்டு மருந்தைக்கொட்டிப்
பேணியே குங்குமப்பூ சாதிக்காயும்
பெய்துநீ பொடிசெய்து வைத்துக்கொண்டு
ஆறுவது வெருகடி தானந்திசந்தி
அப்பனே மூன்றுநாள் ஆறுநாட்கொள்
காணுவது வயதனைக்கீல் கிறுத்திப்போடு
கலங்காதே எருமைமோர் சோறுமுண்ணே. (144)

உண்ணவே வாதமெல்லா மோடிப்போகும்
உத்தமனே கைப்போடு புளிபுகையுந்தள்ளு
தன்னியே பத்தியத்துக் காரமெல்லாந்
தள்ளிவிடு மற்றவெல்லா மிச்சாபத்தியம்
கண்ணவே உப்பதனை வறுத்துக்கட்டு
கண்காணு தோடமடா வாதமொடுக்கே
ஒன்றுவது காலுளை முடக்கிழுப்புவாதம்
உத்தமனே பச்சைவா தம்தடும்பாரே. (145)

ஆடாதோடை லேகியம்.

பாரேநீ சுயந்திர ஆடாதோடை
பாடுகிறேன் அதனுடனே சிறுகாஞ்சோரி
காருநீ முசுமுசுக்கை கண்டங்காலி
கரிசாலை முள்ளங்கி மணத்தக்காளி
சேரேநீ சிறுமுருங்கை வழுதலையின்சங்கு
சேர்த்துநீ பாவாரைச் சூரணமேசெய்து
காரேநீ கடுக்காயுங் கோஷ்டத்திப்பிலி
கருஞ்சீர கம்மிளகு வசம்பிந்துப்பே. (146)

உப்பான சிற்றரத்தை பேரரத்தை
உத்தமனே வாலுழுவை கடைசீறு
செப்பாத சீரகமுங் கற்கடகசிங்கி
சிறுநாகப் பூவோடு நெல்லிமுள்ளி
உப்பாக வகைவகைக்குக் காற்பலமேதூக்கு
உத்தமனே யிடித்துகன்றாய் முன்மருந்திற்சேரு
செப்பாக ஆவின்நெய் படிதான்வாரு
சிறப்பான வெள்ளாட்டின் பால்படிதான்வாரே. (147)

வார்த்துமே அரக்குப்பால் சாறுபடிவாரு
வளமாக அடுப்பேற்றிக் கொதிக்கும்போது
பார்த்துமே பனங்கற்கண் டெம்பலந்தானும்
பனைவெல்லம் பலந்தானும் போட்டுக்காய்ச்சு
கோத்துமே பாகுவில் சூரணத்தைக்கொட்டிக்
கொம்புதனால் நெருசேரக் கூட்டுவாரு
ஆர்த்துமே லேகியமாய்ப் பண்ணிக்கொண்டு
அந்திசந்தி காலொன்றுக் கிருநேரங்கொள்ளே. (148)

கொள்ளுவது பவளபற்பம் அரிதாரபற்பம்
கூட்டியே நேரொரு பாக்களவுகொள்ளு
தள்ளாதே மண்டலமே கொள்ளும்போது
க்ஷயமீளை க்ஷயமிருமல் ரக்தகாசம்
விள்ளாதே சூடிவிடும் க்ஷயரோகமேழும்
மேகவகை ரக்தகுஷ்டம் உஷ்ணவாய்வு
கள்ளமாம் வியாதியெல்லாங் காணுதோடுங்
கைகண்ட வித்தையிது கண்டபாரே. (149)

பாரேநீ கைப்போடு புளிப்புதள்ளு
பசுவின்நெய் வெள்ளாட்டு மாமிசமுங்கூட்டு
சேரேநீ ஆவின்பால் வெள்ளாட்டுப்பாலில்
தினந்தோறுஞ் சீனியிட்டுக் காய்ச்சிக்கொள்ளு
சாரேநீ பத்தியந்தான் முறையேசெய்து
சார்ந்துபார் கண்டாலே ரோகம்போகும்
ஏரேநீ தலைமுழுக ஆவின்நெய்யாம்
இல்லாவிட் டால்முக்கூட் டெண்ணெய்முழுகே. (150)



அரிதார பற்பம்.

சூழ்கவே அரிதார பற்பஞ்சொல்வேன்
முனையான அரிதாரம் பலந்தானொன்று
தேனான கற்சுண்ணம் படிதானொன்று
தேசிநீர் படிரெண்டு செப்பக்கேளு
வாழ்கவே புதுச்சட்டி தன்னிலேதான்
வளமான கற்சுண்ணங் கீழ்மேலிட்டு
தாழ்கவே அரிதாரம் ஒளிபோற்கட்டி
கடுவேநீ கிளிவைத்துத் தேசிநீர்வாரே. (151)

தேசிநீர் தன்னிலே உவர்ப்பூவிட்டுத்
தெளியவைத்துத் தெளிவிறுத்து வார்த்துநீத்து
ஆசியே யிப்படிநீ யெழுதரமிறுத்து
அரிதார மஞ்சளக்கி வெள்ளையாகும்
மாசியே அதையெடுத்து மறுசட்டியிட்டு
மைந்தனே அடுப்பேற்றி யிருள்ளிச்சாறு
காசியே படியொன்று காங்கைச்சாறொன்று
கலந்துமே சுருக்கிட்டுச் கருக்கிக்கேளே. (152)

கருதிப்பூ வாசம்பட் டைபுளியம்பாணி
கனமான நாயுருவி சுட்டசாம்பல்
கருதுமேவன் வகைவகைக்கு ரெண்டுபடிசாம்பல்
கலந்துமே சட்டியிலே கீழ்மேலிட்டு
அரிதியே தானகத்தில் கவசங்கேளு
அணைடோடும் உவர்ப்பூவுந் தலைமண்டையோடும்
வெருவியே கன்னார் ராவின்பாலும்
விட்டரைத்து மேற்கவசங் கட்டிப்போடே (153)

கட்டியே சவிசீவிட்டு உலர்ந்தபின்பு
கனமான சாம்பலிலே கடுவேயிட்டு
சட்டியே மேற்சட்டி கொண்டுமூடிச்
சந்துவாய்ச் சீலைசெய்து அடுப்பிலேற்றிக்
கட்டியே தென்னமட்டை தென்னம்வேரால்
கமலம்போல் எரித்திடுவாய் காலுசாமம்
அட்டியில்லை தாறவிட் டெடுத்துப்பாரு
அரிதாரம் நீறும்மப்பா ஆர்சொல்வாரே. (154)

சொல்லாத பற்பமொரு பணவிடைதான் மைந்தா
　　சுகமான நெய்த்தேனிற் கூட்டிக்கொள்ளக்
கொல்லாத க்ஷயமீளை மந்தாரகாசஞ்
　　சூலைத்தொலையக் கிரந்திபலரை யாப்புக்குஷ்டம்
சொல்லாதே வேளையிட்டால் வழுமாற்று
　　சுருக்காகும் ரசபற்பஞ் சேர்த்துக்கொண்டால்
கல்லான வியாதியெல்லாந் தீருமப்பா
　　கைமுறையாச் சொல்லிவிட்டேன் பார்க்கலாமே. (155)

பவளபற்பம்.

பாரேநீ பவளபற்பஞ் சொல்லக்கேளு
　　பசங்கான நற்பவளம் பலந்தானதுக்கு
சேரேநீ யிலக்கையிலை தனை அரைத்து
　　ரெண்டடையாய்ப் பிடித்ததின்மேற் பவளம்வைத்துப்
போரேநீ மேலுமந்த அடையால்மூடிப்
　　பொருந்தவே சீலைசெய்து முப்புடத்திற்போட
ஆரேநீ ஆறவிட் டெடுத்துப்பாரு
　　அப்பனே பவளமெல்லாம் பீங்கானிலிட்டே (156)

இட்டுமே ஆவின்பால் நிறையாய்வார்த்து
　　என்மகனே ரவியில்வைக்க நீறும்பாரு
திட்டமாம் பவளபற்பம் ஆருஞ்சொல்லார்
　　செப்பாதே வெகுபேருக்குத் தீரும்பாரு
கொட்டாதே பற்பமொரு பணவெடையேதாக்கு
　　கொம்புத்தேன் ஆவின்நெய் கூட்டிக்கொள்ளு
தட்டாத மேகமாங் கிரந்திசூலை
　　க்ஷயமீளை யிரைப்பிருமல் நீர்சொரிவுபோமே. (157)

சிங்கிபற்பம்.

போமென்ற சிங்கிபற்பம் சொல்லக்கேளு
　　புசனான கலைக்கொம்பு பிளக்குநாலாய்
ஆமென்ற மேனியிலே அரைத்த அப்பி
　　அப்பனே முழுப்புடத்தி லிட்டுவாங்கி
தேமென்ற நீறுமது தீக்கமாகத்
　　திறமான ஆவின்பால் விட்டரைத்துத்
தாமென்ற முழுப்புடத்திற் போட்டாயானால்
　　சங்குபோல் நீறியது நலமாமே. (158)



துவளமாம் பற்பமிரண்டு பணவெடையேதாக்கு
　　சார்வான ஆவின்வெண்ணெய் தன்னிற்கொள்ளு
துவளமாம் மேகமுடன் உஷ்ணகாங்கி
　　தொலையாத சூடெரிவு நீரடைப்புக்
கவனமாம் பவளபற்பம் சேர்த்துக்கொள்ளு
　　கல்லடைப்பு நீரடைப்பு க்ஷயரோகங்கள்
துவளுமாம் க்ஷயமீளை அர்மாங்கிஷங்கள்
　　தொலையாத வியாதியெல்லாந் தொலைந்துபோமே. (159)

போமென்ற தந்தநோய் முப்பத்திரண்டும்
　　போகவே உப்புநூறு பலந்தான்வாங்கி
வேகவே வர்க்கம்பால் மேனிச்சாறும்
　　விட்டரைத்து வில்லைதட்டிக் காயவைத்து
ஆமென்ற ஓட்டிலிட்டு மேலோடுமூடி
　　அப்பனே முழுப்புடத்தி லிட்டுவாங்கு
ஆமென்ற பொடிசெய்து வேறேவைத்து
　　அயப்பொடியுந் துருசுதுத்தங் கச்சக்கட்டே. (160)

கட்டியே கண்டங்கத் திரிவிதையிலேறி
　　கருஞ்சீரங் களிப்பாக்கு வகைவகைக்கு
தட்டியே கழஞ்சிடைதான் சமனாய்ச்சேர்த்து
　　உத்தமனே அயக்காண்டி தன்னிலிட்டு
ஆட்டியே வறுத்துநன்றாய்க் கல்வத்திட்டு
　　அதிலேறுகொட் டாங்கச்சிக் கரியுங்கூட்டு
இட்டுமே பொடிசெய்து முன்பொடியோடொக்க
　　இடையாகக் குறையாமல் சமனாய்ச்சேரே. (161)

கொப்பளிக்கியாழம்.

சேரேநீ கொப்பளிக்கக் கியாழங்கேளு
　　திறமான கடுக்காயுஞ் சுக்காங்கல்லும்
ஏரேநீ முடக்கொத்தான் கருவேலம்பட்டை
　　பெரிகாலன் நீர்ப்பூலா இலைதானும்
பாரேநீ இடித்துமொரு பாண்டத்திட்டுப்
　　பதக்குநீர் விட்டெரித்துக் கியாழம்பண்ணிக்
காரேநீ பொடியெடுத்துத் தக்கதுசெய்து
　　கியாழத்தை வார்த்துக்கொப் பளித்துப்போடே. (162)

போடவே பல்லைச்சு தந்தவாய்வு
பொல்லாத பற்குத்துப் பல்லரணை
மூடவே பற்புழுவும் பல்லுக்கூச்சம்
முகவாதஞ் சன்னியொடு தந்தசன்னி
நீடியதோர் பல்வாதம் பல்லுளைச்சல்
நேத்திரநோய் வேர்வெட்டு சொத்தைப்பல்லு
பாடியதோர் தந்தநோய் முப்பத்திரண்டும்
பறந்துபோம் பொடியினுட வேகந்தானே. (163)

கெற்பநோய்க்கு எண்ணெய்.

பறந்துபோங் கெற்பநோய் தீரவேண்டிற்
பாடுகிறேன் விளக்கெண்ணெய் படிதானிரண்டு
விரைந்திடவே பேய்க்கொமட்டிச் சாறுபடிரெண்டு
வேப்பம்பட் டைச்சாறு களக்கொட்டிச்சாறு
முறைந்திட்ட ஐவேலி பிரமிச்சாறும்
முடக்கொத்தா னன்றுவத்தி காட்டுள்ளிச்சாறும்
இருந்திட்ட வகைவகைக் கிரண்டுபடிசாறு
எண்ணெயிலே வார்த்துநீ இன்னுங்கேளே. (164)

கேளாய்நீ கொடிவேலி புங்கம்பாலை
கிளுவையிலை பாவாரை குருந்துசங்கு
வேளைநீ முக்கிலை கஸ்தூரிப்பட்டை
வெள்ளறுகு தலைச்சுருளி காக்கட்டான்குமரி
வாளைநீ வெள்ளைச்சா ரணையினோடு
வகைவகைக்கு ஒருபலந்தான் வரிசையாகக்
கேளைநீ கொடிக்கள்ளிச் சாற்றுடனிட்டு
குழம்பியே யெண்ணெயிலே கரைத்துவாரே. (165)

வாரேநீ கடுகோடு திப்பிலியுங்கடுக்காய்
வால்மிளகு குரோசாணி கடுகுரோகணியும்
ஆரேநீ கருஞ்சீரங் கஸ்தூரிமஞ்சள்
அரத்தைக்கு வால்மிளகு கிறாம்பு
பேரேநீ இந்துப்பு ஆனைத்திப்லி
பெருங்காயஞ் சாதிக்காய் தாளிசபத்திரியும்
ஏரேநீ சேங்கொட்டை ரசகற்பூரம்
இஞ்சியொடு கவச்சார மியம்பக்கேளே. (166)



இயம்புகிறேன் வகைவகைக்கு நாற்கழஞ்சுவிதம்
எரிகால சாறோடு வெள்ளாட்டுநீரும்
அயம்புகிறேன் விட்டரைத்து எண்ணெயிலேவாரு
அடுப்பேற்றி யெரித்துநீ மெழுகுபதம்பாரு
அயம்பாது வடிகலசத் தன்னிற்கேளு
ஆகாசத் தாளொடுவெண் காரம்ரெண்டு
வயமாக வகைவகைக்கு இருகழஞ்சுபோடு
வடித்தெடுத்து எண்ணெயைநீ வைத்துக்கொள்ளே. (167)

எண்ணெயே மூன்றுநாள் கொள்ளும்போது
என்னசொல்வேன் கெற்பநோ பேறுமங்கே
தண்ணவே சூதகவாய் வுத்திரட்சிறுன்மம்
தொலைக்கோடுங் கெற்பக்கி ராணிவாய்வுசூலை
விண்ணவே பத்தியந்தான் மூன்றுநாளும்
வெள்ளாட்டுப் பாலொழிய வேறொன்றுமாகா
அண்ணவே பாலில்லா வெக்கிராகும்
அப்பனே காலாநாள் தலைநீர்வாரே. (168)

வார்த்தநாள் முதல்மற்ற மூன்றுநாளும்
வைத்தனே ஆரையிலை கிளுவைரெண்டும்
ஆர்த்துமே ஐவிரலி யிலையுங்கூட்டி
அரைத்தாவின் பால்வெண்ணெய் தன்னிற்கொள்ளு
ஏத்துமே ஆறுநா ளெண்ணெய்முழுகு
ஏழாநாள் நாயகனோ டிணங்கச்சொல்வேன்
பேர்த்தரிய மலடியுமே பெறுவாள்பிள்ளை
பெண்மலடோ உலகத்தி லில்லைக்காணே. (169)

இல்லையப்பா கைகண்ட வித்தைபாரு
இசிருப தாளுதாம் பிள்ளையுண்டு
தொல்லையே பிசாசுபிணி கிரகதோஷம்
கருக்கமாய்ச் சாந்திசெய்து தகடுசெய்து
அல்லவே நோயோடு பேயுங்கூடில்
அவிழ்தந்தா னேதுசெய்யும் மப்பாகேளு
மல்லவே மணியந்த்ர முன்னேசெய்து
மறுபடியும் மருந்துசெய்யப் பலிக்கும்பாரே. (170)

துளிசம்.

பலித்திடவே அபத்தகடு சதுரமாகப்
பண்ணியதி லிருபத்தஞ் சறைதானிட்டு
மலிக்கவே அறைதோறுஞ் சிவயநமவென்று
மகயவசி யென்றதனை மாறிப்போடு
சுழிக்கவே சுற்றிநல்லாஞ் சூலம்போடு
சூலத்தி னுனிதோறு மகாரம்போடு
அலிக்கவே அறைதோறும் ஓங்காரம்போடு
ஐம்பத்தோ ரக்ஷரத்தி லடைத்திடாயே. (171)

அடைத்திட்டவே நோயாளி பேருமிட்டு
ஐங்காயத் தேசியுட கருவடைசக
தடுத்திட்டு கைமுறை வேறசெய்து
சாதகயோகி துடைந்துசெய் சாபம்நீக்கி
கொடுத்திட்டுக் கும்பகத்தில் சலத்தைவாங்கி
நோயாளி சிரசிலே புரோக்ஷித்தே நீ
வடித்திட்டு இப்படியே தகடுசெய்து
வைத்தியனே பிணியாளர்க்கு மருந்துசெய்யே. (172)

செய்திடவே தீராத நோயுமுண்டோ
தேசத்தி லுன்போலே வைத்யனுண்டோ
நொய்யதே நோயாளி சொல்லக்கேளு
நோய்தீர வைத்தியனே உபசாரஞ்செய்
மெய்யனே யென்றகுரு பாதம்போற்றி
மேதினியில் தானதர்மஞ் செய்துவாநீ
ஐயனே வினையெல்லா மகன்றுபோகும்
ஆதவன்போல் நீடூழி வாழ்வாய்தானே. (173)

கவச்சார எண்ணெய்.

வாழ்கவே எண்ணெயிலே கவச்சாரம்போட்டு
மைந்தனே நீர்முள்ளிச் சாறுங்கூட்டி
வாழ்கவே உள்ளுக்குக் கொள்ளச்சொல்லு
மகோதரம்நீ ராம்பல்பெரு வயிறுதானும்
போகுமே பொல்லாத குன்மமெட்டும்
பித்தமொடு வளமாந்தை பாண்டுசோகை
ஏகுமே கரப்பனொடு வாதருண்மம்
இந்த்ரகண்டி மலக்கசடு இரைச்சல்வாய்வே. (174)



வாயுவொடு புழுக்கிருமி எல்லாம்போகும்
வாகுபெறச் சொல்லிவிட்டேன் எண்ணெய்தன்னை
வாயுவொடு வியாதிகட்கும் மலடுகட்கும்
வைத்தியத்தில் தீராவிட்டாலென்னசெய்வேன்
நோயேது அவரவர்கள் செய்தகன்மம்
நோய்போலே அவரவரைத் தொடர்ந்தப்பா
நாய்போலே அலையாதே சொல்லக்கேளு
நலமான கருமத்தைத் தீரச்செய்யே. (175)

தீரவே தானதர்மஞ் செய்யவேண்டும்
சிவபூஜை குருபூஜை செய்யவேண்டும்
தீரவே கோயில்குளம் கட்டவேண்டும்
சிவாலயங்கள் திருவிளக்கு வைக்கவேண்டும்
தீரவே அன்னதா னங்கள்தானந்
திருவசன கந்தனைந்து செய்யவேண்டும்
தீரவே தர்மத்தை விரும்பவேண்டும்
தீராத தீவினைகள் தீரவென்றே. (176)

தீரவென்றால் வைத்தியனே உபசாரஞ்செய்
திரமான காரியமங் வைத்தியனைநீ
தீரவென்று சாஸ்திரத்தை ஆராய்ந்து பார்த்துச்
செய்முறையுங் கைமுறையுந் திறமாய்ச்செய்வான்
ஆரென்று வேதநூ லறிவாருடன்
அகப்பட்ட படிசெய்வார் அநேகரென்றும்
காரென்று குருபதத்தைப் போற்றிசெய்து
கைமுறையாய் மருந்துசெய்யிற் பலிக்கும்பாரே. (177)

நிலவாகைத் தூளம்.

பவேரநீ நிலவாகை கொண்டுவந்து
பண்பாக இடித்துத்தூள் பண்ணிவைத்து
சேரேநீ பிஞ்சோடு கடுக்காய்நான்கு
சிரகமுங் வாலுழுவை கிராம்பு
காரேநீ வெல்லம் வைக்கப்பட்டை
கடுகுரோகணி சிவதை தாளிசபத்திரியும்
சேரேநீ சாதிக்காய் கிராம்புத்திப்பிலி
செவ்வியமிக் காப்புடன கலக்கிடே. (178)

நீரான சுக்கோடு வகைக்குக்கால்பலந்தா
னிறுத்திடித்து முன்மருந்தோ டொக்கச்சேரு
சீரான ரெண்டுவகைச் சூரணமுஞ்சமனாய்ச்
சீனிசர்க் கரைபாதி சேர்த்துக்கொண்டு
நேரேநீ காலொன்றுக் கந்திசந்தி
நெய்தேனில் வெருகடிதா னிழைத்துக்கொள்ளு
நேரேநீ மண்டலந்தான் கொள்ளும்போது
தீராத நோயெது செப்பக்கேளே. (179)

செப்பவே மேகமொடு பித்தம்போகும்
சிறப்பான அரோசிகமும் வாய்நீருறல்
துப்பரவாய் மலக்கட்டு வாய்வுசாந்தி
சூடுகொள்ளல் சொறிசிரங்கு மூலவாய்வு
முப்போதும் வலஞ்சுத்தி யாகும்பாரு
மூலத்தில் சேரெல்லா முறிந்துபோகும்
செப்பாதே வெகுகூறு இன்னுமொன்று
சிவன்வேம்புச் சூரணத்தைச் சொல்லிடேனே. (180)

சிவன்வேம்புச் சூரணம்.

சொல்லுகிறேன் சிவன்வேம்புச் சூரணமேசெய்து
சுகமாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
மல்லுகிறேன் சிவன்வேம்புத் தைலந்தானும்
வாங்கியே படியொன்று வேறேவைத்து
அல்லுகிறேன் வாலுழுவை தாளிசபத்திரியும்
அழகான கிராம்பேலம் அதிமதுரங்கோஷ்டம்
கல்லுகிறேன் ஜாதிக்காய் ஜாதிப்பத்திரியும்
கருஞ்சீர் கம்பிளாரு கடுக்காய்திப்பிலியே. (181)

திப்பிலியும் அதிவிடையம் பறங்கிப்பட்டை
சிறுநாகப் பூவோடு வால்மிளகுசிங்கி
இப்படியே வகைவகைக்குக் கால்பலமேதூக்கு
இடித்துநீ சிவன்வேம்பு சூரணத்தோடொக்கத்
தப்பாதே சமபாகம் பாதிசீனி
சாரித்து ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு
செப்பாதே தினமொன்று வெருகடிதானப்பா
சிவன்வேம்புத் தைலத்திற் குழைத்துக்கொள்ளே. (182)



கொள்ளவே பதினெட்டுக் குஷ்டரோகம்
குலைந்தோடும் மேகமொடு சுவாலைவாய்வு
கள்ளமாங் கரப்பனொடு சொறிசிரங்கு
கடிவிஷங்கள் வெட்டையொடு விரணகாந்தி
தள்ளியே நோயெல்லா மோடிப்போகும்
சொல்லரிது காயசித்தி சுருக்குமெத்தக்
கள்ளமில்லை சொல்லிவிட்டேன் சிவனார்வேம்பு
கற்பத்துக் காதியாங் கண்டுபாரே. (183)

கண்டுபார் சூதகத்தி னுதிரம்போகா
காலோடு கைமேலுங் கடுத்துக்குத்திச்
சென்றுபார் வயிற்றிலே சோறேதங்கித்
திரட்சிருக்கும் வாய்வாகிச் சுவாலையாக்க
அன்றுபார் சூசிக வாயுவாக்க
அபானமாங் கருக்குழியி னுதிரங்கட்டி
உண்டுதா னுதரத்தில் வாய்வுசேர்ந்து
உள்ளங்கால் நகக்கண்கள் குத்தலாச்சே. (184)

சூசிகவாயுவுக்கு லேகியம்.

ஆச்சென்ன சூசிக வாயுவெல்லா
தொருந்தான் நீக்கறியா ரப்பாகேளு
பேச்சென்ற கொடிவேலி அமுக்கராவேர்
பெருமருந்து கோப்பிரண்டை நொச்சிசங்கு
வேச்சென்ற மாவிலிங்கு மிளகுநீணைகொருஞ்சி
வெள்ளைச்சாரணை அடம்பு கண்ணுப்பூளை
ஆச்சென்ற கிலியாவா ரையிரெண்டு
அப்பனே வகைவகைக்குப் பலந்தான்தூக்கே. (185)

தூக்கியே பிடித்ததனைச் சீலைவடிகொண்டு
சூரணமாச் செய்துநீ சொல்லக்கேளு
ஆக்கென்ற வால்மிளகு கடுக்காய்தானி
ஆனைத்திப் பிலியுமம் அரத்தைசுக்குத்
தாக்கின்றி பெருங்காயம் கண்டத்திப்பிலி
சதகுப்பி குராசாணி திப்பிலிமூலம்
தாக்கியே சாதிக்காய் கிராம்புபத்திரி
தாளிசபத் திரியோடு சிறுநாகப்பூவே. (186)

பூவோடு திப்பிலியும் விடையமாஞ்சி
புகழான சேங்கொட்டை ரசகற்பூரம்
கோவோடு வகைவகைக்குக் காற்பலமேதாக்கு
கொள்ளிலைச் சாறுதேங் காய்ப்பாலிட்டாட்டு
ஆமோடு முன்மருந்தோ டொக்கச்சேரு
அடுப்பேற்றிச் சட்டிதனைக் காயவைத்துக்
கோவோடு நல்லெண்ணெய் படிதான்வாரு
கொதிக்கையிலே வெள்ளுள்ளி ரெண்டுபலம்போடே. ()

போடவே தோல்போக்கி நறுத்துப்போட்டுப்
புகழான பனைவெல்லம் நாலுபலம்போடு
ஆடவே ஆவின்பால் படிதான்வாரு
அப்பனே மூங்கிலிலே அரைத்துநன்றாய்த்
தேடவே கெச்சக்கா யளவுபோடு
சேகரித்துக் கிண்டிடிலோ பாகுபோலாம்
சாடியே சூரணத்தைக் கொட்டிக்கிண்டிச்
சம்பாநெல் பொரியதிலே சேரைப்போடே. (188)

சேரையே நான்போட்டுக் கிண்டிநன்றாய்ச்
சேர்த்துமே லேகியம்போற் பண்ணிக்கொண்டு
ஆரேநீ நாளொன்றுக் கந்திசந்தி
அப்பனே கொட்டைப்பாக் களவுகொள்ளு
சேரேநீ வயிற்றிலே உதிரமேது
திரட்சியொடு வாய்வேது குன்மமேது
சோரையென்ற உதிரமெங்கே கட்டியெங்கே
சூதகவாய் வக்குத்தல் தொலைந்துபோச்சே. (189)

போச்சென்ற பத்தியந்தன் சொல்லக்கேளு
[illegible]லையுங் கைப்புத்தள்ளு
[illegible]சென்ற சுறுவ[illegible]லை வெள்ளாட்டிவற்றல்
அப்பனே விரா[illegible]ல் அன்பாய்க்கூட்டு
[illegible]ச்சென்ற அரைக்கீரை [illegible]ருங்கைப்பிஞ்சு
கொள்கச்சக் கருவ[illegible] கோழிச்சாறு
[illegible]ச்சென்ற புளியில்லா [illegible]த்துக்கூட்டு
அப்பனே வ[illegible] வறுத்துக்கூட்டே. (190)



கூட்டுவது மருந்துகொள்ளும் போதுதள்ளிக்
கொண்டமெறு பத்தியத்திற் கூட்டிக்கொள்நீ
காட்டியே யின்னுமொன்று சொல்லக்கேளு
நலமான வாதமொடு சூலைரோகம்
தாட்டியே யில்லலிற் பறந்துபோகும்
தயவாக வென்முறைபோ லாருஞ்சொல்லார்
பாட்டியே ரோகமெல்லாம் செலப்பரங்கிப்
பட்டைரசா யனத்தையுநான் பாடுவேனே. (191)

பரங்கிப்பட்டைரசாயனம்.

பாடுவேன் பறங்கிப்பட் டைபலந்தான்பத்து
பருபருக்கை யாயிடித்துப் பாகங்கேளு
பாடுவேன் புதுக்கலசம் மூன்றுவாங்கிப்
பட்டைத்தான் ஒருகலசம் தன்னிற்போடு
சூடுவேன் முழமுயரங் குழிதான்வெட்டித்
தானிட்ட கலசத்தை அடியில்வைத்து
நாடியே மறுகலசந் தன்னிற்கேளு
நலமான கலசத்துள் தமர்மூன்றிட்டே. (192)

இட்டுமே சுத்தித்த கெவ்விகெந்தி
யிதமாக ரெண்டரையே பலமுங்கலசத்திட்டுப்
பொட்டுஅடிக் கலசத்தின் மேலேவைத்துப்
பொருந்தவே சந்துசெய்து மறுகலசந்தன்னில்
கட்டுமே தரியிலே தமர்மூன்றிட்டுக்
கார்த்திகையின் கிழங்கதிலே பலந்தானைந்து
அட்டியில்லா திடித்திந்தக் கலசத்திட்டு
அக்கலசம் வாய்மூடிச் சீலைசெய்யே. (193)

செய்துமே கெந்திபிட்ட கலசத்துமேலே
சிறப்பாக வைத்துநீ சீலைசெய்து
செய்யவே கலசம்ரெண்டும் அடியில்நிற்கத்
தெரியவே கிழக்கிட்ட கலசம்மேல்வைத்துப்
பொய்துமே கலசமுன் றொன்றோடொன்றாய்ப்
பொருந்தவே செய்துமே புடத்தைப்போடு
எய்துமே கீழ்க்கிருட தயிலந்தானும்
இறங்கியே கெந்தியிலே யிளக்கங்கொண்டே; (194)

இளக்கியே செந்தியுட தயிலம்ரெண்டு
இறக்கியே பட்டையிலே ரேகித்தொன்றாய்ப்
பளக்கியே ரெண்டுவகைத் தயிலந்தானும்
பறங்கிப்பட் டைதனிலே சொரிந்திருக்கும்
இளக்கமா யாறியத்தப் பறங்கிப்பட்டை
இடித்துமே நன்றாகச் சீலைவடிகொண்டு
விளக்கமாம் புதுப்பானை வாயிலேதான்
மெலிதான சீலையைநீ வேடுகட்டே. (195)

வேடுகட்டிச் சூரணத்தை யதின்மேல்வைத்து
மேல்சீட்டி கொண்டுநன்றாய்ப் பொருந்தமூடி
வேடுகட்டும் பானையுட விளாவிற்போட்டு
விதயாம்புக் கத்தனைவி லுன்னேயிட்டுப்
போடுவது சாம்பிராணி டலந்தான்பத்துப்
பொடிசெய்து புகையெழும்பப் போட்டுவாநீ
யாடுவது சாம்பிராணி யெல்லாம்போட்டு
அப்பனே சூரணத்திற் பதங்கமேறுமே. (196)

ஏற்றியே யெடுத்ததனைப் பதனமாக
என்மகனே காலொன்றுக் கிருமிரசங்கொள்ளு
போற்றரிய வாதகுலை மேககுலை
பொல்லாத கரப்பனொடு கிரந்திகுஷ்டம்
ஏற்றரிய காறுகை முடக்குச்சூலை
பிரமெலொடு மேகத்தி லெடுத்தஹூறல்
பாற்றுமே சந்துவலி பிடிப்புக்குத்தல்
பரிதிகண்ட பனிபோலே பறந்துபோமே. (197)

பத்திய முறிப்பு.

பறந்துபோம் கைப்போடு புளிப்புதன்று
பசுவின்பால் நெய்மோரும் பாகாய்க்கூட்டு
பறந்துபோம் உப்பதனை வறுத்துக்கொள்நீ
பசும்பயறு அரைக்கீரை முருங்கைப்பிஞ்சு
பறந்துபோம் பத்தியந்தான் சொன்னபடிசெய்து
பாங்காக மருந்துண்ணத் திரும்நோய்தான்
பறந்துதான் பத்தியத்தில் பாகத்தப்பில்
பலபல்வா மருந்துண்டும் பாழாய்ப்போமே. (198)



போமென்று ஒவிழ்தங்கள் கொள்ளும்போது
புகழான பத்தியந்தான் முறிவுகண்டா
லாமென்ற தேகத்துக் கசடில்லாமல்
அவுரிவேர் பிரமியிலை மிளகுங்கூட்டிப்
பாமென்ற கியாழம்வைத்து முப்பொழுதுகொள்ளு
பத்தியத்தின் முறிவெல்லாம் பாகமாகும்
ஆமென்ற பத்தியத்திற் புளிப்புக்கூட்ட
அறைகிறேன் புளிப்பாகம் வெள்ளைச்சாரணையே. (199)

சாரணையி னிலையரைத்துப் பழம்புளிமேற்பூசிச்
சார்வாகச் சுட்டதனை மேற்கவசந்தள்ளிச்
சாரணையா மருந்திலுட போக்கறிந்து
சார்வாகக் கூட்டிவர உப்பைக்கேளு
சாரணையாம் வாதியென்றுக் கட்டிக்கொள்வா
விலாவிட்டாற் சங்கினிலை பிறுயிலையும்போட்டுச்
சீராவின் பால்தெளிந்து வறுத்துக்கூட்டு
திறமான பத்தியமாந் திருகோயே. (200)

இருமலுக்குச் சூரணம்.

இருமே அத்தியிலே சூடுகொண்டால்
தீராத வாட்டியொடு இரைப்பிருமல்
இருமே புகைச்சலொடு தொண்டைக்கம்மல்
சிறுக்கிருமல் நாக்கூறல் வாட்டிகோழை
கூறுமே உளவாட்சி மூலச்சூடு
கூறரிய பித்தமொடு கனமேகங்க
ளாறுமே இவைகளெல்லா மோடிப்போக
அறைகிறேன் ஆடாதோடை கொஷ்டத்திப்பிலியே. (201)

திப்பிலியும் வசம்போடு கெல்லிமுள்ளிகடுக்காய்
சிறுவழுதலைவேரும் அரத்தைகடுக் காய்ப்பூ
கப்பரிய மிளகோடு நாகப்பூவகைக்குக்
காற்பலமே, சேர்த்திடித்துச் சூரணமாய்ச்செய்து
வெப்பிய நாளொன்றுக் கந்திசந்தி
வெருகடியாக் தாளெடுத்து விளம்பக்கேளு
செப்பரிய நெய்தேனிற் குழைத்துக்கொள்ளச்
செப்பியதோர் கோயெல்லாம் திரும்பாதே. (202)

### காளகண்ட சூரணம்.

பாரேநீ பதினெட்டுக் குஷ்டம்போகப்
பாடுவேன் காளகண்ட சூரணகுடோரி
ஆரப்பா பரங்கிப்பட் டையலரிதாறு
அழிஞ்சல்சங்கம் குப்பியொடு கஸ்தூரிப்பட்டை
காரப்பா சிவன்வேம்பு பூவரசம்பட்டை
கருங்காலி விடத்தலியோ டாயிலியப்பட்டை
வேரப்பா காந்தையொடு வகைக்குரெண்டு பலந்தான்
மிஞ்சாதே ரசகர்ப்பூ ரம்பலந்தானென்றே. (203)

ஒன்றாக விவையெல்லாஞ் சேர்த்திடித்து
உத்தமனே வடிகட்டி வைத்துக்கொண்டு
குன்றான செங்கொட்டை எட்டிக்கொட்டை
கொடிவேலி செருக்குலா கார்த்திகையின் கிழங்கு
பண்டான கொடிகள்ளா ழமுளைவகைவகைக்குப்
பலம்பத்து நறுக்கியே குழித்தயிலம்வாங்கிப்
பன்றான தயிலமுந்து ரணைமப்பா
பரிவாக வெவ்வேறே வைத்துக்கொள்ளே. (204)

கொள்ளவே சூரணத்தில் வெருகடிதானப்பா
குழைத்திடுவாய் காசிடையே தயிலங்குத்தி
நள்ளவே நாளொன்றுக் கந்திசந்தி
நாற்பதுநாள் மண்டலமே கொள்ளும்போது
இல்லாதே பதினெட்டுக் குஷ்டமெங்கே
விருதான மேகமொடு கிரந்திசூலை
கள்ளமாங் கரப்பனொடு வாதசூலை
கடிவிஷங்க ளுள்ளதெல்லாங் காணாதோடும்
கொள்ளவே குன்மமெட்டும் குடிபோஞ் சொன்னேன்
கூர்மீந்த பத்தியமாய்க் கொள்ளுவாயே. (205)

கொள்ளுவது பத்தியந்தான் குஷ்டநோய்க்குக்
கூறுவேன் பழம்புளியாங் கொறுக்காயாதல்
கொள்ளுவது புளியினுட கொட்டைபோக்கிக்
கூறாக இடித்ததனைப் பிசைந்துநன்றாய்த்
தள்ளாதே சாரணையின் சாறுவிட்டுச்
சார்வாக இடித்ததனைப் பிசைந்துகொண்டு
உள்ளபடி வெட்டிமரத் தடியிற்சென்று
உளிகொண்டு துளைத்ததனைச் சுடாய்ப்பண்ணே. (206)



பண்ணியே புளியையதி னுள்ளேவைத்துப்
பரிவாக மேலுமந்தச் சிராயால்மூடி
யெண்ணியே யிருபத்து அஞ்சுநாட்சென்
றெடுத்ததுமே வைத்ததனைப் பத்தியத்திற்கூட்டு
வன்னியதாய்ச் சொன்னபுளி குஷ்டநோய்க்காம்
வன்னிப்பட்டைச் சாற்றிலுப்பு வறுத்துக்கூட்டு
என்னுகறி வெள்ளாடு கொண்டுவந்து
இலைக்கள்ளி திருகுகள்ளி சதுரக்கள்ளி. (207)

கள்ளியே கற்றாழை யெருக்கோடிண்டு
கருஞ்சூரை கொடிக்கள்ளி அழிஞ்சியெட்டி
தெள்ளியே யிவையெல்லாம் கொண்டுவந்து
தினமேய்த்து எட்டுநாள் தின்றபின்பு
தெள்ளியே அதினுடைய கறிதான்கூட்டு
சிறுநீரில் புங்கம்பூ ஊறவைத்து
அள்ளியே மேற்கண்ட புண்ணுக்கெல்லாம்
அந்தநீர் தனைவார்த்துக் கழுவிப்போடே. (208)

போடவே குஷ்டமெல்லாம் பறந்துபோகும்
பொல்லாத ரோகமெல்லாம் பொடியாய்ப்போகும்
ஆடவே விளக்கெண்ணெய் தேய்த்துமுழுகு
அபசார பத்தியங்கள் பண்ணவேண்டாம்
ஊடவே தீராத நோய்கட்கெல்லாம்
உன்னுடைய சிறுநீரில் ஒருசேர்கொள்ளு
போடவே மண்டலந்தான் கொண்டாயானால்
பொல்லாத விஷரோகங் குஷ்டம்போமே. (209)

### மேகக்ஷாயம்.

போமென்ற தன்னுக்குள் மருந்தைவைத்துப்
பூமியிலே நீமருந்து தேடுவானேன்
ஆமென்ற தன்னுக்குள் அமுரியாலே
அற்றுப்போம் நோய்களெல்லாம் அறிந்துபாரு
போமென்ற மேகமென்ன பொல்லாரோகம்
போகவே உள்ளுலர்த்திப் பட்டைவாங்கி
ஆமென்று இடித்ததனை யமுரிவிட்டுப் பிசைந்து
அல்லாட்டால் வெந்நீரால் பிசைந்துகொள்ளே. (210)

கொள்ளவே தூளொன்றுக் கரைப்படிதான்போதும்
குழிப்பாக மூன்றுநாள் கொள்ளும்போது
விள்ளவே மிஞ்சமொடு கிராந்தி அரையாப்பு
வெட்டையொடு பிறமேகம் மேகவாய்வு
கொள்ளவே வாதமொடு குலை நுண்மம்
கொடிதான ரோகமெல்லாம் குடிபோம்பாரு
கொள்ளவே பத்தியமென்ன இச்சாபத்யம்
குடிகெடுத்த புகையிலையும் புளியுந்தள்ளே. (211)

புளியோடு வாய்வென்ற பதார்த்தந்தள்ளு
புகழான உப்பதனை வறுத்துக்கூட்டு
எளிதான பத்தியந்தா னுறுநாளாம்
ஏழாநாள் தலைமுழுகி யெல்லாங்கூட்டு
ஒளியாதே வெள்ளாட்டுக் கறிகொழுப்பு
உத்தமனே போதரவாய் புசித்தேது
களிப்பான மேகமொடு வாதம்வாய்வு
கால்முடக்கல் கைமுடக்கல் கடுப்புக்குத்தல்
பொளிப்பான இமிரோடு வாதமிஞ்சி
முடக்கினால் சொல்லுகிறேன் புனமித்தண்டே. (212)

தண்டோடு திருகுகள்ளி சடுதுத்தியோடு
தழுதாழை முடக்கொத்தான் வேப்பம்பட்டை
வென்றான சங்கொடு உத்தாமணி
வெண்ணொச்சி பரிகுறும்பு வெள்ளிண்டுவிரம்பு
பன்றான பதினொன்றும் வகைவகைக்குப்
பலம்பத்து நிறுத்திடித்துப் பாண்டத்திட்டு
அன்றான சலமதிலே பதினெட்டுமரக்கால்
அளந்துவிட்டு அடுப்பேற்றி யெரித்துக்காய்ச்சிக்
கன்றாதே சலமாறு மரக்காலாகக்
காய்ந்தபின்பு வெதுபோல மேலேவாரே. (213)

வார்த்துமே யுள்ளுக்கு வொருசேர்கொன்று
மைந்தனே மேகிலிட்டுப் பிடிக்கச்சொல்லு
வார்த்துமே இப்படியே மூன்றுநாள்செய்
மைந்தனே ஆனைத்தி ஒட்டைலத்தி
சேர்த்துவெள்ளாட் டிடிப்புழுக்கை தேள்கொடுக்கன்கொட்டித்
தேங்காய்ப்பூ வர்க்கமது குடவேளையயா
வார்த்துமே வறுத்தருநீ மூன்றுநாளொத்த
வாதமொடு மேகங்கே வாய்வுமெங்கே
ஆத்துமே அண்டவாய்வு விரைவாதமோடு
ஆகாத ரோகமெல்லா மகன்றுபோச்சே. (214)



போச்சென்ற பத்தியந்தா னொன்றுமாதா
போக்கோடே யேழாநாள் வறுத்துப்புக்கூட்டு
போச்சென்ற எட்டாநாள் தலைநீர்வார்த்துப்
புளிகூட்டு இன்னுமொன்று புகலக்கேளு
ஆச்சென்ற திருகுகள்ளி கொண்டுவந்து
அப்பனே வாருவைக்கோல் தன்னாலாட்டி
காச்சென்ற பிழிந்துதான் கள்ளிச்சாறு
கண்டிடைக்கு நல்லெண்ணெய் கூட்டிக்கொள்ளே. (215)

கொள்ளவே வாதமொடு வாய்வுகுலை
குறுக்குவலி முடக்குவலி குதிகால்வாதம்
உள்ளேகொள் மூன்றுநா ளுப்பில்லாதே
யுண்டிடுவீர் யாறுநாள் பத்தியமேபண்ணு
விள்ளாதே மேகவெட்டை வெள்ளைகாணில்
விதமான பழம்பாசி கொண்டுவந்து
தெள்ளியே இடித்ததனை நீத்துப்பாக
ஜெலத்தைவிட்டுப் பிசைத்துநன்று பிழிந்துக்கொள்ளே. ()

வெள்ளைக்கு மருந்து.

இறுத்ததில்நற் சீரகமீ ருள்ளிரெண்டும்
இதமாக வகைவகைக்குக் கால்பலமேகூட்டி
அரைத்துமே கலக்கியதில் நல்லெண்ணெய்தானும்
அப்பனே சாறுகண்ட அளவிற்பாதி
நிரைத்துமே விட்டதனில் சொல்லக்கேளு
நேரான சர்க்கரைதான் கால்பலமேபோடு
முறைத்தப்பா இப்படியே மூன்றுநாட்கொள்
முதியவெள்ளை பிறமேக வெட்டைபோகுந்தானே. (217)

தாவென்ற இன்னுமொரு சூட்சங்கேளு
சார்வான பழமிளகு முப்பத்திரண்டு
ஏவென்ற கொடிக்கள்ளிக் கொழுந்துதானும்
எலுமிச்சங் காயளவு கூடக்கூட்டி
வேவென்ற அரைத்ததனை அந்திசந்தி
வேளைக்கு அரைக்கொட்டைப் பாக்களவுகொள்ளு
பாவென்று மூன்றுநாள் கொள்ளத்தீரும்
பத்தியந்தான் பசுமோருஞ் சோறுமுண்ணே. (218)

மேகத்துக்கு.

உண்ணவே கைகண்ட வித்தைசொன்னேன்
உத்தமனே மேகவகை இருபதுதான்போக
பண்ணவே புங்கம்பூ படிதானொன்று
பாங்கான சட்டியிட்டு அடுப்பிலேற்றி
நுண்ணுமீத் ஆவினெய் ரெண்டுசேரு
உண்ணாவுண்ண விட்டதனில் வறுத்துவாக்கு
நன்னூத கெய்யெல்லாம் பூவிற்சேர
நன்றாகப் புரட்டியே வடிக்கெடுத்துத்
தின்னமாம் உதயாதி தன்னிற்கேளு
தினமொன்றுக் கத்திசத்தி வெருகடிப்பூகொள்ளே. (219)

வெருகான புளியோடு புகையிலையுந்தன்று
வெள்ளாட்டு வற்றலொடு ஆவின்பால்நெய்
வெருகாக பிருதிபுமே கூட்டிக்கொள்ளு
மேகவெடி மேகப்புண் மேகநூலே
வெருகான பிறமேகம் வெட்டைதீரும்
மெய்யிதுவே கைக்கண்ட படிதான்சொன்னேன்
கருதான மேகங்கள் எல்லாம்போகக்
கஸ்தூரி வெண்ணெயொன்று கருதக்கேளே. (220)

கருதியெடுத் தேரண்ட வெண்ணெய்தானும்
கலங்காதே ரெண்டரையே படிதான்காணும்
கருதியே பழையதோர் பாண்டத்திலவாரு
கால்படிதா னிருள்ளிச் சாறுவாரு
கருதுமேன் பறங்கிப்பட்டை பலந்தானொவு
கஸ்தூரிப் பட்டையது விராகனேழு
வரிசையாம் கெருடனுட கிழங்குதானும்
வகையாகப் பலமெட்டு நிறுத்துக்கொள்ளே. (221)

கஸ்தூரி எண்ணெய்.

கொள்ளவே கஸ்தூரிப் பட்டைதன்னை
குளிர்தண்ணீர் தன்னிலே யூறப்போட்டு
அள்ளவே அரைத்ததனை வெண்ணெயிலேவார்த்து
அதின்பின்பு பறங்கிப்பட் டையரைத்துப்போடு
எள்ளவே கெருடனிட கிழங்குதன்னை
யிருள்ளிச் சாற்றினு லரைத்துப்போடு
கொள்ளவே யிவையெல்லாம் வெவ்வேறே அரைத்துக்
குளிர்நீரில் கரைத்தந்த வெண்ணெயிலேவாரே. (222)



வார்த்துமே அடுப்பேற்றிப் புளிவிறகுதனிர
மற்றுநீ பொருவிறகால் எரியமூட்டு
வார்த்துமே யெரித்ததனை மெழுகுபதம்பார்த்து
வடித்துநீ சுப்பிரம னியர்பூசைபண்ணு
வார்த்துமே யெடுத்ததனை வைத்துக்கொண்டு
மைந்தனே யெண்ணெய்கொள்ளும் வகையைக்கேளு
வித்துமே யெண்ணெய்கொள்ளு முதல்நாளப்பா
விளக்கெண்ணெய் தேய்த்துமே முழுகப்போடே. (223)

முழுகியே மறுநாள் சொல்லக்கேளு
முன்னையான வெண்ணெயிலே அரைக்கேர்கொள்ளு
பழுகியே சரிபலம் பார்த்துக்கொள்ளு
பத்துவிசை பேதியாம் பகருவேதீ
கழுவியே கடுகுநீ வறுத்தகம் புப்போட்டுக்
காய்ச்சியே கொண்டிடவே பேதிநிற்கும்
தொழுகவே மறுநாளும் விளக்கெண்ணெய்தேய்த்து
நீராட்டிக் கறிபதார்த்தம் எல்லாங்கூட்டே. (224)

கூட்டியே பத்துநா ளறப்போட்டுக்
கொள்ளித்த முறைப்படியே எண்ணெய்தானும்
மூட்டியே மும்முறைதான் கொள்ளுகொள்ளு
முன்னையான மேகவகை யிருபதுமேபோகும்
சட்டியோ யிந்தமுறை யாருஞ்சொல்லார்
என்னுடைய நிசமாகக் கொண்டுபாரு
காட்டாதே இக்கண்ணெய் ஒருவருக்கும்
கைமுறையாய்ச் சொல்லிவிட்டேன் கண்டுபாரே. (225)

அறுக்காரக்குரணம்.

கண்டிடா யமுக்கராச் சூரணத்தைக்
கருகவே பலம்பத்து நிறுத்துக்கொண்டு
வண்டூடாய் வடிகொண்டு சூரணமேசெய்து
வால்மிளகு குரோசாணி பறங்கிப்பட்டை
கண்டிடாய் கருஞ்சீர கம்கடுக்காய்சுக்கு
கடுகுரோ கணிவாலு மூவையரத்தைதிப்லி
இண்டிடாய் வகைவகைக்குப் பலமேதாக்கு
இடித்ததனை முன்மருந்திற் சமனாய்ச்சேரே. (226)

சமனுகச் சீனியொரு நாளிலொன்று
சாதித்து வெருகடிதான் அந்திசந்தி
அமனுக ஆவின்நெய் சேர்த்துக்கொள்ளு
அரையாப்பு மேகவெடி கிரந்திகுஷ்டம்
எமனென வாயுவொடு கடிவிஷங்களெல்லாம்
எலிகடியும் விஷங்கள் பூரான்செய்யான்
கமனுன மேகமொடு வாதபித்தம்
கழன்றுபோம் பத்தியந்தான் கண்டுகொள்ளே. (227)

சொன்னவது கைப்போடு புளியுந்தள்ளு
கொள்ளவே மற்றவெல்லா மிச்சாபத்யம்
தள்ளாதே அப்பாகேள் ஆடாதோடை
சாற்றுகின் லேகியமாய்ச் சகலநோய்க்கும்
கொள்ளவே தோடையது சமூலங்கொண்டு
குபிப்பாக நிழலுலர்த்திச் சூரணமேசெய்து
விள்ளாதே பலம்பத்து நிறுத்துக்கொண்டு
மிளகோடு கொத்துமல்லி அரத்தைசுக்கே. (228)

ஆடாதோடை லேகியம்.

சுக்கான அதிமதுரம் தாளிசபத்திரியும்
சுகமான இந்துப்பு பேரரத்தைகோஷ்டம்
நைக்கவே கருஞ்சீரம் கடுகுரோகணியும்
காகப்பூ வாலுழுவை கிராம்புதேக்கு
எய்க்கவே விடையம்வகைக் கொருபலமேசொன்னோம்
இடித்துமே முன்பருத்திற் சமமாய்ச்சேரு
ஈக்கவே சீனியதில் நாலத்தொன்று
ஆனநெய் தேனதிலே யருந்தக்கேளே. (229)

அருந்தவே லேகியமாய்ப் பண்ணிக்கொண்டு
அந்திசந்தி கொட்டைப்பாக் களவுகொள்ளு
அருந்தவே சயரோக மந்தாரகாசம்
அத்திசுரம் பித்தமொடு வாய்வுசாந்தி
அருந்தவே குத்திருமல் சிறுக்கிருமல்புகைச்சல்
ஆகாத புரட்டல்பித்தம் கிறுகிறுப்புவாட்சி
அருந்தவே குலைபெரிவு குடல்புரட்டெல்லாம்போம்
அப்பாஇச் சாபத்யம் புளிப்புகைப்புதவிரே. (230)



காந்தைச் சூரணம்.

தவிரவே நற்கரந்தைச் சூரணத்தைக்கேளு
சார்வான கரந்தையது நிழலுலர்த்திப்
பவிரவே யிடித்ததனைச் சூரணமேசெய்து
பலம்பத்து நிறுத்தப்பாற் பகரக்கேளு
தவிரவே கருஞ்சீரம் கடுக்காய்தானி
கல்வசம்பு திப்பிலியு மிளகிந்துப்பு
திவிரவே வாலுழுவை கோஷ்டஞ்சுக்கு
சிறுதேக்கு கார்போகி சித்ரமூலம். (231)

சித்திரமாய் வகைவகைக்குப் பலந்தானொன்று
சேருக கற்பூரம் பலமுக்கால்தான
சித்திரமாய் யிடித்ததனைச் சூரணமேசெய்து
திகழ்கரந்தைச் சூரணத்திற் சமனுப்சேரு
சித்திரமாய்ப் பனைவெல்லம் சர்க்கரையுந்தேனும்
சேர்த்துமே ஆவின்நெய் விட்டுக்கிண்டு
பத்திரமாய் நாளொன்றுக் கந்திசந்தி
பருங்கொட்டைப் பாக்களவு கொன்றுகொள்ளே. (232)

நற்கரந்தை லேகியம்.

கொள்ளவே குஷ்டமொடு கிரந்தியரையாப்பு
கொடிதான மேகவெடி காப்பானுந்தல்
மெள்ளவே நெஞ்சடைப்பு நடுக்கமேனி
வெளுப்புபடர் தாமரையும் அழுகணியுங்குலை
கொள்ளவே பவுத்திரமும் புரைபுண்ணுறுக்
குளுவானை அழுகண்ணி அசிரெந்திசொரியும்
தெள்ளியே ஆனைச்சொரி தவளைச்சொரிதேமல்
தீராத வெடிகாப்பான் தீருந்தானே. (233)

தீரவே சகலநோய்தீரக்கேளு
சீரகத்தோ டதிமதுர காமப்பூவும்
சாரமாம் கருஞ்சீர கம்சன்னலவங்கம்
சதகுப்பை வகைவகைக்குப் பலந்தானொன்று
கூரவே சர்க்கரையும் ஆறுபலஞ்சொன்னோம்
கொத்துமல்லி பலமாறும் சமனுப்கூட்டிச்
சேருமே வகையென்ன பன்னிரண்டாச்சு
சீனிகற் கண்டுபலம் பன்னிரண்டாமே. (234)

அமிர்தாதி ஆடமோதகசூரணம்.

பன்னிரண்டும் வெல்லேவேறு பிடித்தொன்றாய்ப்
பாக்கான காசியென்ற மேறுகிலே அடைத்து
உன்னியே வெருகடியுண் அந்திசந்தி
புடன்கொண்டு ஒருமாதம் வெந்நீர்கொண்டு
குன்றுமே சீரமது இடமதாகும்
குலையிசிவ கெருதுகமலி கெருத்திடமாகும்
உன்னியே ரோகமெல்லாந் தீரும்
ஒழியுமே பித்தவாயு புரட்டல்தீரும்
கண்ணில்நீர் பாய்ச்சலுங் கிராணமாகும்
கலக்காது புத்தியதன் மாறும் தீரும். (23

தீருமே சித்தசுரஞ் சுரமுண்டாகும்
தீராத புழுக்கடிகு சேரப்போகும்
வாருமே சிரிப்புவலி கல்லடைப்பு
வாய்க்கோணல் வாய்க்குறது மாந்தபித்தம்
தீருமே செங்கோயும் செனிமையும்
சேர்ந்தமூலம் பிலிமியோடு அரோசனையுந்தீரும்
சாருமே தொண்டைப்புண் கண்டமாலை
சரீரத்தில் தீர்ந்திடும் சார்ந்துபோமே. (236)

அமிர்தாதி மாத்திரை.

போமென்ற அமிர்தாதி உண்டைசேரு
புகழ்ச்சக்கர செங்கனிசெர் பசும்பூக்கோஷ்டம்
வேமென்ற வெட்டிவேர் வமைதமைச்
சிதலைகுசாந் திரிபதி மரிப்பஞ்சை
காமென்று தானிக்காய் வகைவகைக்குக்
கால்நறுங்கிரண்டு முறைப்பாலாற் கருகியாட்டி
ஆமென்று இலைவிட்டால் வெட்டி வெச்செயாறும்
ஆட்டியே கடலையாம் உண்டைசெய்யே. (237)

செய்யிதுமே நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
திறமான நூசெய்பாலில் வெந்நீரிடவே
மைதுமே குடற்புரட்டு உழலைக்காந்தி
தாபசுரம் பித்தசுரம் சார்ந்தபோகும்
பொய்துமே சன்மார்க்க மந்தசன்னி
புழுக்கடிக்கட் போர்மாந்தம் கைவெட்டையும்
எய்துமே இரும்பின்ன ரோகமெல்லாந்தீரும்
இதமான அமிர்தாதி உண்டைசொன்னேன்
பொய்தவே சுயமாக சேரணைபாரண்டு
போகவே சித்தாதி புகலக்கேளே. (238)



சிந்தாதிலேகியம்.

புகலுகிறேன் புளியிளிலே பலந்தானொரு
புகழான அருப்பிடித்த இரும்புதிலேயாதி
திகலுகிறேன் முல்லைவேர் சாரணைவேர்
செருஞ்சிவேர் கழுதாழை கண்டங்கத்திரி
செகலான கரிமுள்ளி இழக்காய்கல்லி
செம்முள்ளி வகைவகைக்குப் பலந்தான்பத்து
இகலுகிறேன் முன்மருந்தோ டொக்கச்சேரு
இவையெல்லா யிடித்தொரு பாண்டத்திட்டே. (239)

இட்டுமே யிருநாழி சலந்தான்வார்த்து
எரித்ததனை யெட்டொன்றாய் வற்றக்காய்ச்சிக்
கட்டுமே கெஷாயத்தை யிறுத்துவாங்கி
கரிசாலைச் சாறதிலே படிதானொன்று
கொட்டியே பழச்சாறு படிதானொன்று
கொமட்டிமா துளைச்சாறு படிதானொன்று
கட்டுமே யிருள்ளிச் சாறுபடியொன்று
நல்லெண்ணெய் படியொன்று அதிலேவாரே. (240)

வார்த்துமே கொதிக்கையிலே மருந்துசேரு
வளமான விஞ்சியோடு தேவதாரம்
சேர்த்துமே செவ்வியந்திப் பிலிபிலமும்
திரமான வகையொன்று பலந்தானாகத்
தூர்த்துமே குரோசாணி யோமதிப்பிலி
கருஞ்சீர கம்ஓம மிலவங்கப்பட்டை
வார்த்துமே கடுக்காயும் ஆவலரமொட்டுரும்பு
வகைக்கோரீப லம்பழங்கிட் டம்தாலுகூட்டே. (241)

கூட்டுமே யிவையெல்லா யிடித்துத்தூளாய்க்
கூறவே கியாழத்தில் போட்டுக்கிண்டு
வட்டுமே பனைவெல்லம் பலந்தானொரு
லேசகசெந் தூரமது ரெண்டுபலம்போடு
விட்டுமே ஆவினீர் கொஞ்சமப்பா
விட்டதனை லேகியமாய்க் கிண்டிக்கொண்டு
ஆட்டுமே காலொன்றுக் கந்திசந்தி
அப்பனே கோரமொரு பாக்களவுகொள்ளே. (242)

கொள்ளவே பாண்டுகா மகோதரமை
    குத்தலொடு பீனிசம் சுவாசகாசம்
கொள்ளவே மின்னலை வயறதிலெல்லாம்
    குலைந்திடச் சிறுநீர் கெடிப்பதாகவே சொன்னேனும்
கன்னவே வெடியக்காரன் கொள்ளுத்தோபாடு
    வைப்பொடி புளிப்புளையும் நீர் நன்று
வெள்ளாட்டு வறுமையற வழத்தப்புக்கட்டு
    விளம்பியேன் சாரங்கள் தீரனைச் சொல்லேன். (243)

சொல்லியே தூதுவளை கண்டங்கத்திரி
    அனைத்துமடைய செருப்படியும் விஷ்ணுகாந்தி
செல்லவே கிளைபச்சை வெள்ளைகோரைக்கிழங்கு
    சிறுமுட்டி பேராமுட்டி வெள்ளைப்பூத்துமடை
செல்லவே குமரிதி போமல்லி
    சிறுகுறிஞ்சான் சிந்தாமணி புனல்முருங்கை அவுரி
என்னவே சொன்னதொரு வேருவகையெல்லாம்
    இடித்துமே வகைவகைக்குக் கழஞ்சிரண்டு
செல்லவே சிற்றரத்தை அதிமதுரங்கோஷ்டம்
    சிறுநாகப்பூவோடு சிராமூபிப்பிலியே. (244)

திப்பிலியும் மிளகுடன் கனிக்காய்க்கு
    சீரகமுங் கருஞ்சீரகம் கடுகுரோகணியேலம்
ஒப்பிய கிலவிரா வெளிலவமிதிலும்
    உத்தமமே வகைவகைக்குக் கழஞ்சிரண்டு
கப்பரிய அவுரிச்சாறு குடநீரதை
    காசிலே இருபுனலாய் விடியார் கூந்தல்
செப்பியே சமுத்திர சாமமந்த
    சேர்த்தரைத்து உண்டைபண்ணி வைத்துக்கொள்ளே. ()

சுரங்கிமாத்திரை.

வைத்துமே மிஞ்சிசீர் முலைப்பால்வெந்நீர்
    கிலைவிட்டால் சொக்கிவிக்கு சன்னிசமாதிதனில்
உய்த்துமேமெழுகுவலை அதுபானகத் தன்னில்
    உத்தமமே சேயம் தீர்த்து முழுவுண்டைகொள்ள
வைத்துமே சரியெல்லாம் காடாதோகெடும்
    கவனமாய்ப் பத்தியமாய் பார்த்துக்கண்ணி
உய்த்துமே கிராம்புச வாதசன்னி
    உத்தமமே மாத்தடிக்குஞ் சூதப்பிசமைவாடு
உய்த்துமே குளிர்சுரங்கள் வடிதலைமாதந்த
    உப்பிசமும் போமென்று உரைத்தனரே. (245)



வாருமே கொக்காயின் கெடிபட்டதை
    வைரமாகச் செய்துநிறேன் மக்காள்கேளும்
பாருமே அதிக்காய்த்தான் கொட்டைபோகச்
    பலிப்பத்தாக் கிணத்துவே பலந்தானிரண்டு
வாருமே கசிசாலோ பலந்தானிரண்டு
    வல்லாரை புளியாரை வகைக்கிரண்டு
காரமே தீவாரை பலந்தானிரண்டு
    கருதியே இடித்துக்கொண்டு சூரணமே செய்து
சீரான கடுரோகணியுப்பு
    இப்பிசிறு நாகப்பூ வசுமுட்டுவைசிக்கி. (247)

சிம்பியொடு கருஞ்சீரகம் பொதுதானி
    சிறப்பான கொத்தமல்லி தாளிசபத்திரியும்
இக்கிவே வகைவகைக்குக் கழஞ்சுலமேதுக்கி
    இடித்துமே வடிகொண்டு முன்மருந்தில் சேரு
மங்கியே போகமத் கவனமாக
    மருந்திலே புளிப்பை அக்கவேறும்
தங்கியே பாலின்கெய் தேனுமிட்டுச்
    சர்க்கரையும் போட்டு வேயமாய்ப்பண்ணே. (248)

பண்ணியே நாலொன்றுக் கல்திகந்தி
    பருக்கெட்டைப்பாக்களவு கொள்ளுகொள்ளு
தின்னியே நீரும்நோய் செவுல்லக்கேளு
    செலக்கட்டு மலக்கட்டு கோலுக்கட்டு
உண்ணவே உஷ்ணவாய்வு மேககாந்தி
    உள்ளங்கால் கையெரிவு கண்ணெரிவுபாட்டல்
எண்ணவே மூலத்தில் அதிகாகந்தி
    இளைப்பிருமல் புகைச்சலொடு வறட்சிசோகைதீரும்
எண்ணியே பத்தியமாய் உண்டுதேறு
    இதைவிட்டால் கற்பவே ஒண்டோசொல்லே. (249)

இஞ்சிலேகியம்.

சொல்லவே இஞ்சிலே கியத்தைக்கேளு
    தோல்போக்கிப் பலம்பத்து சீவித்துக்கொண்டு
மல்லவே பலச்சாறு வாட்டினைபோல்
    மைத்தனே சட்டியிலே யிட்டுக்கேளு
அல்லவே சீரகமு மிளகோடேலம்
    அதிமதுரம் திப்பிலியுங் கோஷ்டமூலம்
கல்லவே வாதுமை தாளிசபத்திரியும்
    கடுகோடு கொத்தமல்லி சித்திரமூலம்
அவ்வயே கிராம்பியொடு குரோசாணியோமம்
    அப்பனே வகைக்கிரண்டு பலமேதூக்கே. (250)

ஆக்குகரி சாலிபூ வரவும்பழச்சாற்றால்
அவனைரைத்து முன்மருந்தோ டொக்கச்சேரு
வக்கமாம் பிரண்டையது வேரிதுப்பிட்டு
உலர்த்திடித்து ஒருபலமே போட்டுப்போடு
வுற்கவே யிதுபோலே யாருஞ்சொல்லார்
இதையறிந்து செய்பவனே வைத்தியனுமாவன்
ஆக்கவே வங்காளச் சீனியப்பா
அதிற்பாதி போட்டரவி வெய்யில்வைத்தே. (251)

வெய்யார்த்து லேகியம்போற் பண்ணிக்கொண்டு
சேரமொரு பாக்களவு அந்திசந்திகொள்ளு
பொய்யல்ல பித்தவாய்வு உஷ்ணகாந்தி
புரட்டுவாந்தி வயிற்றுவலி பித்தகுன்மம்
மெய்யான அஸ்திசுரம் சன்னிதோஷம்
வீறான எரிகுன்மம் அசீரணவாய்வு
செய்யவே வரப்பிணியும் அரோசிகமுந்தீரும்
தியனமாம் பத்தியறிந்து சேரக்கொள்ளே. (252)

சீரான வாதமென்ன வைத்தியமென்ன
செய்முறையோ டளிந்தங்கள் செய்யவென்ன
பசாரண பலநூலும் பார்க்கவேணும்
பார்த்தறிந்து செய்திற பாகம்வேணும்
கூறான சரக்குவகை யிணமறியவேணும்
குருவாசான் கைதொட்டுக் காட்டவேணும்
சார்வாக விதைவிட்டு முறைதப்பாய்ச்செய்து
சாஸ்திரம்பொய் யென்பார்கள் சண்டாளர்தாமே. (253)

பொய்யென்று சாஸ்திரத்தைச் சொல்வாருநில்
புழுவான பாழ்நரகில் வீழ்வானப்பாவி
மெய்யென்று குருபதத்தைத் தொண்டுபண்ணி
வேதாந்தம் பலநூலும் விரித்துப்பார்த்துக்
கைமுறையும் குருமுகமாய்க் கண்டுதேறக்
கற்றவரை வணங்கியே சொல்லக்கேட்டுப்
பொய்மறந்து மெய்யுணர்ந்து அறிந்தகூடப்
பூரணமே தெய்வமென்று போற்றிநித்தம்
துய்யவனே முறைபோலே செய்வபாரு
தோட்டத்தொரு வித்தையெல்லாம் பலிக்கும்பாரே. (254)



பூர்பமதறு.

பலிக்கவே கருவென்ன பூதிசாதம்
பாக்கான வாதமொடு வைத்தியமுஞ்செய்யும்
பலிக்கவே சொல்லாமல் மறைத்தார்சித்தர்
பாடினார் சாஸ்திரத்தில் முன்பின்னாகப்
பலிக்கவே சொல்லுகிறேன் பூநீறுவாரி
பத்துமுறை சுத்தசலம் தெளித்துக்காய்ச்சிப்
பலிக்கவே குருவாக வைத்துக்கொண்டு
பாடியதோர் வைத்தியத்தில் பாகங்கேளே. (255)

பாகமாக் கைலங்கள் வடிக்கும்போது
பாங்கான வடிகலசம் கழுந்திருக்கும்போடு
பாகமாம் கட்டினமும் முறுக்கினமும்பண்பாம்
பாங்கான லேகியங்கள் செந்தூரங்கள்
பாகமாம் குருவதிலே சேர்த்துப்பண்ணு
பூங்கான வைத்தியந்தான் திரமோமெத்த
ஆகமா மித்தைவிட்டால் வாதம்பொய்யாம்
ஆகாசப் பரிதியப்பு வேகந்தானே. (256)

நாவென்ற விதிறுவோ வெடியுப்பாச்சு
சத்தியுட நாதமென்ற கெந்திசேரில்
ஆமென்ற அண்டமண்ட முருகிப்போச்சு
அரசர்கெடி கற்கோட்டை யிடியலாச்சு
போமென்ற சாரமென்ன வெடியுப்பாச்சு
புகழான சாரமென்ன நவச்சாரமாச்சு
ஆமென்ற சாரசார பிரண்டுஞ்சேரில்
அறுபத்து நால்சரக்குங் கட்டிப்போச்சே. (257)

போச்சென்ற சாரம்விட்டால் காரமில்லை
புகழான சாரம்விட்டால காரமில்லை
ஓச்சென்ற காரத்தின் மகிமையென்ன
ஒன்பதுநீர் சாரமொரு நவச்சாரமாச்சு
தேச்சென்ற காரத்தின் மகிமைசொல்லச்
சித்தர்முதல் ரிஷிகளால் முடியாதப்பா
ஆச்சென்ற ராமதேவர் சாரக்கொட்டு
ஆறுநூ றேழுபுகம் வாதம்பார்த்தார். (258)

பார்த்திட்ட காரமென்ன உப்புசப்பு
பாங்கான உவருப்பு மன்னுவாரி
வேத்திட்ட மும்முறைதான், சாய்க்கவேக்கள்
வெடியுப்பாங் கடையில்விற்குங் கடுங்காரமில்லை
ஆத்திட்டு வாதமுறை செய்யவென்றால்
அக்கவுப்பை வாங்கியதிற் கரைசலத்தில்
வார்த்திட்டு அடுப்பேற்றிக் காய்ச்சியுப்பு
வளருமட்டும் பதம்பார்த்து மறுபாண்டம்வாரே. (259)

வார்க்கவே சம்பீரம்போல் வளருமுப்பு
மதத்தமந்த உப்பினை சுத்தசலம்விட்டுப்
பார்த்துமே யடுப்பேற்றி யெரித்துக்காய்ச்சிப்
பதம்பார்த்து மறுபாண்டத் தெடுத்தவாரு
பூர்த்துமே கருவெண்ண பழச்சாறுபோரு
புரைக்குத்த மாப்போலே கொஞ்சம்வாரு
ஆர்த்துமே பொங்கியது வளர்ந்துநின்ற
அதிமதுரம் வெடியுப்புக் கடுஞ்சாரமாச்சே. (260)

வெடியுப்புசெயநீர்.

காரமா மிந்தவுப்பு வேதைக்காகும்
கடைதனில்முன் னுங்காய்ச்சல் சுருமருந்துக்காகும்
காரமாம் வெடியுப்பைச் செயநீர்செய்யில்
கருதியே சாக்கெல்லாங் கட்டிக்கொள்ளும்
பாரமாம் வாதத்துக் காகுமுப்பு
பார்த்திட்டார் சித்தரெல்லாம் வேதைகோடி
ஆரமாம் வெடியுப்புச் செயநீரொரு
அறைகிறேன் ஆறுநீர் விவரந்தானே. (261)

விவரமாம் வெடியுப்பு அஞ்சாக்காய்ச்சல்
விளங்கவே பலம்பத்து நிறுத்துக்கொண்டு
கவராகுஞ் சீனமது பலந்தான்ரெண்டு
கண்டாது பலமிரண்டு குடன்ரெண்டு
இவராங் கடல்நுரையும் பலந்தான்ரெண்டு
ஏறிவந்த சிப்பியது பலந்தான்ரெண்டு
அரவமாம் வெடியுப்போ டொக்கச்சேர்த்து
அப்பனே கல்வத்தில் அரைக்கக்கேளே. (262)



அரைக்கவே அமுரினிலே புரட்டிப்
அக்கினியு டண்டமேலே கருவர்க்கட்டி
உரைத்துமே அரைத்ததினில் மிகவேபிறக்கவைத்து
ஓட்டிவிட்டு மேலோடு கோணமூடி
நிறைத்துமே சீலைசெய்து மூடிப்புடத்திற்போடு
நீறியது சுண்ணமாய் நீற்றுமாறு
குளைத்துமே சுண்ணத்தில் கைச்சாரம்போதி
கட்டியே பொடிபண்ணிச் சீசாவில்வையே. (263)

வைத்துமே சாடிவாய்ச் சட்டியிலேதான்
வனையம்போற் சீசாவிட்டுத் தண்ணீர்வார்த்து
ஈத்துமே பிங்கானை யதில்வைத்து
அசையாமல் மேல்சட்டி கவிழ்த்துமூடிக்
குப்பத்துமே காற்றில்லாக் குளிர்விடத்தில்
குழிவெட்டி பானைவிட்டுத் தண்ணீர்வார்த்து
வெய்த்துமே குழியிலிறக்கிச் சட்டிவைத்து
மேலொரு சாடிகொண்டு மூடிப்போடே. (264)

மூடியே பட்சத்தி லெடுத்துப்பாரு
மூரியாதே புகடியற்றுச் சலமாயிருக்கும்
ஆடியே செயநீரைச் சுப்பியிலேவாங்கு
ஆத்தாளுக்கும் மிசனுக்கும் பூசைபண்ணு
வாடியே செயநீரில் வீரம்பூரம்
வகைக்குவரு வராகனிடை பொடித்துப்போடு
பாடியே பாவனை மதுபதனாறும்போடு
பரிவான வைணவகை பிருபத்தருக்கும்
வாடியே கட்டுவாரு நூற்கிளறுமோரும்
உபாசங்கள் சத்தாரு மெழுகுமாமே. (265)

மெழுகாகுஞ் சாக்கெல்லாந் தனித்தனியேகட்டும்
வேதைகளிட வெருதார மெட்டிலேயொடும்
மெழுகாகு நவலோக மெல்லாஞ்சேரும்
விட்டாட்டச் சூதமது வெண்ணெய்போலாக்
குழகாகுஞ் சூதவெண்ணெய் வேதைபாரு
காரீயந்தான் வெள்ளியாஞ் செம்பாகுங்
அழிவான வொதவிடோடு வாழிசத்திப்பத்தான்ரண்டு
அருதியே குக்கிரதில் கலந்தேதான்றப்
பழுதில்லா வைமனிவள் கொத்திட்டாப்போல்
பாங்காய்க் கைமுறையாய்ப் பாடினேனே. (266)

மைகண்டமாருதத்தூரி.

பாடுகிறேன் மைகண்டமாருதத்தூரி
    பார்த்திட்டால் சோகைகளெல்லாம் பறந்துபோக
நீடிவெள்ளைப் பாஷாணஞ் சேயுமிங்கம்
    நெறிவீரமு மிர்தாருங் கெவுரிதத்தஞ்
ஆடியே வெண்காரம் வீரபுரந்
    அந்தமொடு பவளிரசமும் வெவ்வேறாகக்
காடியே வெதுப்புச் செயநீரிலே
    காட்டியே வகைவகைக்குக் கழஞ்சுகொண்டே. (267)

கழஞ்சிரண்டு அப்பிரக நவநீதநாரான்
    கட்டியதோர் செந்திரம்பு குருவும்ரெண்டு
வழங்கியே யிவையெல்லாங் கல்வத்திட்டு
    வறக்கும்பால் பின்னடிச்சாறு முருக்கிலைச்சாறு
பழச்சாறு தழுந்தியே நால்தாமரைச்சாறு
    கற்றாழைச் சாறதும் பட்டைச்சாறு நாவல்பட்டைச்சாறு
உழுந்தியே காக்கைச்சாறு வெலியல்லிகைச்சாறு
    உத்தாமணி போடவுரி மேனிச்சாறும்
அழுந்தியே வெடியுப்பு சீருக்கேறு
    ஆட்டுநீ சாறொன்று சாமமொன்றே. (268)

சாமந்தான் பனிரண்டு ஆட்டிவில்லை
    சாதகமாய்க் கட்டியே ரவியுலர்த்திச்
சேமென்ற வோட்டிலிட்டு மேலோடுமூடிச்
    சீலைசெய்து முழப்புடத்தில் செந்தூரமாகுங்
காமென்றே யெடுத்ததனைக் கல்வத்திட்டுக்
    காந்தசெந் தூரமொடு லோகசெந்தூரந்
தாமென்ற காரீயம்வெள் ளீயச்செந்தூரந்
    தாம்பிரசெந் தூரமொடு நாகசெந்தூரமாமே. (269)

செந்தூரம் வகைக்கிரண்டு கழஞ்சிடைதானப்பா
    சிறப்பான கஸ்தூரி கழஞ்சிரெண்டு
சுந்தரமாஞ் சுத்தித்த வாளம்ரெண்டு
    சுத்திசெய்த கருநாவி கழஞ்சிரெண்டு
சுத்திரமா யிவைகளைத்திப் பிலிபினைழலை.
    சுருஞ்சீரஞ் சதகுப்பை சித்ரமூலம்
மந்திரமாத் திரிகடுகு கிராம்புகோஷ்டம்
    மாவிலிங்கு முருங்கைவேர் கருக்கம்வேரே. (270)



எருக்கோடு விலாமிச்சங் கோரைக்கிழங்கு
    இவையெல்லாம் வகைவகைக்குக் கழஞ்சிகட்டி
அருக்கோடு சேரவே கல்வத்திட்டு
    அரைக்கவே சாறுவகைக் கியாழங்கேளு
கருக்கோடு தூதுவளை கண்டங்காலி
    தும்பையெய்த் தும்பையொடு துளசிகாந்தி
பெருக்கான சித்தமல்லி பேராமல்லி
    பெருகுமிழுஞ் சிறுகுமிழும்புனல்முருங் கைவெண்ணொச்சி.

நொச்சியொடு சிற்றாமுட்டி பேராமுட்டி
    கோக்கரிய குருந்தொட்டி முக்காவேளை
நச்சியே யிவையெல்லா மிடித்துக்கொள்ளு
    கஷாயந்தா னெட்டொன்றாய்க் காய்ச்சிவாங்கி
அச்சியே கஷாயந்தான் நாலுசாமம்
    அவுரிச்சாறு கரிசாலை குமரிச்சாறும்
இச்சியே மேனிச்சாறு பிரமிச்சாறும்
    செப்பவே யிவையெல்லாஞ் சேர்த்துக்கொண்டு
அச்சியே சாறுவகை சாமமிட்டு
    அரைத்திடவே பன்னிரண்டு சாமமாகும்
உச்சிதமாங் களையதனைப் பூசைபண்ணு
    உருண்டையாய் உண்டைசெய்து நிழலுலர்த்தே. (272)

உலர்த்தியே நோயறிந்து அநுபானஞ்செய்து
    உத்தமனே ஒருஉண்டை அநுபானத்தில்
தலர்த்தியே ஒருஉண்டை கொள்ளும்போது
    சன்னிவகை தொண்ணூற்று ஆறுமெங்கே
அலர்த்தியே பதினெட்டுச் சுரதோசமெங்கே
    அசையாத வாதபித்த சிலேற்பனந்தானெங்கே
துலர்த்தியே பெட்டுவகைக் குன்மமெங்கே
    தொலையாத வாயுவெங்கே வாதமெங்கே. (273)

எங்கேபோம் சயமினோ மந்தாரகாசம்
    எத்தரிய வட்சுத்தப் புறவீச்செங்கே
தங்காது முயல்கண்டன் குமரகண்டன்
    தருவாதம் காக்கைவலி குதிரைவலிமாந்தம்
மாங்காத பதினெட்டுக் குஷ்டங்குலை
    வாடுமொடு இரத்தியளை யாப்புக்காசம்
தங்காது செப்பகோய் குதகவாய்வு
    தரியாது பெருவயிறு பீலியுமாந்தை. (374)

மார்க்கந்தயாம் விரைவாதம் அண்டவாதம்
  மாரடைப்பு வாய்வாய்வு அத்தவாய்வு
மார்க்கதயாம் குத்திரவாய்வு குன்மவாய்வு
  மத்தார் மிகைச்சம் குக்காசம்
தாக்கிநிகர் சுவாசிபோல் வெப்பிரசகணனி
  சத்திவிக்கு காமாசி பாண்டுகளனி
மார்க்கமிய கோவெல்லாம் மாமந்தனம்
  மகாவேதசண்டமாருதக்குளிகையன்னே. (275)
என்னவே அப்பிரகச் செந்தூரத்தை
  இதமாக … அப்பிரேகமது
தன்னயமாய் … காய்ச்சிக்காய்ச்சி
  நயமாக … தன்னிலே தாய்த்துச்
சன்னவே … பொருத்தினபின்பேர
  சிறுதனி … தனையாய்
வெண்ணவே … கவிதப்பணனி
  மேனியிட சாறுவிட்டு ஒருசாமமாட்டு
உன்னிய வில்லைதட்டி உலரவிட்டு
  நாட்டிவிட்டு மேல்வாக் கொண்டிறமே. (276)
மூடியே முழுப்புடத்தில் விட்டெவாக்கு
  முடியாதே ஆட்டிமுனைபோல் புடத்தைப்போடு
மூடியே மேனியில் புடத்தைப்பத்து
  முன்வகைச் சாறதில் புடத்தைப்பத்துப்
போட்டவே பொறறிவின் சாறதிற்பத்துப்
  பொன்கானிச் சாறுபத்துக் கணிச்சாறுபத்து
நீட்டவே மல்லிகைச்சாறு பலநத்தகானி
  நீர்முள்ளி முருங்கைச்சாறு கற்றாழைச்சாறு
ஆட்டலே அமுரிச்சாறு முன்முனைக்கைச்சாறு
  அப்பனே ஒவ்வொன்றிற புடத்தைப்பத்தே. (277)
பத்தென்ன முனைபோலே அரைத்துப்போடு
  பக்குவத முழுக்கரு தினமங்கெரு
வித்தென்ன குருவத்திலே நிகருக்கேரு
  வெடிப்புப்பு நீராலே சமமாட்டி
வைத்தபே வில்லைதட்டிக் காயவைத்து
  கவனமாக முனைபோலே புடத்தைப்போடு
வைத்துமே வெடித்தப்பின செயநீராலே
  ஆட்டியே முனைபோலே புடத்தைப்போடு
வைத்துமே இப்படியே பத்துமுறைபோடு
  அய்யமாய் வெடியுப்புச் செயநீராலே
வைத்தபே போகாதே அழுக்கிரத
  சகுலை தப்பிரகம் செந்தூரமாமே. (278)



செந்தூரத்தை சொல்வேன் தன்ன புதிவெண்டி
  செவ்வனைதெய்யாரு சட்டியிலே விட்டுமேலே
செந்தூரம் பண்ணிடைத்தான் செலுத்திப்போட்டுச்
  சிறுக்கையின் மேலேயொரு சூஞ்சைதப்போட்டுச்
செந்தூரம் உருகுதக்கைத் தாக்கிற்றோ
  செய்யாது பின்னாவிட்டுப் பார்த்தின்புகோறு
செந்தூரம் தளிர்வெந்துத் தக்கலவத்திட்டுச்
  சிறப்பாக ஆட்டிமுனைபோல் புடத்தைப்போடே. (279)
போட்டவே அப்பிரகச் செந்தூரமதை
  புகழாகுடு நாழிகை பாரக்கட்டுதால்
வாட்டவே வெடியுப்புச் செயநீர்விட்டால்
  வழமுன்றி … மழுக்கறு
கூடியே மழுக்கிறுத்த ஆட்டிவிட்டுதும்
  குடிக்கிறும் அபிரகிசத்தாய் குணமாகது
தேடியே செந்தூரம் திறமாய்ச்செய்து
  தின்றிடவே சேவிப்பது செப்பக்கேளே. (280)

தத செந்தூரம்.

செப்பிய சூதமைக் ஆரக்கேரு
  திருமான குருமுடு பலந்தானபத்து
ஒப்பிய செந்தூரம் இரண்டமரபோல்தான்
  ஓட்டிவிட்டுச் செந்தகைசார அழுகும்போது
மப்பெரிய குதலைதக் கொட்டிக்கின்று
  மண்போலே அருமைதக் கல்வத்திட்டு
அப்பெரிய விட்டுச்சுவைக் காற்றுவழைமனா
  வைரத்தம்போ பெருமாக்கி குப்பிக்கேற்றே. (281)
சுற்றிவே வாலுகையிற் போட்டைத்தை
  எரித்திடுதிப் போல்போல் மூன்றுசாமம்
ஆறியே மறுபடிப் பரைத்தமுன்போல்
  அப்பனே வாலுகையில் வெரித்துவாக்கு
பொற்றியே மறுபடியும் கல்வத்திட்டுப்
  புகமுன முன்சாறு வாட்டுத்தானாய்
ஆற்றியே குப்பிக்கு அழையவாகிவிட்டு
  அப்பனே வாலுகையில் திலையுறட்டே. (282)

மூட்டியே தீபம்போல் மூன்றுசாமம்
முறையாக எரித்திடவே கருவைக்கேளு
பொட்டியே தாளகந்தான் பலமும்ரெண்டு
பொடிசெய்து வைத்துநீ கொஞ்சங்கொஞ்சம்
ஆட்டியே குப்பியிலே போட்டுப்போட்டு
அப்பனே கிண்டிவா சலாகையாலே
நீட்டியே அடியிலே மருந்தில்லாட்டால்
சீரான பதமென்று அப்படையுத்தே. (283)

ஆற்றவே செந்தூரம் அருணன்போல
மப்பிலே தேங்காய்ப்போ லிருக்கும்பாரு
தேற்றியே தாளகந்தான் போடாவிட்டால்
சிவக்காதம்மயில்கழுத்து வர்ணம்போலாம்
பார்த்துமே ஆத்தாளைப் பூசைபண்ணிப்
பணவிடைதான் செந்தூரம் பனைவெல்லத்தில்
ஆர்த்துமே அன்னுக்குக் கொண்டாயானால்
அரையாப்புக் கிரந்திகுஷ்ட ரோகம்போமே. (284)

போமென்ற பத்தியமா யுண்டுதேறு
பொல்லாத குன்மமொடு வாயுசூலை
தாமென்ற பேசவடி கழுதண்ணியுஞ்சூலை
தவளசொறி வெண்குஷ்டம் அழுகண்ணிகரப்பான்
சுமென்ற சேரவெல்லாம் நாடாதோடும்
நல்லதொரு செந்தூரம் தன்னடக்கி
ஆமென்று அரைத்துமுன்போல் தக்கஞ்சேர்த்து
இந்துதாம் வைத்தெடுக்க அருணனாமே. (285)

அருணனாஞ் செந்தூரம் வேதைபிட்டால்
அழகான நவலோகம் பத்துமாற்று
மருணனாம் வாதத்தில் சித்தரெல்லாம் (னேன்
வைத்துவைத்த கருவையெல்லாம் வெளியாய்ச்சொன்
கருணமாங் குருமுடிக்க வகையுஞ்சொன்னேன்
கருவான யானைக்கால் கண்டுபாரு
தருணமாம் வைத்தியத்தில் முறைதப்பாமல்
சாற்றினேன் கேமாகும் சார்ந்துபாரே. (286)



மகா திராவகம்.

பாரப்பா மகத்தான திராவகத்தைப்
பாடுகிறேன் யானுக்கா பரிந்துகேளு
பாரணமாம் கோவெல்லாம் மாண்டுபோக
மகத்தான சரக்கெல்லாம் கட்டிப்போகக்
காரணமாம் சித்தரெல்லாம் மெச்சிக்கொள்ளக்
கைமுறையாய் ரசவர்க்கம் கைக்குள்ளாக
காரணமாம் சாயுருவி குப்பைமேனி
கைத்தாளி காணலெண்ணல் சுதளியெருக்கே. (287)

அதளியா முருங்கைகொடி வேலிருத்தி
கருமத்தை கொடிக்கள்ளி திருகுகள்ளி பெருக்கு
வதளியே வெள்வேறே கட்டுச்சாம்பல்
வகைக்குநான் படிபடியாய் பாண்டத்திட்டுக்
கதலியே யானைநீர் குதிரைநீரும்
கழுதைநீர் ஒட்டகைநீர் மனுஷநீராம்
முதலியநீர் தனியேரூர் இன்னஞ்சொல்வேன்
முற்றுமதைத் தெளிந்துவார்த்து செய்நீராமே. (288)

சீரான ஆவினீர் வெள்ளாட்டுநீரும்
சிவமாகக் கலந்தொக்கவாறுப்பச் சொல்லக்கேளு
சாரான சாம்பலுக்கு கொட்டிவாரு
சாதகமாய்க் கலக்கியெத்தத் தெளிவைவாங்கி
ஆறுக அடுப்பேற்றி யெரித்துக்காய்ச்சி
அப்பனே ரவியிலும்பாம் வகைவகைக்கு
நூறாக வகைக்குரெண்டு பலந்தான்சொன்னோம்
பூநீறு காய்ச்சுப்பு ரெண்டுபலம்போடே. (289)

பவமான கல்லுப்பு வளையலுப்பு
பாறையுப்பு வெடியுப்பு சவுட்டுப்போடு
கவமான வில்லுப்பு அட்டுப்போடு
கறியுப்பு வகைவகைக்குப் பலந்தான்ரெண்டு
சுவமான நவச்சாரம் சூடனாம்
காட்டுமல சாரமுடன் அன்னபேதி
சுவமான வினைவெல்லாம் வகைக்குரெண்டுபலமாம்
சுறிய வெடியுப்பு இருபத்தஞ்சே. (290)

அஞ்சோடு சேணமுந் திருபத்தஞ்சு
ஆகிய வகையெல்லாம் பலந்தாறக்க
தஞ்சாரு மேனிச்சாறு காயுருவிச்சாறு
தனிலரைத்துச் சணலினாரோல் வில்லிச்சாறு
அஞ்சாதே ரவிதனிலே உலரச்செய்து
அஞ்சாம் விட்டதனைப் பாண்டத்தன்னில்
அஞ்சாதே நூறுபக்கு பருக்கெடுத்து
அனைவான வீட்டுமே அடையக்கேளே. (291)

அறைகிறேன் சக்கிரமாம் பாலைச்சட்டி
அதிலேதான் சதுவாய்ப் பொருந்தவுழ
வறைகிறேன் சதுவாய்ச் சீலைசெய்து
வாதுமையின் வடிப்பெற்றி வெரிசையுமிட்டு
வறைகிறேன் தீராவகம் வருகும்வாங்கும்
வகைகேளு அப்பேபோல மின்காசனி
பிறையான சனியின்மேல் அலாகைவிட்டுப்
பிக்காளுங் கண்ணியதின் மேலேவைத்து
முறையான சக்கிரமாம் பாலைச்சட்டி
முக்கத்தப் பீங்கானில் முகம்கோக்கிவையே. (292)

வைக்கவே முத்திருந்தி வெண்ணைதீர்தான்
வருமப்பா வாங்கியதை விட்டுப்போடு
வைக்கவே வெக்கநீர் பின்வருகுமக்கே
நல்லான நீரதனை வாங்கிப்பும்
இக்கவே மறுபக்குச் சாக்கிலாட்டு
ஏறுமாரத்துமே வில்லைதட்டிக் காயவைத்து
தெக்கவே முன்போல பாண்டத்திட்டுச்
சக்கிரமாம் பாலைதனை மேலேமூடே. (293)

மூடியே அடுப்பேற்றி எரித்துகன்றாய்
முன்போலே தீராவகத்தை வாங்குவாங்கு
ஆடியே மறுபக்குச் சாக்கிலாட்டு
அப்படியே முன்போலே அரைத்துச்சட்டி
சாடியே முன்போலே பாண்டத்திட்டுச்
சக்கிரமாம் பாலையொன்று மேலேமூடிப்
போடியே அடுப்பேற்றி எரியேற்றிப்
புகைபட்டால் சட்டமிடும் மின்பாய்ந்தது
நாடியே அமுதகம் விளக்குதென்று
நலமான திராவகத்தை வாங்குவாங்கே. (294)



வாங்கியே மறுபடிக் கிப்படியேவாங்கு
வாதாக இப்படியே நீக்குதாம்வாங்கு
தேங்காதே அஞ்சாட்டும் விருதுக்குமுறை
செய்துமே அரக்கென்ற குப்பிலேயடைப்பாய்
தூங்கியே முதிர்ந்தாடி அடைத்தாயானால்
உருகிப்போம் கல்லுமுதல் லோகமெல்லாம்
வாங்கியே காதாக்கன் பாதமேபற்றி
வாதமொடு வைத்தியமுன் கைக்குள்ளாச்சே. (295)

ஆச்சென்ன விபரஞ்சொன்ன வென்றுகேட்டால்
அப்படியே வெட்டுவைச் சுண்ணம்
ஆச்சென்று வயிராய்வு உதிரவாய்வு
அதிராவாய்வு குன்மம் கத்திராவாய்வு
நீச்சென்ற தாமவாய்வு மீதவாய்வு
நீராமை வயிற்செண்டை மகோதரம்பேரானம்
தோச்சென்ற பெருவயிறு சரமமோபாண்டு
சுகிக்கவாம் வெப்பிச்சம் வாதங்களே. (296)

தாவென்ற அத்தந்த விபரிதட்குச
சாற்றியதோர் அவிழ்தத்தில் தாராபோகக்கட்டு
கூக்கென்றே பிள்ளைவிட்டால் அநுபானமறிந்து
கொண்டுடனே கேரெல்லாம் கும்பிட்டோடும்
வேச்சென்ற பாதுகாப்பு அநுபத்திருளும்
மெழுகாகுமே உபசாரங்கள் விப்பமாகும்
கோச்சென்ற நவலோக மெல்லாந்தும்
கொள்ளியே மொண்ணிரேகிதின் வாதங்களே. (297)

காரக்கட்டு.

வாதமாக் கல்லுதனில் சேலைக்கும்
வார்த்துமே தீராவகத்தில் மஞ்சணுகுத்த
வேதமாறு குதமது வெள்ளுதீயும்
வேலைதனில் வெருதார் வெட்டிப்போடும்
குதமாம் சவச்சாரக் கட்டிவாங்கித்
தோய்த்துமே தீராவகத்தில் ரவியிற்போட
காதமாம் சாரமதி கட்டிப்போகும்
காரக்க வாட்டெப்பாய் சாரத்திலே
போதமாய் கட்டியதோர் காரக்கண்ணைப்
பொட்டுடனே நாகமது கட்டிப்போமே. (298)

கட்டியதோர் காசத்தில் லோகஞ்சேரில்
கண்கொள்ளா வேதையிது கண்டுபாரு
திட்டமாய் நவலோக நவரத்னங்கள்
திராவகத்தில் தோய்த்துமே ரவியிலிட்டு
காட்டியே புடம்போட நீறிப்போகும்
கலமான பால்தெளி நிலையுங்கிங்கம்
திட்டமாய் வீரமொடு பூரஞ்சினம்
சிறப்பான கெந்தியொடு கெவுரிருடன்
தட்டியே பாஷாணம் அறுபத்துநாலுந்
தனித்தனியே கட்டியது மெழுகுமாமே. (299)

மெழுகாகும் ஒவ்வொன்றில் வேதைகோடி
விரித்துதான் சொல்லவென்றால் பனையோலையில்லை
அழுக்கதே புத்திமான் நீயேயானால்
அலையாதே பன்னூலும் பார்த்துப்பார்த்து
விழுகாதே கசத்தனிலே யிப்போல்மைந்தா
விருதான லிந்நூலே விரைந்துபாரு
கழுசாக வாதமுதல் வயித்யமுந்தேதும்
கணக்கலாய்த் திரித்திட்டால் காண்செய்வதென்னே. (300)

வாதக்கரு.

செய்வதற்கு வாதத்தின் கருவைக்கேளு
செப்பாதே அரிசியதில் விந்துநாதம்
செய்வதென்ன பூமியுட காதமொன்று
சிறப்பான பிரமகற்பம் கல்லுச்சுண்ணம்
வைவதென்ன பாறையாய் கல்லுப்பொன்று
பூரந்தான அண்டமொன்று பிண்டமொன்று
தைவதென்ன பஞ்சபூத மஞ்சமாச்சு
தன்னுள்குள் ளமைந்ததால் குருவுமாச்சு
உய்வதென்ன பழினென்ன சாரகாரம்
உலையாய் சித்தரெல்லாம் ஒழித்திட்டாரே. (301)

ஒழித்திட்டே பலமாய்ச் சொன்னாரையோ
உட்பொருளை அறியாமல் அலைந்தார்வாதி
அருத்திட்டு அண்டபிண்டம் ஆதிபந்தம்
ஆகாசம் அடிமுடியும் அரியாதிதம்
அழித்திட்டுச் சாகாது வேகாதெல்லாம்
அடங்கிநின்ற பொருளென்ன விந்துநாதம்
தெளித்திட்ட மனோன்மணித்தாய் பூரணமேயாகும்
சிவசிவா அரியவெளி அட்சரமுமாமே. (302)



அட்சரத்தை அறிந்தார்கள் சித்தரெல்லாம்
அறியாமல் உலகத்தோர் அலைந்துகெட்டார்
நிட்சயமா யிந்நூலை நிலைக்கச்சொன்னேன்
நிலைதருகும் பூரணத்தை நிலைத்துப்பாரு
அட்சரமாம் நிலைதங்கி அறிவிற்கூடி
அடங்கிநின்ற பொருளெல்லா மவுனமாச்சு
அட்சரமாம் சொல்வதற்கு ஆராலாகும்
அறிவுகுரு வல்லாது ஆசானுண்டோ
நிட்சயமாம் வாசிதன்னை மூலத்தாணில்
நிலைத்திட்டால் சுழிமுனைதான் நிசமாக்காணே. (303)

காணேநீ யிந்நூலை ஆர்க்குங்காட்டார்
காட்டினால் ரவிகோடி நரகமேது
வீணேநீ வாசிதனை அங்கென்றாணி
வேதாந்த சற்குருவை நிதம்பூசி
ஊணேநீ மூலத்தில் நந்திநந்தி
உள்ளிருந்து உன்றனக்கு உபதேசிப்பார்
ஆனென்ற ஆணவமும் மாயைநீக்கி
ஆங்கார சஞ்சிதத்தை அடித்துத்தள்ளி
காணவே கருவிகரணாதிகளைப்போக்கிக்
கண்ணாடிச் சுழிமுனையைக் கருதிப்பாரே. (304)

கருதியே குருசியுட குருவைக்கேளு
கைமுறையாய்ச் சொல்லுகிறேன் காட்டார்சித்தர்
கருதியே குருசிபொரு பலந்தானப்பா
கட்டியாய் வாங்கிமேல் சகடுபோக்கத்
துரிசியாம் கட்டிமேல் கன்னாம்புச்சீலைச்
சுற்றியே கருவங்கங் குகையிலைத்து
உருகையிலே செய்க்குறட்டால் துரிசைநீக்கி
உறுதியாய் வங்கத்தி லமிழ்த்திவாங்கே. (305)

வாங்கவே இப்படித்தா னேழுதரந்தோய்த்து
வாங்கிடவே துரிசியது வெள்ளையாகும்
நான்காக வின்னுமதில் பாகங்கேளு
காப்பாகல் அயிவிரையின் தயிலம்வாங்கி
தூங்காமல் தூங்குவார் சொற்சேட்டியும்
அரையேநீ தூங்காமல் சுகந்தக்காண்பாய்
எக்கியே துரிசியைநீ தோய்த்துத்தோய்த்து
ஏழுகால் ரவியிலிடத் திருப்பாரே. (306)

பாரேநீ முதற்றாக்தா னதம்வாங்கிப்
பாக்கான விந்துவதில் சமனாய்வாரு
தேரேநீ சூடனொரு கசகபோடு
தெளிவாகும் வாங்கியதில் வீரம்பூரம்
ஆரேநீ சுருநாவி யுரமுன்றுங்கம்
அரைமுன்னி வண்டுமுட்டை கழுநீர்வண்டு
சேரேநீ குருவண்டு புழுக்கோவெட்டும்
சிறப்பான வகைவகைக்குப் பணந்தான்றூக்கி
வாரேநீ பொடியாக்கி அதிலேபோடு
மத்திக்கக் கைவேறும் வகைதான்கேளு
வாரான ஜிக்கோலால் அரிக்கொம்பால்
மத்திக்கச் சலமாகித் தயிலமாமே. (307)

செலத்திலே முன்சொன்ன துரிசிதன்னைத்
தீர்க்கமா யுண்ணவுண்ணப் பிட்டுப்போடு
மலத்திலே ரவிதனிலே எழுநாள்போட
மல்லிகைப்பூப் போலமலர்ந்து சுன்னமாகும்
கலத்திலே கடுங்கார மெத்தக்கேளு
நவச்சாரம் வீராகெளன் நிலையதாகு
மூலத்திலே சவுக்காரச் சுன்னமொன்று
முக்கீரா வரைதுரிசின் மேல்கவசம்போடே. (308)

போட்டுமே அந்தசுன்னக் குகையில்வைத்துமூடிப்
புகழ்குகைமேல் சுண்ணம்புச் சீலைசெய்து
ஆட்டுமே பத்தெருவில் புடந்தைப்போட
அம்மம்மா என்னசொல்வேன் துரிசிச்சுன்னம்
காட்டவென்று யாருந்தான் காட்டுவாரோ
சுருவைப்போய்ச் சித்தர்கள்தான் சொல்லுவாரோ
நீட்டென்ன குருவழியே நிசமாய்ச்சொன்னேன்
நித்தம் தாம் மனோன்மணியைப் பூசைபண்ணே. (309)

துரிசிதரு.

பண்ணியே துரிசியுட குருவைத்தொட்டுப்
பாங்காக் கோடிபுடம் வாதம்பார்த்தேன்
எண்ணியே பார்த்திட்டுத் தொலையவில்லை
எடுத்ததொரு சரக்கெல்லாஞ் சுன்னமாகுந்
துண்ணியே துரிசியுட சுன்னந்தன்னைத்
தொட்டிடவே சேரைசம வெண்ணெயாகும்
பண்ணியே நவலோக மெல்லாந்தாம்
பாகுதான் வர்க்கமெல்லா மெழுகாய்ப்போகுந்
தண்ணீராஞ் சார்வாகந் தழுகமெல்லாஞ்
சவலேபோ முபாசங்க ளிப்பயமே. (310)



இப்பமாத் சூதமெல்லா மணியுமாகும்
என்மக்காள் குளிகைகட்டிச் சாரணையேசெய்யில்
பொய்யலை சடத்தோடே யாதாக்கும்
போகத்தோடே அகண்டவெளி கடந்துமேகும்
வைகுண்ட கவலோக மெல்லாந்தாம்
கலந்தோடு மன்முதலாய்த் தங்கமாமே. (311)

திலைசமுகதரு சேந்தூரம்.

தங்கமென்ற நிலைமுகமாங் குருசெந்தூரந்
சாத்திநேன் கோவெல்லாந் தனிப்பொடியாகப்
பொங்கமாய் நவலோகந் தங்கமாகப்
புகலுகிறேன் அரியம் பலந்தானென்று
தங்கமாய்த் திரிணமேல் நெருப்பின் சாற்றில்
காரியத் தனைபுருக்கிச் சாய்க்கக்கட்டும்
உக்கவே காரீயம் குகையிலிட்டு
உருகுமப்போ கெந்திமொரு பலந்தான்போடு
கக்கமாஞ் செவரிநீர் கட்டிப்போடு
கலந்துருக்கி ஒன்றாகக் கல்வத்தாட்டே. (312)

ஊட்டியே தாம்பிரந்தான் பலந்தானென்று
உயர்ந்த செய்துகட்டுங் கெந்தகந்தானென்று
தாட்டியே குமரியுட சாற்றாலாட்டித்
தாமிரத்தின் மேல்பூசிப் புடத்தைப்போட்டு
ஊட்டியே புடமதனை யறிந்துபாரு
உத்தமமாய் நொறுக்கியது பற்பமாகும்
தீட்டியே கல்வத்தி லிட்டுக்கேளு
சிறுகன்றும் நாகமொரு பலந்தான்வாங்கு
மூட்டியே மிருப்பைநெய்யில் சாரம்போடு
முவாறு தரஞ்சாய்த்துக் கொண்டுநீயும்
ஆட்டியே செயநீர் கொருநாழிகை
அதிகமாம் நாகமது கட்டிப்போமே. (313)

கட்டியே நாகமின்று உருகும்போது
காக்கவே சூதமொரு பலத்தைவிட்டுத்
தொட்டியே சேர்ந்திதான்று யுருகும்போது
செயமான மால்தேவி பலந்தான்போடு
வெட்டியே வருத்ததுன்றுக் கல்வத்திட்டு
வெள்ளைக்கம் பலமொன்று குகையிலிட்டுருக்கி
அட்டியே ஆடாவின் தொடைச்சாற்றில்
அப்பணே மெழுதா முருக்கிச்சபமே. (314)

சாய்க்கவே வெள்ளக்கம் நொறுக்கிப்போகும்
சாரான குளையிட்டு உருகும்போது
வாய்க்கவே மனோசிலையும் பலந்தானொன்று
வளமான செயநீரால் கட்டிப்போடு
சாய்க்கவே யுருக்கியொன்றுக் கல்வத்திட்டுத்
தங்கமொரு பலங்கூட வுருகும்போது
ஆய்க்கவே சாதிலிங்கம் பலந்தானொன்று
அதிலிட்டு உருகும்போ தருந்தங்கம்
ஆக்கமா யிவையெல்லாக் கல்வத்திட்டு
அப்பனே நவநீதப் பலந்தானொன்றே. (315)

பலமான பஞ்சமுகச் சாக்குரோட்டி
பாங்கான திசைமுகமாக் குருவுமாக்கு
பிலமான குருவோடே பன்னிரண்டாக்கு
பேசாதே பன்னிரண்டாந் திட்சையாக்கு
மூலமாங் குருவென்ன சொல்லக்கேளு
முப்பூவின் குருவதிலே கிழக்கிப்போடு
பெலமாக விவையெல்லாஞ் சேர்த்துறுக்கிப்
பேரான வெடியுப்பு நீராலாட்டே. (316)

ஆட்டியே காரசாரம் வில்லைதட்டி
அப்பனே காய்ந்தபின்பு அகலிலிட்டுத்
தீட்டியே சீலைமடி வில்லைசெய்து
சிறுபுடமாய்ப் போட்டெடுத்துக் கல்வத்திட்டு
காட்டியே பொற்றலையின் சாற்றினாலே
காரசாரம் ஆட்டிமுன்போல் புடத்தைப்போடு
காட்டியே பிள்ளைச்சாறு நாகதாளைச்சாறு
கலந்தொன்றாய் ஆட்டிமுன்போல் புடத்தைப்போடு
காட்டியே சாத்திரத்தோர் கானதாக
நலமாக ஆட்டிமுன்போல் புடத்தைப்போடே. (317)

புடம்போட்டு எடுத்ததனைக் கல்வத்திட்டுப்
புகழ்முருக்கம் பூவோடு செம்பரத்தைப்பூவும்
குடம்போடு மாதளம்பூ கற்றுழைப்பூவும்
குலாமல்லிச் சாறோடு வெள்ளைவெச்சாறும்
கடம்போடு பன்னிரண்டு சாமந்தானும்
கைபுளைபா யரைத்துமே தாராய்ப்பண்ணி
அடம்போடு காசியென்ற மேருக்கேற்றி
அழகாக வாலுலையில் வைத்திடாயே. (318)



வைத்துமே றுத்தியும் பன்னிரண்டுசாமம்
வளமாக எரித்திட்டு ஆறிப்பின்பு
மெத்தவே குப்பியைமீ பிப்பாலனைத்து
ஆத்தாட்டும் வடிதானதும் பூசைபண்ணு
உய்த்துமே கங்கைநதி கணபதிக்கும் பூசை
உற்றியாய்ச் செய்துகுப்பி உடைத்துப்பாரு
பத்துமே செந்தூர மென்னசொல்வேன்
பரிதியென்ன கண்கூசிப் பார்க்கப்போமே. (319)

போமென்ற செந்தூரம் கவலோகத்தில்
போட்டிடவே பத்தரையே மாற்றுக்காணும்
நாமென்ற செந்தூர மதுபானத்தில்
நாற்பதுநாள் மண்டலமே கொள்ளும்போது
போமென்ற நாலாயி ரத்தாறுநூற்றெட்டுப்
பொல்லாத நோயெல்லாம் பொடியாய்ப்போகும்
கோமென்ற பதினெட்டுக் குஷ்டரோகம்
குன்மமொடு திரந்தியமா யாப்புச்சூலை
வாமென்ற பாண்டுகா மாலைசோகை
வளர்குன்மந் சுத்திபித்த மாண்டுபோமே. (320)

மாண்டுபோகு சன்னிசார் கோசகாசம்
வாதபித்த சிலேற்பனத்தில் வந்தநோயெல்லாம்
மாண்டுமே கண்காணு தோடிப்போகு
மண்டலத்தில் காயசித்தி கூறுக்கோமெத்த
காண்டிபோக் கற்பமின்னும் வேறேயுண்டோ
கைப்புடனே புளிப்புந்தள் பத்தியமாயுண்டு
ஆண்டபோர் செந்தூர வேகமெத்த
ஆருக்கான் சொல்லார்க ளறிந்துபாரே. (321)

தாமிர சுத்தி.

அறிந்துமே தாமிரத்தின் சுத்திகேளு
அறிதப்பா சொல்லுகிறேன் தகடுவாங்கிப்
பறிந்துப்பார் பழச்சாறும் புளியின்சாறும்
பசுவினுட கோமயத்தில் பத்துநாளுறிப்
பொறித்துதா னெடுத்ததனைப் புளியிட்டுத்தேய்த்துப்
புளிதனைக் கழுத்துநாய்க் கொட்டாண்பட்டை
செறித்துதா னிடித்ததனைப் பொதிந்துசெம்பீற்
திறமாகப் புடம்போட்டு எடுத்துக்கொள்ளே. (322)

எடுத்துமே அகத்தியுட பழம்புச்சாறும்
இம்பான முருக்கிலைச்சாறு காய்ப்பச்சாறும்
கடுத்துமே கொன்னைச்சாறு தேசிச்சாறும்
கலந்தொன்றாய் ஒருகலசந் தன்னில்வாரு
உடுத்துமே உப்பூவும் ஒருபலமேபோட்டு
உத்தமனே குண்டுமணி அரைத்துப்பூசு
கடுத்துமே தேசிக்காயளவுபோடு
கலக்கியே தாமிரத்தை உருக்கிச்சாயே. (323)

சாய்க்கவே வெவ்வேறு பத்துமுறைசாய்ப்பாய்
தாமிரந்தான் சுத்தி தங்கமேபோலாம்
ஆய்க்கவே வேதையிட்டால் அறுமனைந்து
அயச்செம்பு நாலில்வெள்ளி ஆறச்சேர்க்க
மாய்க்கவே மாற்றென்ன ஆறரையும்
மயங்காது தாமிரத்திற் சுத்திசொன்னது
தோய்க்கவே தாமிரத்திற் செய்முறைகளெல்லாம்
சுத்திசெய்ய மெத்தநன்று சுருக்கம்பாரே. (324)

சுருக்கான சூதபற்பஞ் சொல்லக்கேளு
சூதமது ஒருபலந்தான் கல்வத்திட்டு
அருக்காக அண்டமாங் கொட்டையுடதயிலம்
வார்த்தியே சூதத்தில் விட்டுஆட்ட
இறுக்காகச் சூதமது கவனிப்போலாம்
எடுத்துமே கல்வத்தில் விட்டுக்கேளு
மறுக்காக மிடந்திரும் சாண்முளிச்சாறு
மாதேவிக் கிழங்குச்சாறு வெவ்வேறுக்கம்பாவே. (325)

பாவேறி வகைவகைக்குச் சாமமட்டு
பார்க்காக வில்லைதட்டிக் காயவைத்துக்
கோலியே பகலிட்டு மேல்கலந்தான்மூடி
சூத்துடமாய்ப் புடம்போடச் சூதம்நீயும்
ஆலமே அமையாய்ப் போலம்பற்பம்
ஆக்காமேப் பூசைபண்ணி எடுத்துக்கொண்டு
பாவென்ற பகைவிட்டதால் நாலொன்றாக்குப்
பின்வெல்லந் தன்னோடே பத்தியமாய்க்கொள்ளே. (326)



நாகபற்பம்.

கொள்ளவே நாகபற்பம் வாய்வோடு
குன்மமது சேவல்லாக சுறக்கேளு
கொள்ளநீவ சிரந்திருக்கம் வாய்வுருகி
கூறரிய அரையாப்புச் சூன்மமட்டு
மெள்ளவே சேரப்பல வேறுபட்டோடும்
விருதுசொன்ன வசித்தியத்தை விரைந்துபாரு
உள்ளமட சூதபற்பஞ் சொல்லிப்போட்டேன்
உத்தமனே தங்கமென்ற தாயைச்சேர்த்துக்
கள்ளமில்லை வையோகம் பத்துக்கொண்டு
காட்டிடவே மாற்றுது கனகமாமே. (327)

பாஷாணக்கட்டு.

கனகமாம் வெள்ளிக்கு வெள்ளைப்பாஷாணங்
கட்டுக்குச் சூட்சமாங் கருதிக்கேளு
கனகமாம் பாஷாணக் கட்டுவைக்கக்
கருதியே வெள்ளாவி வேகும்போது
மனகமாம் வெள்ளாவிச் சீலைவைத்து
வாக்கிடவே என்றியம்பக்குச் சுத்தியாகுந்
கணக்கவே பிராமம்பட்டுத் தயிலம்வாக்கிச்
சேருக்கிடவே கட்டுப்பது சுத்தியாமே. (328)

சுத்தியாம் வெள்ளைருகு சவுக்காரம்வெல்லந்
சுகமாக சேர்த்து அரைத்துக்கொண்டு
புத்தியாய்ப் பாஷாணக் கட்டுமேலே
பொதிந்துநீ தாமிரத்தின் குகையில்வைத்துச்
சித்திரா மேலுமந்தச் சில்லால்மூடி
சீலைசெய்து குக்குடமாம் புடத்திற்போட்டு
புத்தியாய் தெளிபதம் பனித்துபோற்று
புகையாது பாஷாணங் கட்டிப்போமே. (329)

கட்டியே உருக்கியிது மணிபோலாகும்
கசடற்ற செம்பிலே பார்த்துக்கொண்டு
முட்டிடவே வெள்ளியா மெழுகுசெய்ய
முறைகேளு மூப்பன்றி மெய்யைவாக்கித்
தட்டியே வெண்கருவுஞ் சவுக்காரமிப்பாதும்
சாதிக்கச் சலமாகுந் தன்னைவாக்கி
கட்டியே மூப்பன்றி மெய்யோடொக்கக்
கலந்துமே பாஷாணங் காண்டியிலேவைத்து
முட்டியே ஒருசாமஞ் சுருக்குப்போடு
மெழுகாகும் பூசைபண்ணி எடுத்துக்கொள்ளே. (330)

எடுத்துமே வேதைவிட்டால் பன்னிரண்டுமாற்று
கட்டியே வெகுதார மோலிப்பா
எடுத்துமே வாதமென்ன வைத்தியத்தைப்பாரு
என்மகனே மோட்சமதிக் கிடமாம்பாரு
அடுக்குமே கட்டியதோர் பாஷாணந்தன்னை
அனுபானஞ் சரக்கெருக்குக் கஷாயந்தன்னில்
கொடுத்திடவே சரமென்ற தோஷமெட்டுங்
குடிபோகும் வாதசன்னி தொண்ணூற்றாறு
மடித்துமே கிட்டாது ஓடிப்போகும்
மறைகிறேன் பாஷாண மதிதங்கானே. (331)

சாதிலிங்கக் கட்டு.

காணென்ற சாதிலிங்கக் கட்டுக்கேளு
கருதியே கெடிங்கம்பி விளக்கமாக்கிப்
பாவென்ற பலமொன்று அயக்காண்டியிட்டுப்
பழச்சாறு முலைப்பாலுஞ் சுருக்குத்தாக்கு
கோவென்ற ஒருசாமஞ் சுருக்குத்தாக்கு
கொம்புத்தேன் ஒருசாமஞ் சுருக்குத்தாக்கு
ஏவென்ற லிங்கமது சுத்திபாரு
மெடுத்துமது அயக்காண்டி தன்னிலேயே. (332)

வைத்துமே இஞ்சிரசி பழுபாகற்சாறும்
வகைவகைக்கு ஒருசாமஞ் சுருக்குமிட்டு
ஐத்துமே அரப்பொடியைப் பழச்சாறுவிட்டு
அரைத்ததங்க லிங்கத்தின் மேலேபூசி
உய்த்துமே பேய்க்குமட்டிக் காய்க்குள்வைத்து
ஒருபுடந்தான் போட்டெடுக்க முழுக்கட்டாச்சு
தைத்துமே சன்னிசர தோஷமெல்லாஞ்
சண்ணுமே தொண்ணூற்றெட்டாம் வாதஞ்
சித்துமே மெழுகுசெய்ய வேணுமென்றால்
செவ்வகத்தில் பூப்பட்டை பிடித்துச்சாறு
பத்துமே பன்றிபுடம் வெய்புங்கட்டிப்
பாங்காகச் சுருக்கிடவே மெழுகுமாமே. (333)

மெழுகெடுத்து நவலோகந் தன்னிலே
மேதினியில் பத்தரையே மாற்றுக்காணுங்
கழுகெடுத்த மெழுகிலொரு பணத்தூணனில்
சன்னிசரந் தொண்ணூற்று ஆறும்போகுந்
தெளிவாறு மரிதாரந் தன்னைவாங்கித்
தேசிநீர் சுண்ணாம்பு லேழுசத்திசெய்து
எளிதான வோட்டிலிட்டு அடுப்பிலேற்றி
யிருசாமங் காக்கைச்சாறு சுருக்குத்தாக்கே. (334)



தாக்கிடவே அரிதாரங் கட்டிப்போகுந்
சன்னிசர தோஷமொடு க்ஷயமீகாசஞ்
சேர்க்கிடவே அரையாப்பு அழுகண்ணிகிரந்தி
சூலையொடு பதினெட்டுக் குஷ்டம்வாய்வுபோகுந்
தாக்கிடவே செந்தூரஞ் செய்யக்கேளு
சத்திசெய்த சாரணைவேர் குக்கில்ரெண்டு
மோக்கிடவே முருங்கைச்சாறு வாய்நீராது
மறைத்துமால் தேவிக்கு அருகுபூட்டிப்
போக்கான காவிமண் சீலையோடு
பொதிந்துமே குக்குடத்திற் போட்டுவாங்கே. (335)

போட்டெடுக்கச் செந்தூரம் அருணன்போலாம்
பூட்டிடவே கனலோகம் பத்துமாற்று
வாட்டெடுத்து காணொன்றுக் கனுபானத்தில்
பனைவிடைதான் மண்டலமே கொண்டாயானால்
காட்டெடுத்த நோயெல்லாம் ஓடிப்போகுங்
காயசித்தாம் குருநாட்டிச் செய்துபாரு
ஊட்டெடுத்த காரிய பற்பங்கேளு
அ[illegible]புகிறேன் காரியந் தன்னைவாங்கே. (336)

வாங்கியே [illegible]ன்னெட்டுப் பலந்தானுஞ்சில்
வகையாக[illegible] முருக்கிச்சாய்க்கத்
தாங்கியே காரிய[illegible] சுத்தியாகுந்
தகடாக[illegible]ன்றிமிலே தட்டிக்கொண்டு
பாங்கியே பத்திரட்டி இலையரைத்துப்
பக்குவமாய் பொதிந்துமேற் சீலைசெய்து
ஓங்கியே புடமிடவே வங்கமீறும்
அப்பனே மறுபடியும் எடுத்துக்கொண்டு
தாங்கியே சத்திசா ரணையரைத்துச்
சார்வாக முன்போல பொதிந்திடாயே. (337)

காரீயபற்பம்.

பொதிந்துமே புடமுன்றிற் காரீயபற்பம்
புதுமையென்ன தும்பைப்பூ நீறாவாது
அதிக்குமே பலபத்தை அனுபானத்தில்
அறிக்குன்ன வாதசன்னி க்ஷயமீகாசஞ்
கதிக்கவிதாரு தேகத்திற் கடுப்புகுத்தல்
கடுதான நோயெல்லாங் காணுதோடுஞ்
செதிக்கமுக்க பற்பத்திற் பரிசுகஞ்சேர்த்து
செயநீர் வாட்டியே புடந்தைப்போடு
கதிக்கமுத்த குருவாகும் வேதையாகுங்
காயசித்தாம் காரிய பற்பந்தானே. (338)

பற்பத்தில் வெருகடினாத் தாம்பரபற்பம்
பண்ணினால் பிளவையாகரு சித்தியாகும்
அற்பமென்று தாண்ணாதே தாம்பரத்தன்னில்
அருகமுத்னைத் தகடல்லால் கல்லிவைத்தி
சொற்பான கருக்குதன் தீ மனியமைத்துக்
கொள்ளிலையின் சாற்றிலே வைக்கிக்கொண்டு
சற்பமா மருள்சாறுக் கேசிக்கிருக்
கலந்ததிலே தாமிரத்தைக் காய்ச்சித்தீரேயே, (339)

தோய்க்கவே வழுதாரு சத்தியாகுஞ்
சொல்லரிய ஆதாளி கொண்டுவந்து
பொத்தியே அரைத்ததனைத் தாமிரத்திற்பொதிந்து
புகழாக ரவியுலர்த்தி கண்ணாம்புக்கிலே
நோத்தியே பெரியதொரு புடத்தைப்போடு
சொல்லரிய தாமிரந்தான் வெண்மையேத்த
சாத்தியே வெள்ளீயம் முன்னிலாக்கி
நல்லான வெள்ளொருக்கின் பாலாலாட்டிட (340)

ஆட்டியே தகட்டின்மே லரைத்தப்பூசி
அப்பனே உலர்த்தியின்மேற் சுண்ணாம்புச்சிலே
ஆட்டியே செய்துமுன்போற் புடத்தைப்போடு
ஆத்தாட்கும் வசிகருக்கும் பூசைபண்ணு
தாட்டிகந்தா பிரபற்ப மென்னசொல்வேன்
சங்குபோல் நீறியது தங்காமாகுக்
தேட்டென்ன சித்தர்கள்தான் சொல்லுவாரோ
செகத்திலெந்தன் மிருக்காய்ச் செப்பினேன்பாரு
காட்டாதே ஒருவருக்குங் கைமுறைதப்பா
காட்டினால் கடைநாகில் மாறுவாயே. (341)

மாலாதே பெண்மணியே சொல்லக்கேளு
மைத்தான பற்பத்தைப் பதனம்பண்ணு
சேனான குருமொரு குழுஞ்சகப்பா
குவிப்பான பற்பமொரு குழுஞ்சபோட்டு
தேனான் வெண்சருவும் வர்க்கப்பா ஒரு
சேர்த்தாட்ச் குருமது விளைந்தபோதும்
வேனோனி வில்லிதட்டி அகல்விட்டு
மேல்மூடிச் சீலைசெய்து குக்குடத்திற்புடம்
கோனான குருமொரு தாமிரபற்பம்
கொடுத்தான சன்மார்க் குருவுமாச்சே. (342)



குருவெடுத்து மைலோகத் தன்னிலேயக்
குறையாது பத்தரையே மாற்றுக்காணும்
பருவான சரக்கெல்லாஞ் சுன்னமாமுன்
பற்பத்திற் பண்ணிடைதான் அனுபானத்துன்னிச்
செரிவான மண்டலந்தான் கொண்டாயானால்
தீராத குன்மமொடு வாயுகுன்மம்
அருவருக்க சத்தியமாய் பாய்ப்புக்குட்டம்
ஆகாத கசரோகம் அத்திரவாய்வு
இருக்கொடுத்த பலதோனியுந் தீர்ந்துபோகும்
தீர்க்கமாஞ் காயமது சித்தியாமே. (343)

சித்தியாம் நாகத்திற் செந்தூரபற்பஞ்
செப்புகிறேன் மானுக்கா தெளிந்துகேளு
பக்தியே சிறுகன்று தலையாலந்தான்பத்துப்
பாக்களை இதுப்பையெடுத்துச் சாரம்போட்டு
முத்தியாம் கூவமு தித்தாலைச்சாய்த்த
புனையான நாகமது சுத்தியாகும்
சித்தியாம் ஆடாதோடை மூலிச்சாறுஞ்
செயநீருஞ் சேர்த்ததிலே யோழதாம்சாயே. (344)

சாய்க்கவே தாவனை கட்டிப்போகும்
அருமான உலகவல்லி பிலியிகொடு
ஆய்க்கவே நீருமுன் நெருப்புகைட்டி
அரைத்துமே கவசமாய்ச் செய்துலர்த்தி
ஆய்த்துமே பெரியதொரு புடத்திற்போட
அப்பனே நாகமது நீறிப்போகும்
காய்க்கவே சாடிகட்டி நின்றதானால்
கர்ப்பூர வெற்றிலைச்சாறு விட்டிதிஞ்சான்சாறும்
ஆய்க்கவே கல்வத்தி லரைத்துகன்றாய்
அப்பனே வில்லைதட்டிப் புடத்தைப்போடே (345)

புடம்போட நாகபற்பம் என்னசொல்வேன்
நீராடி தாமரைப் பூசைபண்ணி யெடுத்துக்கொண்டு
குடம்போடு அனுபான மறிந்துகொள்ளக்
குன்மமொடு சுசரோகம் காசநோவு
நடம்போடு பாண்டுகர மாலைசோகை
சொல்லரிய மேகமொடு சுவாசகாசம்
படம்போடு சூலைமா மந்தாரகாசம்
வாட்டமொடு குத்திருமல் புகைச்சல்மேகம்
இடம்போகி உள்மூலம் பிரமேகதுக்கில்
தீராத சுசரோகந் தீருமெனவே. (346)

என்னவே சூடல்வாதக் குடற்புரட்டு
　　அனைவித்தத் தாழாத இருமல்வாய்வு
தன்னையடாய்ச் சொன்னதொரு வியாதியெல்லாம்
　　சாடாது காசப்பற்பம் கொண்டபோது
சொன்னதொரு கட்டியதோர் நாகந்தன்னிற்
　　சூதமிட்டுத் தங்கமிட்டுச் செந்தூரமிட்டுக்
கண்றானை குடமக்கிச் சாற்றாலாட்டிக்
　　காசியென்ற வாலுகையின் மேருக்கேற்றே. (347)

ஏற்றியே பன்னிரண்டு சாமந்தீட்டி
　　எடுத்துமே ஆத்தாளைப் பூசைபண்ணிப்
பார்த்துமே கவலைசகம் பத்துக்கொண்டு
　　பரிசிக்கப் பதினாறு மாற்றுக்காறும்
ஆத்துமே அனுபானத் தோடேகண்டால்
　　ஆகாத சோவெல்லா மகன்றுபோகும்
காத்துமே மண்டலந்தான் கொண்டாயானால்
　　காயத்துக் கழிவேது கற்பாந்தமாமே. (348)

கற்பமென்ன விதுவெல்லாம் கற்பமல்ல
　　காயசித்திக் கேற்றபற்பங் காட்டார்சித்தர்
சொற்பனமாய்ச் செய்யவென்று சொல்லொன்றாது
　　சொன்றானும் கருமறைத்துச் சொல்லப்போகா
அற்பமென்று கைபொருளைச் செலவுசெய்து
　　அலைந்துகெட்டுப் போவார்க ளதிலைப்பா
தப்பில்லாச் சேதியென்று பிள்ளைகளுக்காகச்
　　சாகாத கற்பத்தைச் சாற்றுவேனே. (349)

சாற்றிய வ்திரீசாதி வார்க்கமதாய்
　　தன்னையறிந்து முதற்பரமாம் காசம்வாங்கிச்
சேத்துமே கற்பூரம் பொடித்துப்போட்டுச்
　　செவ்வாருத் தெளிவதிலே சமனாய்விட்டு
சேத்துமே காலொன்று கழஞ்சவீதம்
　　செப்பற்பக் குருபற்பஞ் சேர்த்துக்கொண்டு
சாத்திரிய மண்டலத்தில் தேகம்பொன்றாய்
　　சத்தியமாய்ச் சொல்லிவிட்டேன் சாவில்லைதானே. (350)



இல்லையே வயதென்ற பேரும்போச்சு
　　இறந்துபோ பானென்றும் வந்துவென்று
மல்லவே செய்திருந் காயானமென்று
　　மப்பனே மத்தியா பானமென்றுந்
சொல்லவே ஆயிரத்தெண் மருக்குள்ளே
　　சிறந்திருந்த பூவென்று மதியமிர்தமென்றுந்
சொல்லாதே சாகாது வேகாதென்றுந்
　　சித்தர்களுதான் பூசிக்கும் வாமமென்றும்
வல்லவே யிதைவிட்டு வெளியேகொண்டு
　　வகையறியா மாண்டார்க ளநேகர்தானே. (351)

மாளாமற் சொன்னதொரு கற்பங்கேளு
　　மனதுத்தவைத்த வழலையுட கருவைக்கேளு
மாளாத மதியமிர்தம் பூரணந்தானப்பா
　　மயங்காதே கண்டத்தில் வழலைதன்னை
மாளாதே பீங்கானில் வேறேவாங்கி
　　வளமான கற்பூரம் பொடித்துப்போட்டு
மாளாமல் பொருமியது வெள்ளையுப்பாம்
　　மைத்தனே கல்வத்தி லிட்டுக்கேளு
மாளாதே கல்லுப்பு பருத்திப்புப்பு
　　வகைசமனாய்க் கொண்டுசெப்பி நீராலாட்டி
மாளாதே வில்லைதட்டி ரவியிற்காய்ந்து
　　வளமான அந்தசன்னக் குகையிற்கேளே. (352)

குகைதனிலே வீரமொடு புழுகுபூரங்
　　குருவண்டு கருநாவி உரமுஞ்சூதம்
வகையாகச் சிப்பிநீர் தன்றலாட்டி
　　வழலையென்ற வில்லையின்மே லங்கிபூட்டி
அகையாத அந்தசன்னக் குகைக்குட்பூசி
　　அதற்குள்ளே வள்ளையென்ற வில்லைவைத்துத்
தொகையாக மேற்சன்ன மிட்டுமூடிச்
　　சுத்தியே காடையொரு புடத்தைப்போடு
முகையாக முப்பூவின் வள்ளையாச்சு
　　முறையோடே இப்படிநீ ஐந்துதரம்போடே. (353)

போடவே வழலையென்ற கன்மமாச்சு
புத்திகெட்ட வாதிகளே சித்தர்சொல்லார்
ஆடவே நாதாக்கள் ஆட்டெல்லாந்தான்
அம்மம்மா வழலைவிட்டால் வேறேயுண்டோ
போடென்ற அடிமுடியுங் காரசாரம்
போரான அண்டபிண்டம் பிரமகற்பம்
வாடென்ற எரியென்றும் பாறையென்று
மதயானைக் கல்லென்றும் வீரமென்றும்
ஆடவே சொன்னதெல்லாம் வித்துநாத
மதையல்லால் வேறொன்று மறியேன்பாரே. (354)

பாரென்ற நாதத்தில் வித்துபுக்கிப்
பாங்கான பிருதிவியு மப்புமாய்வும்
ஆரென்ற இவருந்தான் சேர்ந்ததாலே
அருவுருவாய் ஐங்கோலப் பிண்டமாச்சு
சாரென்ற வழலையென்று முப்பூவென்றுஞ்
சவுக்கார குருவென்று பிதற்கேபோராம்
பாரென்ற கோசபீச பிதற்கேபோராம்
பஞ்சபூதச் சாரமென்று பிதற்கேபோராம்
பாரெங்கு மிதைமறைத்துச் சித்தரெல்லாம்
பலபல்லாய் நூல்தோறும் பாடினாரே. (355)

பாடினா ரொன்றாகில் வெளியாய்ச்சொன்னேன்
பதினெட்டுப் பேருமென்னைப் பகைத்திட்டார்கள்
விடியே சொன்னதொரு வழலைப்போக்கு
வெவ்வேறே யென்றுசொல்லி மலைக்கவேண்டாம்
பாடியதோர் நாதவித்தில் வழலையாகும்
பரிவான பிண்டத்தால் வழலையாகும்
ஆடியதோ ரடிமுடியும் வழலையாகு
மத்தியொடு மாமிசமும் வழலையாகும்
ஆடியே வழலைகொட்டு வாதம்பாரு
அலையாதே கற்பத்தை உண்டிடுமே. (356)

தேறவே ரசவாதஞ் சிவசொத்தப்பா
செப்பாதே பொருள்தனையே இச்சிக்காதே
ஆறவே செய்தாலும் பாத்துக்கிந்த
அதிவுருகு போதத்தி லடங்கிநில்லு



பாருநீ பரமாய்த் திரிந்தாயானால்
பேரியார் அவனுனக்கு வாதமேது
கூறுநான் வாதமோடி ஞானமொன்றில்
குருபதத்தைப் போற்றிசெய்யி லறிவிற்கூடும்
வீறுகாண் நூலில் வெளியாய்ச்சொன்னேன்
விண்டிட்டால் விண்ணிலிடி விழுக்கும்பாரே. (357)

வெள்ளெருக்குமுனி.

வீறான வறிவுக்கு எறிவையுண்ணி
வேதாந்த வாலைப்பத்தா னித்தம்பூசி
மாளாதே யோகசித்தி அஷ்டமாசித்தி
வசமாக வெள்ளெருக்கு தன்னைப்பார்த்து
மாளாதே அதனுடைய மூலிவாங்கி
மயங்காதே வகையென்ன கிர்கள்பூசம்
ஆனாதே மூலியென்ற வேருமதை
அடிமூலங் கண்டன்று வெட்டிச்சோதி
கேளேநீ யானிவேர் தானிலப்பா
இறுக்கதுவும் லிங்கமப்பா விருக்கும்பாரே. (358)

இருக்குமதை வெண்காவல் பொலியும்பொங்க
விட்டுமே தூபதீப நெய்வேத்தியத்தோடு
கருக்குமே கன்னிநூல் காப்புக்கட்டிக்
கருதியே யிறுக்குதனை வேறேவாங்கி
விருக்குமே விநாயகன்போல் பண்ணிக்கொண்டு
மீதுள்ள வேரையெல்லாம் வெவ்வேறேகுளிசம்
முருக்கவே செய்துநீ தம்பனமும்வசிய
மோகனமுச் சாடனமு முறையாய்ச்செய்யே. (359)

செய்துமே வெவ்வேறே வைத்துக்கொண்டால்
செகமோகந் தம்பனமும் வசியசித்தி
செய்துமே எட்டெட்டுஞ் சித்தியாகும்
சிறுமான அடிமூல விநாயகனைக்கேளு
கொய்துமே குறைபடாத் தலையணையூடு
கொண்டுவந்து குழிவெட்டித் தாபித்துக்கொண்டு
உய்துமே அதின்மேலே மண்ணிணைபோட்டு
தூங்காத பட்டினியே யிருந்துகொண்டு
[illegible]மேயாசீன மாகாளிகோட்டம்
அல்லாட்டா விக்கமே பயாணமென்று
மெய்துமே பாத்தகட்டில் கவிகோணமிட்டு
விநாயகனை வைத்துதன்மேல் பூசிக்கின்றோதே. (360)

ஓதவே ஓக்திக்அங்கங்கள் ஓம்சிவகண தேவாய ககாவென்று
ஓடிடவே லெட்சமுரு மண்டலத்தானப்பா
ஓதுவது மவுனத்தின் னெழுத்தைப்பற்றி
உத்தமனே வாசிதனை அடக்கியுள்ளே
ஓதவே சரியையொடு கிரியையார்க்கம்
உத்தமனே யோகசித்தி ஞானசித்தி
நீதறவே பெட்டெட்டுஞ் சித்தியாகுஞ்
சிவயோகம் கைக்குள்ளே சிக்கிப்போச்சே. (361)

போச்சென்ற சித்தரெல்லாம் மெச்சிக்கொண்டு
புகழ்க்துனக்குச் சகலசித்துங் கைபிசீவார்
ஆச்சென்ற சித்துக்குச் சித்தனுவாய்
அரிதான வெள்ளெருக்குச் சிவமூலியப்பா
தேச்சென்ற சிம்முனைகா ளுருஞ்சொல்வார்
சித்தர்கள்தான் செய்யுமிந்த முறையிதப்பா
காச்சென்ற வெள்ளெருக்கின் தயிலந்தன்னில்
ரசம்கூறும் கவச்சாரங் கட்டிப்போமே. (362)

போமென்ற கவச்சாரந் தன்னைவாங்கிப்
புகழான தயிலத்தில் பூசிப்பூசி
தேமென்ற எழுநாள் ரவியிலிட்டுச்
சிறுபுடமாய்ப் போட்டெடுக்கச் சாரங்கட்டும்
ஆமென்ற சாரத்தால் செயநீராகும்
அறுபத்தி நால்சரக்குங் கட்டலாகும்
ஆமென்ற சூதத்தைக் கல்வத்திட்டு
அரைத்திடத் தயிலத்தால் வில்லைதட்டிப்
போமென்ற ஓட்டிலிட்டு மேலேமூடிப்
புடம்போடச் சூதமது நீறிப்போமே. (363)

நீறியதோர் தயிலத்தில் சொல்லக்கேளு
நிசமான புழுகுகோ ரோசனையுங்கூட்டிக்
காருநீ சாரவின் பாலாலாட்டிக்
கருவென்ற சுக்கிலமுங் கூட்டிக்கொஞ்சம்
சேரேநீ தயிலத்தி லொக்கச்சேர்த்துத்
திலதமிடச் செகமெங்கும் வசியமாகும்
பாரேநீ யென்னுடைய மனதில்வைத்தால்
பாரெல்லாம் முன்வார்த்தை பலிதமாமே. (364)



தேசிவித்தை.

ஆமென்ற தேசியிலே அநேகவித்தை
அருந்தான் சொல்வார்கள் அப்பாகேளு
தாமென்ற தேசியென்ன கடைப்பிறப்புக்
கருவறியா மீனவரென்ன எழுதையென்பார்
காமென்ற வெழுபிறப்புங் கடந்துபோச்சு
காசினியில் மறுபிறவி யில்லையில்லை
தேமென்ற தேசியென்றால் சிவத்தாக்கொக்குத்
தேசிக்கும் என்றுசித்தர் செப்பினாரே. (365)

செப்பினார் தேசியுட வித்தைகேளு
திறமான பாஷாண மறுபத்திநாலு
செப்பினார் சத்திசெய்யத் தேசிநீராம்
சிறப்பான அக்கினிப் பூமியிட்டு
ஈப்பியே கல்லெடுத்துத் தெளிவைவாங்கி
நிலமாசு நீசொல்லியதோர் சரக்கெல்லாந்தான்
செப்பியே கடுகுத்தி பாருப்பாரு
செப்பிய இதைவிட்டால் செயமாகாதே. (366)

செயமாகத் தேசியுட குழம்புதன்னைச்
சிறப்பான புடபுடத்தில் தயிலம்வாங்கிக்
கயமாகுங் ஆதிய முருக்கிச்சாய்க்கக்
கட்டுமது குருவாகும் வேதைகோடி
தயமான தேசியுட மண்டைதன்னைத்
தயிலமா யிறக்கியதில் சாரம்போட்டுக்
கயமான நாகத்தை உருக்கிச்சாய்க்கக்
கட்டிப்போந் தயிலத்தில் லிங்கமெழுகாமே. (367)

மெழுகாகும் அதின்மீத்து ஆருங்காணூர்
மெய்யப்பட்டா வித்தாலே தனத்தைதனில்
தெளிவாகுங் கருங்கமுறைப் பித்துவாங்கிச்
சிறந்தபுல்லா மனக்கும்பேய்ப் பீர்க்கம்வித்துஞ்
சேர்வாக கருவேம்புத் தயிலம்வாங்கிக்
குளியாமை யோமித்தன் சுக்கிலமுங் கூட்டித்
தெளிவான பித்துடனே சேர்த்தமத்தி
திலதமிடச் சிவனுமுங் காணுரேளோ. (368)

கேளப்பா அதிலுடைய கரவினையைக்
கெடியாக உரைத்திடுவே னவையம்பிக்கவாது
வாளப்பா பெண்ணுடைய விலக்கத்தில்
வாங்கியத்தப் பொடிபூட்டித் திரியப்பண்ணி
ஆளுமே காரியந்தத் தவிலத்தனில் *
ஆளக்கன் சட்டியிலே மையெரித்தாமாகவிக்
காளுமே குறையடா பூசைக்கவர்கள்
கைவிட்ட மாதானகுருவென்பர்பிடம். (369)

ஓடுமே கவசமென்பார் நூலைக்கேட்டு
உன்னாமல் பேர் சரீரமுட்டா மாலைகளாமே
காடுமே மல்யமதையு பொன்றாத் தன்னுண்டு
கருத்திலே மீதிருத்த வேசம்பாய்
குடுமே காரியத்தல் தன்னிபுரி வரையப்பர்
உத்தமதை புனையுமாய்த் தவிலமைக்கும்
ஆடுமே செல்வகுருந் தேடிமேனாடு
உரைத்திலே திரியாத திரிக்கக்கொண்டே. (370)

திரித்துமே தேடியுடை கொழுப்பையாக்கித்
திறமாக வெய்யசுடத் திடமேற்ற
மரித்துமே அப்பமுறை மேட்டுத்திலை
மாரமுதி தெருமான மருந்தடடோடு
பிருத்துமே பிரமாக கலந்தபுரத்திலே
வெய்பிசைகடு வொரப்பிலை விடைக்கிக்கொண்டால்
தெரித்துமே தீமுகம் பார்க்கச்சொலை
தெருதிதனில் விட்டேன்ற அடைரத்தைநுட்டே. (371)

ஓட்டமே புகழ்தேடுதனால்
குடுமே கவிதைக் கேடிலெல்லாம்
மட்டில்லா கேடியோடு போட்டுசைவ
வாரணமே செய்பமென்று சுடுதாதிட்டு
தெட்டியே தேடியுடை ரக்தமையாக்கித்
திரிவருத்துமே கீழ்கையின் சுவையாருங்கட்டு
ஆட்டியே இங்காய்த் தலையாகிநாட்டு
அரைத்துமே புரட்சச பன்முமமேமே. (372)



ஆமென்ற இங்காயக் கருவைக்காரர்
ஆமியர்கள் கடையதிலே இங்காயமென்பார்
தாமென்று இங்காயப் பேருகேளு
தமிழ்பரினை கருசேர சிறுகாய்வாக்கி
ஆமென்ற கரசம்புனை மூருகாயம்
அப்பிறனை அமர்க்கதின் மேலேபூசிப்
போமென்ற மேல்பூசி உரைத்தெழுதி
பொறுமைக்கப் பேய்ச்சரையின் குழிக்கைதனிலடையே. ()

அடைத்திட்ட பிலாட்டால் தவிலமாக்கு
அதக்கிதான கேர்த்திசெத்த அப்பாகேளு
அடைத்திட்ட முத்தருவம் பிறதருவப்பாரு
ஆகரசசெய்த்துமே அமர்க்கதப்பா
அடைத்திட்ட கொண்டிடனாய் சேர்க்கேதான்
கருவாயுடனுமாக்கி கமிருவாகிப்
பிடைத்திட்ட பேர்டமப்பா இங்காயந்தான்
பேசாதே அறிசேர்த்து சொல்லார்சித்தர்
அடைத்திட்ட கருவாய்ந்த வாதமாக்க
அதிவிரத்து சித்துமிது காடையாக்கே. (374)

ஆச்சென்ற வாமிக்கச்சை சொன்னதிலெனன
ஆராய்க்கு நூல்வைகண்டு மறியவேணும்
சீச்சென்ற சித்திரத்தை பிடிக்கவேணும்
சிக்கைபட்டால் செய்யம்பேச்சை யில்லாகாது
தாச்சென்ற சரக்குவைக் இனமறியவேணும்
சத்துருவை மித்துருவை மறியவேணும்
கச்சென்ற வாதத்தில் கோசமிசை
குமிபடியும் பட்டையத்தான் குருடாப்பா
உச்சென்ற குருமுகையது செத்தாரத்தினமும்
குட்பிழுமை புகைத்திட்டம் எரிப்புத்திட்டக்
கச்சென்ற குகைத்திட்டம் கடுமுறைவிசை
கைமுறையாய் அருளர்க் கருவக்கேளே. (375)

அருமையின் பட்டுக்கிடம் உருக்கிளத்தையெல்லாம்
அதுமிசைபடுச்சாறு முகைப்பாக்கிடச்சீ
குருவான வக்கைமோடு சேர்த்தனைத் தாக்காது
பொருக்குருக்கிதை கொண்கருவைந்த கண்டுப்புசேனம்

இருவென்ன விட்டவைக்கிச் செய்யமெதச்
செந்தூரச் சிலக்கேளு சூதக்கக்தி
அருவென்ன மால்வேதி அப்பிரகந்தகம்
ஆறுகான சிலேப்பசி சிவப்புப்பேரும்
அருவென்ன விலவேழு செந்தூரக்கதி
அல்லவட்டால் செந்தூர மானதென்னே. (376)

ஆகவே செந்தூரம் வைப்புச்சொல்லக்
அப்பவே குப்பியுட முறையைக்கேளு
போகவே பூசிக் குப்பிதன்னைப்
புகழான கழுத்தளவை சீலைசெய்து
[illegible]கவே குடத்தைக்கு மேக்கழுத்தி
விருவித்தி லவட்டமாய் மைய்யதரிப்பு
சேகவே சீலைசெய்த மட்டும்போது
நீண்டிருக்கும் குப்பிவா யடைபக்கேளு
தோகையே நிமுனி மைந்தர்கட்க
கண்டிடவே சத்திப்பாய் அண்டித் தமிப்போமே. (377)

போவென்ற குப்பிக்கு அரைவகெருத்தி
போட்டுபி புதைச்சட்டி தன்னிப்பேளு
தாமென்ற மணல்போட்டு அடிகுனிபுதைனச்
சட்டியிலாய் விறகடைத்தவ முனையிலயிடு
ஆமென்ற குப்பியதில் மேல்வைக்கு
ஆதினப்பில் வன்னியெட்டி அமிழ்த்திவைப்பு
ஏமென்ற குப்பியுடன் கழுத்துமேதிம்
விருவிரப்பி வட்டெக்கிய விட்டுவைக்க
கேடுமென்ற தக்கச்செந்தூர தொடுலல்
குப்பியாய் மூடட்டுதே நிலைகவிட்டுப்பேரது
வாமென்ற எழுமலங் அராசதுவல்
வைப்பக்கல் செய்வதிரும்பி வையுமூடே. (378)

மூடிவே வாலைகயின் மேலேபோற்றி
முகிபதே ஒருவிரத்தாக நிபுரதம்
நாடிவே விருவிரப்பிற்குக் கவைநாறும்
நாலிரப்பிற்குச் சட்டிக்கி யாருமிப்ப
சாடியே விரல்நடைடை நிட்டைப்பக்கேளு
சாமிசிரம் [illegible] ன்னை நிவைரும்
காடியே புதைத்த [illegible] செல்லக்கேளு
காட்டிடே [illegible] ம் புடமொன்று சிவடையாகும்



பாடியே மூன்றெருத்தான் கவுசாரப்புடமாம்
பத்தெருத்தான் குக்குடமாம் பரிக்குடகேளு
[illegible]டியே இம்பதெரு வனமாகும்
கலமான நூறெருத்தான் செஜப்புடமாமே. (379)

படமான குகைத்திட்டம் சொல்லக்கேளு
புகழான கழுதைச்சத்தி மலறும்ரெண்டு
வடமான உமிக்கருதல் சேசட்டைமரம்பல்
வலைக்கிரண்டு பழமாகுத் மரிமண்ணீராறு
சூட்டமான தவிக்காயின் மொழாயம்விட்டுக்
குழம்பவே ஆட்டியெம்போற் குகைதான்பண்ணு
படவான மேத்சின்னு மதிலேபண்ணு
பற்றுகைக உருக்கினத்தில் பெலமாகுதே. (380)

மனமாகுந் கன்னவென்ற குறைகட்டுகல்லாம்
பேசிடுதன் அருக்கன்னைக் குகையைக்கேளு
அலமான கண்டித்தைக் சக்குபிப்பி
அண்டோடு நிவைசித்தாங் கல்வத்திட்டு
விலமான வர்க்கம்பால் தன்னுலையட்டு
விலதட்டிக் காயவைத்துப் புடத்தைப்போடு
கலமான அன்னுப்பாக் கல்வத்திட்டு
நாடிபுரை வெண்கருவும் வர்க்கம்பாலும்
உலமான கவசன்ன திருவிட்டு
வைக்கவரத்துக் குகைபின்மேல் சில்லுச்செய்து
பெலமான இதில்வைத்துப் புடத்தைப்போடப்
பெலத்துமே கடுக்கன்ன யாருமப்பாரே. (381)

பாருநீ கைமுறை சொல்லக்கேளு
பாங்கான சாக்குவகைச் சேர்த்துருக்கி
வைருமே யுருக்கினத்தான் அருக்கிரெண்டு
உத்தமனே சத்துவகை அருத்திரா
சாருநீ இப்பிபுக் கார்த்திகைமார்கழிபுக்
தையொடு உருக்கினத்தில் சத்திரக்குக்காலம்
பாருநீ மாசியொடு பங்குனி சித்திரையும்
பாங்கான வைகாசி குருமுடிக்குக்காலம்
சேருநீ ஆனியொடு ஆடிஆவணியும்
சிறப்பான புரட்டாசி செந்தூரமாமே. (382)

மாமென்ற மார்கழிதை போமொளி
மருவற்ற செயநீர மிகுந்தபரந
போமென்ற உருக்கினத்தின் குடாரிசேனந்
புகழான மால்தேவி சருக்காரநருக்கில்
வேமென்ற அண்டேசம் வெண்காரங்கூட்டி
வெடியுப்பு செயநீர லாட்டிவல்லே
காமென்ற புடம்போட்டு எடுத்துக்கொண்டு
கல்வத்தில் விட்டுப்பின் வார்க்கம்பாலும்
ஆமென்ற எலிஆனம் பாலுங்கூட்டி
அரைத்துமுன்போல் புடம்போட்டு எடுத்துக்கொண்டு
வேமென்ற ஏரண்டெண்ணெய் வாதத்தவினைக்கெய்யும்
விட்டரைத்துக் கெட்டியாய் வைத்துக்கொள்ளே. (383)

வைத்துமே சத்துவகை காடுகட்டி
மைந்தனே குடோரிவிட்டு ஏருமைக்கொம்பால்
உய்த்துமே இன்புலீ சுல்மசக்கனற்ற
உருகியே வெள்ளிபோன்போல் கனகிட்டசேம்
கைத்துமே கருவெல்லாம் வெளியாய்ச்சொன்னேன்
கருவாளி யாருக்கால் கண்டபாரு
செய்த்துமே சித்தருட னாலேயெல்லாம்
திரட்டியே ஆயிரத்தில் தெளிவாய்ச்சொன்னேன
பற்றுமே ஆயிரத்தைக் குறுக்கிநன்றாய்
பாடினேன் முந்நூற்றுச் சிமிக்கராதாளப்பா
உத்துமே கருவெல்லாம் வெட்டவெளியாக
ஒளியாமல் சத்தியமாய்ச் சொல்லிப்போட்டேன்
கைத்துமே சிறுபிள்ளை முதலாயுள்ள
கருவறியா மூடர்களும் காணுவரே. (384)

வாரான கருவையெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
வாதமொடு வயித்தியமும் வகையாய்ச்சொன்னேன்
கூரான செந்தூரங் கடுக்குகெய்க்கும்
குருமுடிக்கும் வகையெல்லாம் குறிப்பாய்ச்சொன்னேன்
வாரான அருசனமும் நிலக்குச்சொன்னேன்
வசியமொடு அப்புசித்தை யாரணமுஞ்சொன்னேன்
ஆறான ஞானமொடு ஏரியோகம்
அடங்கின்ற பூரணமும் அறியச்சொன்னேன்
தேறவே வழிபட திருவுஞ்சொன்னேன்
செப்பினேன் கருக்கடைச்சூத்திரத்தாமுற்றே. (385)

பிரமமுனி கருக்கடைச் சூத்திரம் - நடாவு

முற்றிற்று.